Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 121 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 15 2026

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 | 647-989-6298
647-748-6444 | www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோர்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபாரம் வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST
THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers @
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com
Thuyarpakirvu.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

சாவுக்கும் அழிவுக்கும்
அப்பால், பசிக்கும்
பஞ்சத்துக்கும் அப்பால்,
சுயநல வாழ்வின்
சுகபோகங்களுக்கும் அப்பால்,
ஒரு
சுதந்திரமான – கௌரவமான
வாழ்வில் காதல்கொண்டு
நிற்கும் எமது மக்களின்
இலட்சியப்பற்றை நான்
பாராட்டுகின்றேன்.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி
437 345 4203

மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

சுதந்திர விடிவுக்காக
கப்டன்
குவேனி



நீண்ட தூரம்வரை காடு மண்டிக்கிடந்தது. விரல்விட்டு எண்ணக்கூடிய குடிமனைகள். அதன் ஓரமாக பாம்பு போல் வளைந்து நெளிந்து போகும் அந்த புழுதிபடர்ந்த வீதி யோரத்தில், அந்த சிறிய கடை போராளிகளின் வரவை எதிர் பார்த்து அவர்களின் தாகம் தீர்ப்பதற்கு ஏங்கிக்கொண்டிருக்கும்.

அவர்களின் வரவைக் கண்டதும் அவளின் முகமலர்ச்சியைக் கூற முடியாது. அந்தக் கடைக்குள் சென்று ஓடி ஓடி தேநீர், அப்பம், பிட்டு... என்று அவள் நீட்டும் போது, அளவுக்கு மிஞ்சிய உபசரிப்பால் போராளிகள் செல்லமாகச் சினந்தாலும் "சாப் பிடுங்கோ... சாப்பிடுங்கோ..." என்று நச்சரித்துக் கொண் டிருப்பாள். சிலவேளைகளில், "வந்தால் நிம்மதியாகக் கதைக் கவும் விடுகிறியா?" என அதட்டலும் நடக்கும்.

இந்தச் சிறியவள்தான் எமது சுதந்திரவிடிவுக்காகத் தனது சிறுவயது முதல் அளப்பரிய வேலைகளைச் செய்துவந்தவள். இந்திய இராணுவத்தின் ஆதிக்க சுவடுகள் எமது சுதந்திர தேசத் தின் மூலை முடுக்கெல்லாம் பதிந்து இருந்த அந்த நேரத்தில்... சாதாரண மக்களதும் முவதற்கு இரு முவதற்குக்கூட பயந்த இரவுகளில், அந்தச் சிறிய கடைக்குள் எத்தனை இரவுகள் அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கு விழித்திருப்பாள்.

எத்தனை இரவுகள் "ஆமி அங்க நிக்கிது. ஆமி இங்க நிக்கிது. நீங்க வரவேண்டாம். உங்களுக்கு ஏதும் தேவையெண்டாச் சொல்லுங்கோ" என்று அவள் பாதங்கள் காட்டுக்குள் ஓடி யிருக்கும்.

இப்படிச் செயற்பட்டவள் தானும் பயிற்சி எடுத்து களத்துக்குப் போகவேணும் ஆமியோட சண்டைபிடிக்க வேணும் என்ற நெடுநாள் ஆசையால்,

அப்போது பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்த 'சாம்' அண்ணையிடம் சென்று "அண்ணை என்னை றெயினிங் குக்கு அனுப்புங்கோ" என்று விடாப்பிடியாய் நின்றாள். "உனக்கு இங்கை நிறைய வேலையிருக்கு. இப்ப நீ போக ஏலாது" என்று அவர் கூறிவிட்டார். அவருக்கு இவளை அப்போது பயிற்சிக்கு அனுப்புவதில் விருப்பமில்லை. ஏனெனில் இவளின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது. அத்தோடு இவளுக்கு அங்கு நிறைய வேலைகளும் இருந்தன.

இவள், "சரி எனக்கா போக வழி தெரியாது. நான் போய்க் காட் டுறன்" என்று சவால் விட்டதுமல்லாமல் செயலிலும் காட்டினாள்.

அவர்களின் கடைக்கு வழமை போல அன்றும் அந்த அம்பு லன்ஸ் வண்டி வந்தது. சாரதி வழமையாக அந்தக் கடையிற் சாப்பிடுபவன். அம்புலன்ஸ் அன்று வெறுமையாகத்தான் இருந் தது. சற்றுத்தூரம் சென்று, அம்புலன்ஸ் சாரதியிடம் "அண்ணை என்னை அந்தச் சந்தியிலை கொண்டுபோய் இறக்கி விடுறியளே" என்றாள்.

"தங்கச்சி இதிலை நோயாளியளை மட்டுந்தான் ஏத்தலாம்" என்று அவர் மறுத்துவிட, அவள் கெஞ்சிக்கூத்தாடி ஒருவாறு சம்மதிக்கச் செய்து ஏறிக்கொண்டாள். அந்தச் சின்னப்பறவை சுதந்திரத்தைத் தேடி வந்துவிட் டாள்.

அவளின் அன்றைய பயணம் பற்றித் தோழிகள் அடிக்கடி கேலி செய்வார்கள். "குவேனி அவசர சிகிச்சைக்குத்தானே அம்புலன் சில் வந்தாய்".

"சும்மா போங்கோடி" என தலையைச் சிலுப்பி சிரித்துக் கொள் வாள்.

குவேனி மன்னாரிலிருந்து முல்லைத்தீவு மகளிர் முகாமுக்கு வந்து சேர்ந்தாள். இவளுடன் இன்னும் இருபது பெண பிள்ளைகள் வந்தனர், மறுநாள் குவேனியைவிட மற்றவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். விம்மி விம்மி அழத்தொடங் கினாள். "என்ன ஆசையோடு நான் அங்கையிருந்து வந்த னான். என்னையும் பயிற்சிக்கு அனுப்புங்கோ". அவளது அழுகையை அடக்கப் பொறுப்பாளர் பட்டபாடு.

பயிற்சி பெறாமலே முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிது காலம் அரசியல் வேலையில் ஈடுபட்டாள். குறுகிய காலத்திற்குள் ளேயே மக்கள் இதயங்களில் நிறைந்துவிட்டாள்.

அவள் குறும்புப் பார்வை, விரிந்த தெளிவான கண்கள், அந்தத் தலை சிலுப்பல், உறுதியான தீவிர செயற்பாடுகள், அவள் மக்கள் மேல் செலுத்தும் அன்பு இவையாவும் அவள் மக்கள் உள்ளங்களில் இன்றும் அழியா இடத்தைப் பெறுவதற்குக் காரணங்களாக இருந்தன.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அவள், பயிற்சிக்காக அனுப்பப்பட்டாள். நானும் அவளும் ஒன்றாகவே பயிற்சி பெற் றோம். எந்நேரமும் என்பின்னால் "அக்காச்சி, அக்காச்சி" என குறும்புக் கதைகள் கூறிக் கொண்டே திரிவாள். பயிற்சியை திறம்படச் செய்தாள். மீண்டும் அரசியல் வேலைக்காகவே கூட்டிச் செல்லப்பட்டாள்.

"என்னக்காச்சி. பயிற்சி எடுத்திட்டு அடிபாட்டுக்கு போகலாம் எண்டு இருக்க, திரும்பவும் ஏத்திக்கொண்டு போயினம். எல்லாம் உங்களால தான் நான் மறிக்கப்பட்டனான்" எனப் பகிடியாக என்னை ஏசினாள்.

இதன்பின் அவள் அரசியல் வகுப்புக்காக அனுப்பப்படுகிறாள். குவேனிக்கு முப்பது பேர் கொண்ட குழு கொடுக்கப்பட்டது. குழு நடத்துவதிலும் படிப்பதிலும் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்தினாள். வாராவாரம் நடைபெறும் கலை நிகழ்ச்சிக ளுக்குப் பொறுப்பாகவும் தலைமை தாங்கியும் நிற்பாள். எத்தனையோ தடவை இவளின் செயற்பாடுகளைக்கண்டு நான் பிரமித்ததுண்டு.

பயிற்சி முடிந்து போராளிகள் மாவட்டம் மாவட்டமாக வேலைக ளுக்கு அனுப்பப்பட்ட போது இவளுக்கு மகளிர் முன்னணியின் நிதிப்பொறுப்பு வேலை ஒப்படைக்கப்பட்டது. எதிலும் சிக்கனத் தைக் கடைப்பிடிப்பாள். அடிக்கடி பிள்ளைகள் காசு கேட்கும் போது "இயக்கம்படும் கஸ்டம் எனக்குத்தான் தெரியும். இயக்கம் என்ன தண்ணியிலேயோ ஓடுது" என்று பகிடியாக உண்மை நிலையைக் கூறுவாள். இவள் இதைச் சொன்னதும் "உன் னிடம் காசு வாங்கிறதை விட நேரைறஞ்சித் அண்ணையிடம் வேண்டலாம் போல இருக்குது" என்று தோழிகள் கூறுவார்கள்.

இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஆர்வம். ஆர்வம் மட்டுமல்ல செயல் வடிவிலும் காட்ட வேண்டும் என்று நினைப்பவள். பகல் முழுவதும் நிறைய வேலைகள் செய்து விட்டு இரவு நேரத்தில் சென்று வாகனம் ஓட்டுவதற்கு பழகி வந்தாள்.

"மில்லர் அண்ணைக்கு அடுத்த பெண் கரும்புலி நான் தான்" என்று அடிக்கடி கூறிக்கொள் வாள். சில நாட்கள் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பொறியியல் வகுப்பிற்கு சென்று வந்தாள். சிறிது ஓய்வாக இருக்கும் வேளையில் புகைப் படக்கலை பற்றிக் கேட்டுப் படித்துக் கொண்டிருப்பாள். இவ்வாறு பல துறைகளிலும் இவளுக்கு ஆர்வம் இருந்தது.

இந்த வேளையில் இவளிடம் ஒரு பழுதடைந்த பண்ணையைத் திருத்தி அமைக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. முழுமூச்சாக நின்று குறுகிய காலத்தில் அந்தப் பண்ணையை வளமானதாக மாற்றினாள்.

இந்தப் பண்ணை வேலையின் போதுதான் ஒரு ஐயாவின் கதை மறக்க முடியாதது.

குடும்பம் மிகவும் கஸ்டப்பட்டது. நாள் வேலை செய்து அந்தக் கூலியைக் கொண்டுதான் வயிற்றுப்பசி போக்கும் குடும்பம் அது. தொடர்ந்து ஒரு மாதம் வரை வேலை செய்தார் அந்த ஐயா. அவர் செலவாளி. அரைப்பங்கு சம்பளத்தைத்தான் வீட்டிற்குக் கொடுப்பார்.

ஒரு நாள் குவேனி அந்த ஐயா வீட்டிற்குப் போய் வந்து தனக் குள்ளேயே ஏசிக்கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் ஐயாவும் வந்து சேர்ந்தார். "ஐயா இனி உங்களிடம் நான் பணம்

தரமாட்டன். உங்கடை வீட்டிலைதான் கொண்டு போய்க் குடப்பன். கொஞ்சமாவது யோசிக்கிறீங்களே ஐயா!" ஐயாவை ஏதோ ஒரு உரிமையுடன் ஏசிக்கொண்டிருந்தாள். மரத்துக்குக் கீழ் இருந்து ஐயா அழுதுவிட்டார். "எனக்குப் பிள்ளைபோல புத்தி கூறும் அளவிற்கு அப்பிள்ளையின் உணர்வைத்தான் நான் எண்ணிப் பார்க்கிறேன்", என ஐயா என்னிடம் அவள் ஏசிவிட்டுச் சென்றதும் சொன்னது என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அன்றிலிருந்து அந்த ஐயாவில் ஒரு புதிய மாற்றம். குவெனியிடம் அந்த ஐயா பெருமதிப்பும் அளப்பரிய அன்பும் வைத்திருந்தார். குவேனியும் அடிக்கடி அவர் வீட்டிற்கு சென்று வருவாள். இந்த ஐயாவின் உள்ளம் அன்று அவள் மரணம் கேட்டு பண்ணை வாசலில் கிடந்து "கு வேனி! குவேனி!" எனக் கூக்குரல் இட்டது இன்னும் என் கண்களில். ஓ! அடுத்த வீட்டு அக்காவும் அவள் மரணம் கேட்டு இன்று குவேனி என்ற பெயரில் களத்தில்...

தொடர்ந்து ஆனையிறவுப் போர் ஆரம்பமானது. இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்கூட்டியே நடைபெற்றது. வேறு வேலைகளுக்கு நின்றவர்களும் விசேட பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். இந்தவேளையில் குவேனிக்கு களத்தில் இருந்து விழுப்புண் அடைந்த போராளிகளுக்கு உணவு வழங்குவதும் பராமரிப்பதும் தொடர்பான வேலைகள் கொடுக்கப்பட்டது.

சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவளால் அமைதியாக நின்று - வேலை செய்யமுடியவில்லை . "அக்கா நான் அடிபாட்டுக்குப் போகப் போறன் எவ்வளவு நாளைக்குத் தான் என்னைச் சோதிக்கப் போறியள்". என அழுதாள். இவள் உணர்வை இனியும் கட்டுப்படுத்த முடியாது என்ற பொறுப்பாளர் "குவேனி ஏறு வாகனத்தில் அடிபாட்டிற்கு போக" குரல் கேட்டதும் தான் அவள் முகம் எப்படி மலர்ந்தது.

இவள் போய் ஒரு குழுவுடன் நிற்கின்றாள். அக்குழு கொய்யாத் தோட்டத்தில் நின்றது. அங்கு மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் குவேனியைக் கண்டுவிட்டார். "இவள் ஏன் இங்கு வந்தாள்? குவேனி உனக்குத் தரப்பட்ட வேலையை செய்து விட்டாயா? சரி உடனே நீ திரும்பிப் போ" என்று அவர் கூறிவிட்டார். எப்படி இருக்கும்? அழுகையை அடக்கிக் கொண்டு மீண்டும் தனது வேலையைச் செய்தாள். அது மட்டுமா? தோழிகள் ஒவ்வொருவரும் கேலி செய்யத் தொடங்கிவிட்டனர். "கொய்யாத்தோட்டத்தைப் பார்த்தியா? இன்னொருத்தி, "எத்தனை ஆமியை விழுத்தினாய்" என்றதும் ஓடி ஒளித்திடுவாள்.

இதன் பின்னர் மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளராக இவள் அனுப்பப்பட்டாள். இச்சிறுவயதில் இப்பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட் டாலும் அதை திறமையாகச் செய்து வந்தாள். குறுகிய மாதங்களுக்குள் மாற்றம் ஏற்படுத்தித் திறமையாகச் செய்யவேண்டுமென்று துடித்தாள்.

அவள் ஓடித்திரிந்த அதே வீதி, அவள் எத்தனையோ இரவுகள் வைத்தகண் வாங்காமற் பார்த்திருந்த அதே வீதியில் மோட்டார் சைக்கிளிற் போய்க் கொண்டிருந்தாள். கடை முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்ததாய் அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் தம்பி குமணன் கண்டு விட்டு,

"அம்மா குமுதாக்கா போறா" என்று கூற, தாய் ஓடிப்போய் வீதியைப் பார்த்தாள். மறைந்து விட்டாள் குவேனி. போனவள் திரும்பி இதால வருவாள் தானே என அந்தத் தாய் உள்ளம் காத்திருந்தது. ஆனால் அவளோ வேறு பாதையால் முகாம் திரும்பி விட்டாள். பாசத்தைவிட அவளின் கடமையுணர்வினை அம்மா புரிந்து கொண்டாள். மன்னார் மாவட்டத்திற்கு மகளிர் படையணி அடிபாட்டுக்குச் சென்றது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அவள் தன் வேலைகளுக்கிடையில் செய்து வந்தாள். அங்கு செல்லும்போது அவர்கள் வைத்திருக்கும் புதிய ஆயுதங்களைக் கையாள்வது பற்றியும் அறிந்து வருவாள்.

அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த போது மகளிர் படைப் பொறுப்பாளரிடம், "அக்கா அங்கை அடிபாடு தொடங்கினால் நாங்களும் போகலாம் தானே" எனக் கேட்டாள். அவர் சம்மதமாகப் தலையாட்டியதும் அவள் அடைந்த சந்தோசம்.

"எங்கடை இடத்திலை அடிபாடு வந்தால் அடிபடச் சொல்லியாச்சு என்று குழந்தை போலத் துள்ளிக் குதித்ததை நினைத்த போது, எங்கு தான் நின்றாலும் அடிபட வேணும் என்ற அவளது இலக்கினை அறிய முடிந்தது.

இந்த நேரத்தில் மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் மேஜர் பாரதி அங்கு வந்த போது, மகளிர் படையணியினரின் அடிபாட்டு இலக்குகளைச் சென்று பார்வையிடுவதற்கென இவர்கள் போய்க் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மன்னாரில் எதிரியின் எல்லைக்குள் பிரவேசிக்க ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொள்கிறாள்.

குவேனி இன்று எம்முடன் இல்லை . ஜீரணிக்க முடிய வில்லை. எல்லாப் போராளிகளின் வீரச்சாவுகளும் அப்படித் தான், எம்முடன் அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது போல...

அவளது முகாமில் தங்களது பிரச்சினைகளைக் கூறி அவளது அன்பு வார்த்தைகளாற் திருப்தியடைந்து செல்லும் அக்காமார், ஐயாமார், அவளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எங்கடை குவேனி வரமாட்டாளா? இல்லை வருவார்கள், குவேனியைப் போன்ற ஆயிரமாயிரம் மாவீரர்களின் கனவுகளைச் சுமந்து புதிய குவெனியாக...!

தமிழீழச் செய்திகள்



முல்லை. கேப்பாபிலவு பகுதியில் பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

01.05.2026

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பகுதியில் தங்கள் பூர்வீக காணிகளை விடுவிக்க கோரி மக்கள் வெள்ளிக்கிழமை (01) இராணுவ படைத்தலைமையகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகியுள்ள நிலையில் இந்த போராட்டத்தை முன்னிட்டு அப் பகுதியில் பொலிசார் களம் இறக்கப்பட்டுள்ளனர்.

கடல், கரை மற்றும் விவசாய நிலங்களை வாழ்வாதாரமாக நம்பியிருந்த கேப்பாபிலவு மக்கள், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்

கப்பட்டுள்ளதாகவும், தொழில் துறைகள் முடக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இன்றைய தொழிலாளர் தினத்தன்று நடைபெறவுள்ள இந்த போராட்டமானது தங்கள் பூர்வீக நிலங்களை விடுவித்து தாயக மண்ணில் வாழ அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் வலியுறுத்துகின்றனர்.

போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருப்பினும் பாதுகாப்பு செயலகம் என்ற பெயரில் மக்களின் காணிகள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 17 ஆண்டுகளாக தமது சொந்த நிலத்தில் குடியேற முடியாமல் தவித்து வருகிறோம். எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் எமது வளங்களை பயன்படுத்துகிறது.

ஆனால் நாம் வீதியில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இது எந்த வகையிலும் நியாயமல்ல" என மக்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு மக்களின் பிரதான கோரிக்கை, அவர்களுக்கு

சொந்தமான காணிகளை உடனடியாக விடுவித்து, தங்கள் மண்ணில் அமைதியாக வாழ வழிவகை செய்யப்பட வேண்டும் என்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்று மனித எலும்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது

01.05.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் ஐந்தாம் நாளான இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மூன்று மனித எலும்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்

பட்டுள்ள நிலையில், அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் அடையாளம் காணப்பட்ட மூன்று மனித எலும்புக் கூட்டு தொகுதியுடன் இதுவரையான காலப்பகுதியில்

செம்மணி மனித புதைகுழியில், 244 மனித என்புகூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 240 மனித எலும்புக் கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை முன் போராட்டம்

01.05.2026

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான தனியார் காணிகளை காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும் எனக் காணி உரிமையாளர்கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் வியாழக்கிழமை மற்றும் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

www.sangathamil.com

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் கறுப்பாடை அணிந்து விழிப்புணர்வுப் போராட்டம்

01.05.2026

திருகோணமலை - பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்துநகர் விவசாயிகள் தொழிலாளர் நாளை முன்னிட்டு வெள்ளிக்கிழமை (01) கறுப்பாடை அணிந்து, பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் திருகோணமலை கண்டி பிரதான வீதியின் முத்து நகர் சந்தியில் இடம் பெற்றது.

கடந்த பல வருடங்களாக தமது வயல்காணிக்களுக் கான தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியே இவ் விழிப்புணர்வுப் போராட்டத்தில் இடம்பெற்றது.

விவசாய காணிகளை சூரையாடி தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின்சார உற்பத்திக்காக வழங்கப்பட்டதை கண்டித்து தொழிலாளர் தினத்தை கரிநாளாக மாற்றி போராடினார்கள்.

எமது நிலம் எமக்கு வேண்டும், விவசாயிகளுக்கு நீதி வேண்டும், நலிவடைந்த உழவருக்கு IMF நீதி பெற்றுத்தா, முத்து நகர் விவசாய காணிகளை மீளதா போன்ற வாசகங்களை ஏந்திய வாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கமத் தொழிலாளர்களின் விவசாய நிலங்களைப் பெற்றுத்தருமாறு கோரி சுமார் 50 பேருக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது,

இன்று மே 1 உலக தொழிலாளர்களின் உரிமையை வென்ற செந்நாள் ஆனால் இந்த தேசிய மக்கள் சக்தி அரசால் முத்து நகர் விவசாய தொழிலாளர்களின் உரிமையை காணியையும் பறித்த கருநாள்.

ஆசியாவிலேயே முதன்முறையாக இலங்கையில் ஆளுகை கண்டறியும் மதிப்பீட்டை (Governance Diagnostic Assessment) IMF நடத்தியது.

முறையான ஆளுகை இல்லாவிடில் பொருளாதார வளர்ச்சி நிலைக்காது என்பதை வலியுறுத்தி மேற்படி மதிப்பீடு நடைபெற்றது.

ஏனெனில் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புச் செயல்பாடுகளில் ஆளுகை (Governance) மற்றும் சமூக நிலைத்தன்மை (Social Stability) ஆகியவற்றுக்குச் சர்வதேச நாணய நிதியம் (IMF) முக்கியத்துவம் அளித்துள்ளது.

பொருளாதாரப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு நாட்டில் சமூக மற்றும் அரசியல் சமநிலை அவசியம் என்று ஐஆகு குறிப்பிட்டது.

IMF தனது உத்தியோகபூர்வ 2023 ஆண்டு அறிக்கைகளில் பொருளாதாரக் காரணிகளுக்கே முன்னுரிமை அளிக்கும். எனினும், *அரசியல் மற்றும் சமூக நிலைத்தன்மை இல்லாமல் பொருளாதார இலக்குகளை அடைய முடியாது ஏழை மற்றும் நலிவடைந்த மக்களுக்கு முறையான சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை IMF தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஓர் அரசாங்கம் தான் சீர்திருத்தங்களை முன்னெடுக்க முடியும் IMF நம்புகிறது. ஆனால் இன்று நடப்பது இன்றைய அரசு பெரும்பான்மை காணியோடும் சிறும்பான்மை கண்ணீரோடு நடத்துகிறது.

முத்துநகர் சிறுபான்மை மக்களான நாங்கள் இந்த 55 வருட காலத்தில் சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளையும் பார்த்துள்ளோம்.

அவ்வளவு பேரும் எமக்கு எந்த வித நிர்ப்பந்தமும் செய்யவில்லை குறிப்பாக மகிந்தராஜபக்ச அவர்களின் ஆட்ச்சி காலத்தில் எமக்கு விவசாய மானியம் கிடைக்கபெற்றது ..

ஆனால் இந்த NPP அரசு தலையை தடவி கண்ணை பறித்து அவமானபடுத்தி அட்டூழியம் செய்து அராஜகமாக எங்களை எங்கள் பூர்வீக காணியில் இருந்து வெளியேற்றியது.

இதை விட கொடுமை முந்தைய அரசுகளுக்கு எதிராக எங்களை அருண் கேமச்சந்திரா போன்றவர்கள் தூண்டிவிட்டு நாங்கள் உங்களோடு ஏகாபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக இருக்கிறோம்.

உங்களுக்கு நில உரிமைப்பத்திரம் வாங்கித்தருகிறோம் என்று நம்பவைத்து நாடகமாடி இன்று ஆட்ச்சிக்கு வந்ததும். அதே ஏகாபத்தியத்திற்க்கு எங்கள் வயல்காணிகளை தாரை வார்க்கிறார்கள். அதாவது கண்ணை விற்று ஓவியம் வாங்குகிறது

அருண் கேமசந்திரா இன்று எங்கள் நில உரிமை போராட்டத்தை கொச்சப்படுத்தி பிழையான தகவல்களை மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தெரிவித்து வருகிறார்.

எங்களுக்கு எங்கள் பாரம்பரிய விவசாய நிலம் வேண்டும். அருண் கேமசந்திரா கந்தளாயில் 11000 ஏக்கர் அர காணியை பெரும்பகுதியை பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்கினார்.

அவர்கள் இனி விவசாயம் செய்ய என்று அதுவும் நாட்டின் வளர்ச்சிக்கு என்று சொல்லி அப்ப முத்துநகர் விவசாயிகள் என்ன 1200 ஏக்கரில் 55 வருடமாக கஞ்சாவா செய்தார்கள் .

பெரும்பான்மையைக்கு தரப்படும் அதே உரிமை சிறுபான்மைக்கு தரப்படும் என்று விதிக்கு வீதி சந்திக்கு சந்தி NPP சொன்னது அது பகல் கனவா.

எங்கே சமூக நிலைத்தன்மை உள்ளது. இன்று வரை சமூக வேறுபாட்டோடு தான் இந்த அரசு முந்தைய அரசுகளை விட ஏமாற்று நாடகத்தன்மையோடு பாசிசமாக செயல்படுகிறது..

நாங்கள் ஜனநாயக முறைப்படி பல தடவை பல வழிகளில் எங்கள் உரிமையை சொன்னோம் கேட்டபாடில்லை. ஆகவே கஸ்டத்தில் உள்ள இலங்கை நாட்டை காப்பாற்றுவது போல் கண்ணீரோடு மட்டும் வாழும் முத்துநகர் மக்களின் வாழ்க்கையையும் காப்பாற்றுங்கள்.

அரசு செய்யாததை IMF செய்யும் என்று முத்துநகர் மக்கள் முழுமையாக நம்புகிறார்கள். காசாவுக்கும் பாலஸ்தீனத்துக்கும் ஈரானுக்கும் குரல் கொடுக்கும் உங்கள் நேர்மை பிடித்திருக்கிறது.

அதே போல் உங்களோடு வாழும் சகோதர சகோதரிகளான எமக்கும் கொஞ்சம் குரல் கொடுங்கள் எமக்கு நாளை உங்களுக்கு? எங்கள் ஒற்றுமையே எம் பலம் என்றனர்.

தையிட்டி விகாரை பகுதிக்குள் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதி உடனடியாக விடுவிக்கப்பட்ட வேண்டும்!

தவிசாளர் சோ. சுகிர்தன்

01.05.2026

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் காணப்படும் பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் எனவும், இல்லையெனில் அவை பிரதேச சபையினால் அகற்றப்படும் என பிரதேச சபையினால் விகாரதிபதிக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதி காணப்படுகிறது. குறித்த வீதியினை கடந்த 28ஆம் திகதி தவிசாளர் அடையாளம் காட்டி. அதனை நில அளவையாளர்கள் அளந்து வீதியினை குறித்து இருந்தனர்.

இந்நிலையில், பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளரினால் , விகாரதிபதிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில்,

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் உரித்துடமைக்கு உட்பட்ட தையிட்டி பவானி வீதியைத் தடைசெய்து தாங்கள் எல்லையிட்டுள்ளீர்கள். எனவே, அந்த எல்லையை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் அகற்ற வேண்டும் என்று தங்களுக்கு 1987 ஆம் ஆண்டின 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 59(1) பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த வீதியை சேர்த்து எல்லையிட்ட இடப்பரப்புக்கான உறுதிகளையும் ஆவணங்களையும் பரிசீலனைக்காக வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

தவறும் பட்சத்தில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 59(2) பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தாங்கள் எல்லைகளை அகற்ற மறுத்து, அவை பிரதேசசபையால் அகற்றப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் செலவு தங்களிடம் இருந்து அறவிடப்படும். அத்துடன், தாங்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படவும் நேரிடலாம் என் பதையும் அறியத் தருகின்றேன் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, வலி.வடக்கு பிரதேச சபையின் நேற்றைய மாதாந்த அமர்வில் இந்த விடயம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தவிசாளரின் நட வடிக்கைக்கு தேசிய மக்கள் சக்தியினர் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவை வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மயிலிட்டியில் சிறீலங்கா இராணுவத்தினரின் கொமாண்டோ பங்களா முன் மக்கள் போராட்டம்!

01.05.2026

யாழ். வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “கொமாண்டோ ” பங்களா முன்பாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு கடந்த வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னடுத்தனர்.

www.sangathamil.com

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குள் காணப்பட்ட சந்தேகத்திற்கு இடமான மண் மாதிரிகளும் பரிசோதனை!

02.05.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் ஆறாம் நாளான இன்றைய தினம் சனிக்கிழமை இரண்டு மனித எலும்புக் கூட்டு தொகுதி அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக கூட்டு தொகுதியில் மூன்று என்பு கூட்டு தொகுதி முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம் அடையாளம் காணப்பட்ட இரண்டு மனித எலும்புக் கூட்டு தொகுதியுடன் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனித புதைகுழியில், 246 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 243 மனித என்பு கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

அதேவேளை புதைகுழிக்குள் காணப்பட்ட சந்தேகத்திற்கு இட மான கறுப்பு நிற மண் அரித்து எடுக்கப்பட்ட நிலையில், தற்போது அவை உலர விடப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனிதப் புதைகுழிக்குள் மரத்திலான பெட்டி போன்ற உருவம் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதனை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பணிகள் முடிவடைந்த பின்னரே, அது தொடர்பில் உறுதியாக கூற முடியும் எனவும், நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அகழ்வு பணிகள் நடைபெறாது எனவும் , 7ஆம் நாள் அகழ்வு பணிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மேற்கொள் ளப்படும் என சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

திருக்கோணேசுவர ஆலயத்திற்கு சொந்தமான காணிகளை ஆலயத்திற்கு வழங்குமாறு கோரி சிறீலங்கா தொல்பொருள் திணைக்கள பணிப்பாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு!

02.05.2026

திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதி மற்றும் அருள்மலையை உள்ளடக்கிய 18 ஏக்கர் 01 ரூட். 29 பேச்சஸ், கணி துண்டும், பாபநாச தீர்த்தம் அமைந்துள்ள 03 ஏக்கர் 02 ரூட் 01 பேர்ச்சஸ் காணித்துண்டும், மற்றும் கோட்டை வாசல் பிள்ளையார் அமைப்புள்ள 26 பேர்சஸ் உள்ளடங்கிய காணி துண்டும் திருகோணேசுவர ஆலயத்துக்கு சொந்தமானவை என வெளிப்படுத்தவும் அவற்றுக்கான பாரதீனப்படுத்தல் கட் டளையை திருக்கோணேசுவர ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு வழங்க கோரியும் சட்டத்தரணி திலகரெட்ணம் துஷ் யந்தன் தலைமையிலான திருக்கோணேசுவர ஆலய நிர்வாக சபயினரால் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக கடந்த 29ஆம் திகதி சித்திரை மாதம் 2026 அன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

1950ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை காலத்துக்கு காலம் பல்வேறுபட்ட அரச கெடுபிடிகள் மற்றும் தொல்பொருள் கெடு பிடிகள் அத்துமீறிய கையகப்படுத்தல்கள் என்பவற்றை கட்டு படுத்தி ஆலயத்தின் இராஜகோபுர கட்டுமானம் மற்றும் இதர அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவே குறித்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை யின் தலைவர் சட்டத்தரணி திலகரெட்ணம் துஷ்யந்தன் மேலும் தெரிவித்தார்.

செம்மணியில் மனிதப் புதைகுழியில் சர்ச்சைக்குரிய சவப்பெட்டி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது

05.05.2026

செம்மணி புதைகுழியில் சர்ச்சைக்குரிய முறையில் புதைக்கப் பட்ட சவப்பெட்டி இன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

சவப்பெட்டிக்குள் பெண் ஒருவருடைய எலும்புக்கூடும், காப்பு, நாணய குற்றி போன்ற பொருட்களும் காணப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய நாள் அகழ்வின் போது புதிதாக 5 எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இரண்டு எலும்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இன்று புதிதாக அடையாளம் காணப்பட்ட 5 எலும்புக்கூடுக ளுடன் சேர்த்து அப்புதைகுழியில் மொத்தமாக அடையளாம் காணப்பட்டுள்ள எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 255 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் அங்கு இன்று புதிதாக அகழ்ந்து எடுக்கப்பட்ட இரு எலும் புக்கூட்டுத் தொகுதியுடன் சேர்த்து அங்கு மொத்தமாக அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 249 ஆக அதிகரித்துள்ளது.

www.sangathamil.com

யாழ். தையிட்டி விகாரைக்குள் உள்ள வீதியை மீட்கும் முயற்சியை கைவிடுக: தவிசாளரை அழைத்து மிரட்டிய பலாலி பொலிஸ்!

03.05.2026

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் காணப்படும் பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனை பலாலி பொலிசார் அழைத்து அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளனர்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதி காணப்படுகிறது. குறித்த வீதியினை கடந்த 28ஆம் திகதி தவிசாளர் அடையாளம் காட்டி. அதனை நில அளவையாளர்கள் அளந்து வீதியினை குறித்து இருந்தனர்.

இந்நிலையில், பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளரினால், விகாரதிபதிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் இல்லையெனில் 12ஆம் திகதி பிரதேச சபையினால் வேலி அகற்றப்படும் எனவும், அவ்வாறு அகற்றப்பட்டால், வேலி அகற்ற செலவழிக்கப்பட்ட நிதியை விகாராதிபதியே பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலாலி பொலிஸ் நிலையத்தில் விகாராதிபதி விகாரை வேலியை பிரதேச சபை அடாத்தாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக முறைப்பாடு அளித்துள்ள நிலையில், அது தொடர்பில் தவிசாளரை பொலிசார் அழைத்து விசாரணை செய்துள்ளனர்.

அத்துடன், வேலியை அகற்றினால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் பாதிக்கப்படும் எனவே வேலியை அகற்றும் நடவடிக்கையை கைவிட வேண்டும் எனவும், மீறி நடவடிக்கை எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என பொலிசார் தவிசாளரை மிரட்டும் தொனியில் கூறியுள்ளனர்

அதற்கு தவிசாளர் சட்ட நடவடிக்கையை எதிர்நோக்க தான் தயார் எனவும், அது பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என்பதற்கான ஆவணங்கள் எம்மிடம் உள்ளன. அதன் அடிப்படையிலையே அன்றைய தினம் வீதியை அடையாளம் காட்டி, அது அளக்கப்பட்டது. அந்த வீதியை விகாராதிபதி விடுவிக்க வேண்டும். இல்லை எனில் பிரதேச சபையால் வேலிகள் அகற்றப்பட்டு, வீதியை நாம் விடுவிப்போம். அதற்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யுங்கள். நீதிமன்றில் வழக்கை எதிர்கொள்ள தயார் என பொலிசாருக்கு தவிசாளர் பதிலளித்துள்ளார்.

அதேவேளை, கடந்த 28ஆம் திகதி விகாரை அமைந்துள்ள காணிகளை அளக்க முற்பட்ட வேளை “காணிகளை விடுவிப்பதற்காக தான் அளக்கின்றோம் ” என கடித தலைப்பில் மாவட்ட செயலரோ பிரதேச செயலரோ உறுதி மொழி தந்தால் தான் காணிகளை அளக்க சம்மதிப்போம் என காணி உரிமையாளர்கள் கூறி , அன்றைய தினம் காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்கவில்லை.

அதன் போது மாவட்ட செயலர் “காணி உரிமையாளர்களின் நியாயமற்ற கோரிக்கை” காரணமாக காணி அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டன என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் அன்றைய தினம் பிரதேச சபை தவிசாளர் வீதியை அடையாளம் காட்டி அதனை அளவீடு செய்ய சம்மதித்த நிலையில் , வீதி அளக்கப்பட்டது. இந்நிலையிலையே தற்போது விகாராதிபதி வீதியை கையளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

செம்மணியில் மனிதப் புதைகுழியில் மண்ணுடன் அகழ்ந்து எடுக்கப்பட்ட குழந்தையின் எலும்புக் கூடு!

05.05.2026

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து குழந்தை ஒன்றின் எலும்புக் கூட்டுடன் மேலுமொரு எலும்புக் கூடு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், தங்க ஆபாரணம் என சந்தேகிக்கப்படும் ஆபாரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 8ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன்போது இன்றைய தினம் 5 எலும்புக் கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூட்டு தொகுதியில் குழந்தை ஒன்றின் எலும்புக் கூட்டு தொகுதி உட்பட 2 என்பு கூட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியில், 255 மனித எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 249 மனித எலும்புக் கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை புதை குழிக்குள் காணப்பட்ட சந்தேகத்திற்கு இடமான கறுப்பு நிற மண்ணிற்குள் இருந்து எரிந்த நிலையில் சில எலும்புகளும், நாணய குற்றிகளும் சான்று பொருட்களாக மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் மூக்குத்தி போன்றதான உடைந்த நிலையில், சிறிய தங்க ஆபாரணம் ஒன்றும், காப்பு போன்ற ஆபரணம் ஒன்றும் ,

சில நாணய குற்றிகளும், மரப்பெட்டி ஒன்றின் சிதைவுகள், ஆணிகளும்

மீட்கப்பட்டுள்ளதாகவும், குழந்தையின் எலும்புக் கூட்டு தொகுதி நேரடியாக மண்ணில் இருந்து அகழ்ந்து எடுக்க முடியாத நிலைமை காணப்பட்டமையால், அதனை பண்டேஜ் துணிகளால் சுற்றி பக்குவப்படுத்தி மண்ணுடன் அகழ்ந்து எடுக்கப்படதாக சட்டத்தரணி ஞா.ரனித்தா தெரிவித்துள்ளார்.

www.thuyarpakirvu.com

சிறீலங்கா விமானப்படையால் கறுமலையூற்று மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிப்பு

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்

05.05.2026

திருகோணமலை, கறுமலையூற்று கடற்கரைப் பகுதிக்கு மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு சிறீலங்கா விமானப் படையினரால் விதிக்கப்பட்டுள்ள தடையானது மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்தையும் சுதந்திரத்தையும் பறிக்கும் செயலாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை (05) சிறீலங்கா ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக அவர்களுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள வெள்ளைமணல் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கறுமலையூற்று கடற்கரைக்கு, செவ்வாய்க்கிழமை (05) காலை முதல் பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் செல்வதற்கு விமானப்படையினரால் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையின் காரணமாக குறித்த கடற்பரப்பை நம்பி வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் தமது அன்றாடத் தொழிலை முன்னெடுக்க முடியாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.

முப்பது வருடகால கொடூர யுத்தம் நிலவிய காலப்பகுதியில் கூட இப்பகுதி மீனவர்களுக்கு இவ்வாறானதொரு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

தற்போதைய ஜனாதிபதி அவர்கள் மக்களுக்கான ஒரு புதிய அரசியல் கலாசாரத்தையும், சுதந்திரமான சூழலையும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இவ்வேளையில், பாதுகாப்புத் தரப்பினரின் இத்தகைய தன்னிச்சையான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாகவே அமைகின்றன.

மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே, கறுமலையூற்று கடற்கரையில் மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை சுதந்திரமாக முன்னெடுக்கவும், பொதுமக்கள் கடற்கரையைப் பயன்படுத்தவும் விதிக்கப்பட்டுள்ள தடையை நிரந்தரமாக நீக்க ஜனாதிபதி அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கு எதிராகத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தனது அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு பன்னாடுகளிடம் நீதி விசாரணையைக் கோரிய ரவிகரன் எம்.பி; உயிர் நீத்தவர்களுக்கும் சபையில் அகவணக்கம் செலுத்தினார்

06.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை இடம்பெற்று 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், இதுவரை நீதி கிடைக்கவில்லை. இறுதிக்கட்ட போர்க்காலப் பகுதியில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்கவேண்டும், சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (6) நடைபெற்ற மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்திலே குறித்த சட்டமூலம் தொடர்பான கருத்துகளுக்குச் செல்ல முன்னர், நீதிக்காக காத்திருக்கும் இனத்தின் குரலாக ஒரு சில கருத்துகளை இப்பேரவையில் முன்வைக்க விரும்புகிறேன். 17 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த தீவிலே எங்கள் இனத்தைச் சார்பாக்கிய ஓர் ஆயுதப்போராட்டம் பல நாடுகளின் உதவியோடு இலங்கை அரசால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. கொத்துக்குண்டுகளிலும் இரசாயனக் குண்டுகளிலும் உலகப்போரியல் அறங்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. எங்கள் தமிழர் தாயகத்தின் நிபுணத்துவங்கள் அழித்தொழிக்கப்பட்டன.

எங்கள் முகவரிகள், அடையாளங்கள் அகற்றெடுக்கப்பட்டன. இலட்சக்கணக்கான உறவுகளை போரிலே - முள்ளிவாய்க்காலிலே இழந்தோம். ஓர் அரசென்று உங்களிடம் நம்பி ஒப்படைத்த எங்கள் உறவுகளை இன்றளவும் தேடி அலைகிறோம். எமது உரிமைக்காய் - எமது இயல்பு இருப்புக்காய் - எமது நல வாழ்வுக்காய் போராடியவர்கள் - எங்கள் உறவுகள் இன்றளவும் உங்கள் சிறைகளில் அரசியல் கைதிகளாய் வாடுகிறார்கள்.

எங்களுக்கான நியாயத்துக்காக உங்களிடமும் பன்னாடுகளிடமும் நீதிக்காக 17 ஆண்டுகளாகக் காத்திருக்கிறோம். ஒரு தீவிலே இவ்வாறு நீதிக்காக - நலவாழ்வுக்காக காத்திருக்கும் எங்களுக்கான நீதியைத் தராது நல்லிணக்கம் எவ்வாறு வரும். இலங்கை அரசின் நல்லிணக்க மறுப்பின் மற்றோர் ஆண்டு எதிர்வரும் மே 18 உடன் கடக்கிறது. ஆறாத வடுக்களோடு

நீதியை வேண்டியவண்ணம் எங்கள் விடுதலைப் போரிலே உயிரிழந்த எங்கள் மறவர்கள் - பொதுமக்களை இப்பேரவையில் நினைவேந்திக்கொள்கிறோம். எமக்கான நீதியை கடந்த காலங்கள் போல இன்றும் இப்பேரவையின் வாயிலாக பன்னாடுகளிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

அபிவிருத்தி என்னும் பெயரால் பறிபோகும் பூநகரி பொன்னாவெளி மற்றும் கிராஞ்சிக் கிராமங்கள்

07.05.2026

அபிவிருத்தியின் பெயரால் கிளிநொச்சியின் பூநகரி பொன்னாவளி கிராஞ்சி கிராமசேவையாளர் பிரிவுகளில் காற்றாலை திட்டம் கனியமணல் அகழ்வு திட்டம் மற்றும் சுண்ணக்கல் அகழ்வு திட்டம் என்பனவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளது. இதனால் அங்கே வாழுகின்ற சுமார் 2000 குடும்பங்கள் அவர்களின் வாழ்வாதாரங்களை இழக்கவுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கனிய மணல் அகழ்விற்கென 16 சதுர கிலோமீட்டர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதில் 13 சதுர கிலோமீட்டர் பகுதி பொன்னாவெளி மற்றும் கிராஞ்சி கிராம சேவையாளர் பிரிவுகளின் மக்கள் குடியிருப்புகளை உள்வாங்கி உள்ளது.

வலைப்பாட்டு கிராமத்தின் எருமை தீவு கடற்கரையில் இருந்து உள்நோக்கி ஒரு கிலோமீட்டர் அகலம் மேற்கு நோக்கி ஆறு கிலோமீட்டர் நீளம் வரை அதாவது பேய்முனை கீரிகுடா பகுதி வரை அதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல பாலாவி பொன்னாவெளிக்கிடையே பெரிய அடிப்பாடு கடற்கரையில் இருந்து உள்நோக்கி 2 சதுர கிலோமீட்டர் பிர தேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது இது கடற் தொழிலாளிகள் தொழில் செய்யும் இடமாகும். அதேபோல மண்டைக்கல்லாற்றின் கடலில் கலக்கும் இடத்திலிருந்து பாலாவி வரை மூன்று சதுர கிலோமீட்டர் பிரதேசம் அதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கிராஞ்சி கிராமத்தில் பிருந்தாவனத்தில் இருந்து நொச்சிமுனை ஆறு வரை இரண்டு சதுர கிலோமீட்டர் பிரதேசம்

கடற்கரை ஓரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது அவை எல்லாம் கடற் தொழிலாளிகளின் துறைமுக பிரதேசங்கள் ஆகம்

யாழ். தையிட்டியில் போராடியவர்களுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 09 திகதிக்கு தவணை!

07.05.2026

யாழ். தையிட்டியில் போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக பலாலி பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன் கொண்டு செல்வதற்கு வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் காணி உரிமையாளர் சாருஜன் உள்ளிட்டோரின் பெயரிடப்பட்ட வழக்கு இன்று (07) மல்லாகம் நீதி மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் வழக்கினை முன்கொண்டு ஏதுக்கள் காணப் படுகின்றன என்ற அப்படையில் வழக்குத் தொடுநர் வழக்கினை முன்கொண்டு செல்ல முடியும் என்று நீதிமன்றில் தெரிவிக் கப்பட்டது.

மேலும் வழக்கில் குறிப்பிட்ட எதிராளிகளின் வாக்கு மூலங்களை வழங்க பணிக்கப்பட்டதுடன் வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து தொடர்ச்சியாக வெளிப்படும் குழந்தையர் எலும்புக் கூடுகள்!

07.05.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து இன்றைய தினம் வியாழக்கிழமையும் குழந்தையரின் எலும்புக்கூடுகளுடன் நான்கு எலும்புக் கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 10ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் வியாழக்கிழமை நடைபெற்றது.

அதன் போது, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த எலும்புக் கூடுகளில் இரண்டு எலும்புக் கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், நான்கு எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியில், 259 மனித எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 254 மனித எலும்புக் கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மனிதப் புதைகுழிக்குள் இருந்து கடந்த சில தினங்களில் மீட்கப்பட்ட, மூக்குத்தி போன்றதான ஆபரணங்கள், நாணய குற்றிகள் உள்ளிட்ட பிற பொருட்களான 14 பொருட்கள் நீதிமன்றுக்கு பரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒரிரு நாட்களாக புதைகுழிக்குள் இருந்து குழந்தையரின் எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டு வருவதுடன் அவை அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்றைய தினம் புதன்கிழமை அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடு ஒன்றின் மண்டையோட்டு பகுதி மாத்திரமே வெளி தெரியும் வகையில் உள்ள நிலையில், ஏனைய பாகங்கள் மயானத்தின் தகன மேடை கட்டுமானத்திற்குள் காணப்படுவதனால், அதனை இலக்கமிடவில்லை எனவும், முழுமையான எலும்புக் கூட்டு தொகுதியையே இலக்கமிட்டு வருவதானால், தகன மேடை உடைக்கப்பட்டு, முழுமையான எலும்புக் கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்ட பின்னரே அதற்கு இலக்குமிடப்படும் என சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.thuyarpakirvu.com

யாழ். செம்மணியில் மீண்டும் ஒரு சிறுவனின் எலும்புக் கூடு!

09.05.2026

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது, நேற்று சிறுவன் ஒருவனுடையது எனச் சந்தேகிக்கப்படும் மனித எலும்புக் கூட்டுத் தொகுதி ஒன்று புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் மூலம் அங்கு இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களின் மொத்த எண்ணிக்கை 260 ஆக உயர்வடைந்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நாள் பணிகள் நேற்று(08) இடம்பெற்றன.

இதன்போது, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த எலும்புக் கூட்டுத் தொகுதிகளில் இருந்து இரண்டு முழுமையான மனித எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்று மற்றும் இரண்டிலிருந்து இதுவரை மொத்தம் 260 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் இருந்து 256 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடங்கிய கடந்த 11 நாள்களில் மட்டும் 17 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று(09) சனிக்கிழமை என்பதால் அரை நாள் மட்டுமே அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும், மழை யுடனான காலநிலை தொடருமானால் இன்றைய அகழ்வுப் பணிகள் பாதிக்கப்படக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

தசாப்தங்களாகப் புதைந்து கிடக்கும் செம்மணி மர்மங்கள், ஒவ்வொரு அகழ்வின் போதும் அதிர்ச்சியூட்டும் சாட்சியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி இடைநிறுத்தம்: யூன் 01 மீண்டும் ஆரம்பம்!

09.05.2026

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் இன்றுடன் (9) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமாகி 12 நாட்கள் அகழ்வு பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இன்றைய தினத்துடன் அகழ்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய அகழ்வு பணிகளின் போது, ஒரு மனித எலும்புக் கூட்டுத் தொகுதி புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடுகளில் 5 அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் 261 மனித எலும்புகூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை புதைகுழிக்குள் அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூட்டுத் தொகுதி ஒன்றின் மண்டையோடு பகுதி மாத்திரம் வெளி தெரிந்த நிலையில், அது இன்னும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 12 நாட்களாக நடைபெற்ற மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளின் போது, 21 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், புதைகுழிக்குள் இருந்து மூக்குத்தி, நாணய குற்றிகள், ஆணிகள், மஞ்சள் நிற வளையல் துண்டு உள்ளடங்கலாக 17 பிற பொருட்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 1ஆம் திகதி மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அந்த பணிகள் இடம்பெறும் பகுதிகளை சுத்தம் செய்யும் பணிகள் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

தமிழ் நாட்டு சட்டசபையில் மே 18ஐ ‘முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக நிறைவேற்றுமாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களிடம் கோரிக்கை முன்வைப்பு!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற ஊறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

10.05.2026

சிறீலங்கா அரசு ஈழத்தமிழ் மக்கள் மீது அரங்கேற்றிய தமிழினவழிப்பை சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி வரும் ஈழத்தமிழர்களுக்கு வலுச் சேர்ப்பதற்கு மே 18 ஐ ‘முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக’ தமிழ்நாடு சட்டசபையின் ஆரம்ப அமர்வில் நிறைவேற்றுமாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் சந்திரசேகர் ஜோசப் விஜய் தமிழ்த் தேசியப் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளர்.

தமிழ்த் தேசியப் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று ஞாயிற்றுக்கிழமை (10) தமிழ் நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் ஈழத் தமிழ் மக்களின் சார்பாகத் தமிழ்த் தேசியப் பேரவையின் கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில்,

நடைபெற்று முடிந்த தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் பாரிய சாதனையை முதல் தடவையிலேயே நிலைநாட்டி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தாங்கள் பதவியேற்றுள்ளமையையிட்டு தமிழ்த் தேசிய பேரவையினராகிய நாம் மீளவும் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டின் ஆட்சியைப் பொறுப்பேற்று நிற்கும்   பாரிய பணிச்சுமைகளுக்கு மத்தியில் எமது கீழ்வரும் கோரிக்கையையும் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டு நிற்கின்றோம்.

சிறீலங்கா அரசு ஈழத்தமிழ் மக்கள் மீது அரங்கேற்றிய தமிழினவழிப்பை நினைவுகூரும் வகையில், கடந்த 2009 ற்குப் பின்னர் ஆண்டுதோறும் மே 18 ஐ ‘முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக’ ஈழத்தமிழ் மக்கள் பிரகடனம் செய்து, அந்நாளில் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரமாக ஒன்றுகூடி நினைவுகூர்ந்து வருகின்றார்கள்.

ஈழத்தமிழ் மக்களது மேற்படி நீதிக்கான போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில், கடந்த 2013-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த அனைத்துக் கட்சிகளதும் ஆதரவுடன் ஈழத்தமிழர் மீது இடம்பெற்றது இனவழிப்பு என்றும், அதற்கு சர்வதேச குற்றவியல் விசாரணை அவசியம் என்றும் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அந்நேரத்தில் தங்களது கட்சி நிறுவப்பட்டிருக்கவில்லை ஆயினும், அதன் பின்னர் தமிழக வெற்றிக்கழகம் தோற்றம் பெற்று, அதன் முதலாவது தேர்தலில் பெரு வெற்றியீட்டி தாங்கள் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளீர்கள். இந்நிலையில் தாங்களும் தங்களது தலைமையிலான தமிழ்நாடு அரசாங்கமும் ஈழத்தமிழர் மீது இடம்பெற்றது.

இனவழிப்பு அதற்குச் சர்வதேச குற்றவியில் விசாரணை அவசியம் என்ற அதே நிலைப்பாட்டிலே மிகவும் இறுக்கமாகவும் உறுதியாகவும் பயணிப்பீர்கள் என்ற செய்தியை அனைத்துத் தரப்புகளுக்கும் வழங்கும் வகையில், மேற்படி 2013 ஆம் ஆண்டு சட்டசபைத் தீர்மானத்தை ஒட்டிய ஓர் தீர்மானத்தை, இம் மே மாதத்தில் கூடும் தமிழ்நாடு சட்டசபையின் ஆரம்ப

அமர்விலேயே தங்களது தலைமையில் நிறைவேற்றுவது ஈழத்தமிழ் விவகாரத்தில் தமிழ்நாட்டில் ஓர் தொடர்ச்சியான உறுதியான நிலைப்பாடு உள்ளமையை வெளிப்படுத்துவதாக அமையும்.

அதன் மூலம், ஈழத் தமிழினம் மீது நீங்கள் காட்டும் அக்கறையானது, கொடிய இனவழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி வரும் ஈழத்தமிழர்களுக்கு வலுச் சேர்ப்பதாகவும் அமையும் என்பதுடன் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர் இதயங்களில் நீங்காத இடத்தை தங்களுக்கு வழங்கும் என்பதையும் தெரிவித்து, மீண்டும் எமது உளப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வீதியை விடுவிப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கையை தடை விதிக்குமாறு பொலிசாரின் கோரிக்கையை ஏற்பதற்கு நீதிமன்றம் மறுப்பு!

11.05.2026

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொது மக்கள் பாவனையிலிருந்த பவானி வீதியை விடுவிப்பதற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அந்த முயற்சிகளுக்குத் தடை விதிக்குமாறு சிறீலங்காப் பொலிசாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்பதற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதனிடையே பவானி வீதி தொடர்பான கட்டளை எதிர்வரும் 21 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றால் வழங்கப்படவுள்ளது.

இதன் போது சிறீலங்காப் பொலிசாரினால் கொண்டுவரப்பட்ட பிணைமுறி நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுமுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் அண்மையில் அளவீட்டுப் பணி இடம்பெறவிருந்தது. காணிகளின் உரிமையாளர்கள் அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காத போதிலும், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை பிரதேசசபை தவிசாளர் சுகிர்தன் அடையாளம் காட்டியிருந்தார்.

இதையடுத்து, வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லையை நாளைமறுதினத்துக்குள் அகற்றுமாறும், இல்லையேல் பிரதேசசபை அந்த எல்லையை அகற்றும் என்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் பிரதேசசபையின் நடவடிக்கைக்கு எதிராக, தையிட்டி விகாராதிபதி பொலிசாரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

முறைப்பாட்டுக்கு அமையவே தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை விடுவிப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துவரும் நடவடிக்கைக்குத் தடைவிதிக்கு

மாறு பொலிசார் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

எனினும், பொலிசாரின் சமர்ப்பணத்தை மட்டும் அடிப்படையாக வைத்து தீர்ப்பு வழங்குவதற்கு நீதிமன்றம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

யாழ். வலி. தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிரதேச சபைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பம்!

11.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் இன்றைய நாள் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், வலி. தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் , பிரதேச சபைக்கு முன்பாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதேச சபைக்கு முன்பாக பிரத்தியோகமாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில், முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு மலர்வணக்கம் செலுத்தப்பட்டு, பொது சுடர் ஏற்றபட்டது.

தொடர்ந்து , முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

யாழ். வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய யாழ். பல்கலைக்கழக மாணவர்!

11.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுக்கும் செயற் திட்டம் வல்வெட்டித்துறை ஆலடி சந்தி பகுதியில் பல்கலைக்கழக மாணவரினால் வழங்கப்பட்டது.

வளரிளம் தலமுறைக்கு, தமிழ் மக்களின் மீதிழைக்கபட்ட திட்டமிட்ட இனப்படுகொலையின் உச்ச காலத்தில் மக்களின் உயிர் காத்த இவ் உப்பில்லா அரிசிக் கஞ்சி எம் வரலாற்றைக் கடத்திச் செல்லும்.

கொட்டும் மழைக்கு மத்தியிலிலும் கஞ்சியினை பலரும் வாங்கி பருகினர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உள்நாட்டுப் பொறிமுறைக்குள் முடக்க முயற்சிக்கிறது செஞ்சிலுவைச் சங்கம்!

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் எஸ். சிவயோகநாதன்

12.05.2026

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை ஒரு உள் நாட்டு பொறிமுறைக்குள் கொண்டுவருவதற்கு சர்வதேச செஞ்சி லுவைச் சங்கம் முயற்சிப்பதாக மனித உரிமைகள் செயற்பாட் டாளர் எஸ்.சிவயோகநாதன் கரிசனை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், செஞ்சிலுவை சங்கத்தினால் கடந்த 5 - 7ஆம் திகதி வரை கொழும்பில் மூடிய அறை கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், அதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்கள் உட்பட நாடு முழுவதும் இருந்து வலிந்து காணாம லாக்கப்பட்டோருடன் தொடர்புடைய சுமார் 20 பிரதிநிதிகள் பங்கேற்றதாகவும் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு ‘இனிவருங் காலங்களில் செஞ்சிலுவை சங்கம் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுடன் நேரடி யாகப் பணியாற்றப்போவதில்லை என்றும், மாறாக நிதியுதவி மற்றும் ஆதரவு வழங்கும் பங்காளியாக மாத்திரமே செயற்படும் என்றும் பங்கேற்பாளர்களிடம் கூறப்பட்டுள்ளது’ என அவ் வறிக்கையில் குறிப்பிட்டுள்ள சிவயோகநாதன், நீதி அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஆகியவற்றின் ஊடாக முன்னெடுக்கப்படும் சந்திப் புக்கள் உள்ளிட்ட ஒருங்கிணைப்புப் பணிகளை நாடு முழு வதும் கிளைகளைக் கொண்டிருக்கும் சர்வோதயம் அமைப்பு கையாளும் என விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று ‘ஆரம்பகட்ட முயற்சிகள் வட மாகாணத்தை மையமாகக்கொண்டு முன்னெடுக்கப்படும். அம்முயற்சி வெற்றி யளிக்கும் பட்சத்தில், அதனைக் கிழக்கு மாகாணத்துக்கும் விரி வுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பங் கேற்ற வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பெண்கள் சிலர் இம்முயற் சிக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்திய அதேவேளை, ஏனைய பாதிக்கப்பட்ட தரப்பினர் இவ்வாறான நடவடிக்கைகள் மூலும் சர்வதேச நீதிக்கான தமது நீண்டகாலக் கோரிக்கைகள் படிப்படியாகப் பலவீனமடைந்துவிடுமோ என அச்சமடைந் துள்ளனர்’ என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.

மேலும் இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாம லாக்கப்பட்டோரின் குடும்பங்கள், சிவில் சமூக செயற்பாட் டாளர்கள், புலம்பெயர் தமிழர்கள், ஊடகங்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒன்றிணையவேண்டும் என அழைப்புவிடுத் துள்ள அவர், சர்வதேச பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்குமாறும், நீதிக்கான போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் தொடர்பில் எச்சரிக்கையுடன்

யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனி ஆரம்பம்!

12.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலைகளின் நினைவு சுமந்த ஊர்திப் பவனி இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை காலை நல்லூரில் உள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் இருந்து ஆரம்பமானது.

இந்த ஊர்திப் பவணியானது, வட,கிழக்கு தமிழர் தாயகம் எங் கும் சென்று மே-18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மண்ணை சென்றடைய உள்ளது.

அதேவேளை ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினை விடத்தின் முன்றலில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப் பட்டது.

முல்லைத்தீவு முள்ளியவளை சந்தி அம்மன் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு நினைவுக் கஞ்சி பகிர்வு

12.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முல்லைத் தீவு முள்ளியவளை சந்தி அம்மன் பகுதியில் இன்று (12) முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

ஈழம் கவி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அகவத்தின் ஏற் பாட்டில் இந்த கஞ்சி பரிமாறும் நிகழ்வு நடத்தப்பட்டது.

2009ஆம் ஆண்டு தமிழ் மக்கள் கொத்து கொத்தாக கொன் றொழிக்கப்பட்ட இனப்படுகொலையை நினைவுகூரும் வாரம் இன்று முதல் மே 18 வரை வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமி ழர்கள் வாழும் பகுதிகளில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டு வருகிறது.

முள்ளிவாய்க்காலில் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதி யுத்த காலத்தில் அரசின் திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டதோடு, பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டது. அப்போது குறித்த பகுதிகளில் வசித்த மக்களுக்கு உணவு, மருந்து என எதுவுமே கிடைக்கப்பெறாத நிலை காணப்பட்டது.

அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியின்றி உச்சக் கட்ட தாக்குதல்களுக்கும் வறுமைக்கும் அக்கால மக்கள் முகங்கொடுத்தனர். அந்நாட்களில் தமிழ் மக்களின் உயிர் காக்க பல்வேறு தொண்டு நிறுவனங்கள் வழங்கிய உப்புக் கஞ் சியே பலரின் உயிர் காக்கும் உணவாக இருந்தது.

அந்தக் கஞ்சியை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்றவர்கள் மீது கூட திட்டமிட்டு அரசு நடத்திய தாக்குதலில் பலர் உயி ரிழந்தனர்.

இந்த வரலாற்று உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்து, எதிர்காலச் சந்ததிக்கு நினைவுபடுத்தவும் தமிழினப் படுகொலை யில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வாரத்தில் முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறப்படுவது வழக்கமான செயற் பாடாகிறது.

இதன்போது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஞா.ஜீட்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.விஜிந்தன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,

சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற செயற் பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பகிர்வு!

12.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை நினைவுகூரும் வகை யில் வவுனியாவில் இலுப்பையடிப் பகுதியில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்களுக்கு இன்று (12) காலை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியிருந்தனர்.

இறுதிப் போரின்போது உணவின்றி தவித்த மக்களுக்கு கஞ்சி எவ்வாறு உயிர் காக்கும் மருந்தாக அமைந்தது என்பதையும், அக்காலப் பகுதியில் மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களையும் நினைவுபடுத்தும் விதமாக இந்த கஞ்சி பரி மாறும் நிகழ்வு அமைந்திருந்தது.

மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பகிர்வு

12.05.2026

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை (12) மன்னாரில் நினைவு நினைவுகூரப்பட்டது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பள்ளி முனை பெருக்க மரத்தடி பகுதியில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு அங்கிருந் தவர்கள் உட்பட வீதியில் சென்றவர்களுக்கும் கஞ்சி கொடுக்கப் பட்டுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவுகள், உள்ளடங்களாக பலர் கலந்து கொண் டனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வை நினைவுபடுத்தும் விதமாக வருடாந்தம் முள்ளி வாய்க்கால் நினைவு நாள் ஈழத்தமிழர்களால் நினைவுகூரப் படுகின்றது.

அதே போன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி அங்குள்ள மக்களுக்கு கொடுக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் நினைவேந்தல் இன்று செவ்வாய்க்கிழமை (12) மன்னாரில் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

www.sangathamil.com

மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் நினைவுகூரும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் காந்தி பூங்காவில் நினைவு கூரப்பட்டது!

12.05.2026

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 17வது ஆண்டு நினை வேந்தல் வார நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக் கப்பட்டன.

இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க் கால் நினைவு வாரம் இன்றைய தினம் (12) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக் களப்பு காந்தி பூங்காவில் நினைவுகூரப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக் களப்பு மாவட்ட தலைவி அ.அமலநாயகி தலைமையில் நடத்தப் பட்ட இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மட்டக் களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன், பிரதி முதல்வர் வை.தினேஸ் உள்ளிட்ட மாநகர சபை உறுப் பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங் கத்தின் உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து நினைவேந்தல் வார நிகழ்வுகள் ஆரம்பமாயின.

இதன்போது முள்ளிவாய்க்கால் அவலத்தின் நினைவாக வழங்கப்படுகின்ற முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன்,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக நாங்கள் ஒன்று கூடியிருக்கிறோம். முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்று 17

ஆண்டுகள் கடந்திருக்கின்றன.

இந்த ஆண்டும் வழக்கம் போல முள்ளிவாய்க்கால் நினை வேந்தல், வலிகளை நினைவுகூர்தல், முள்ளிவாய்க்கால் கஞ்சிக்காக எங்களுடைய மக்கள் ஏங்கி நின்ற அந்த நிலைமை, இவற்றை வெளிக்காட்டக்கூடிய விதத்தில் இன்று மே மாதம் 12ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரை இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற விருக்கிறது.

இன்று முதல் நாள் நிகழ்வு காந்தி சதுக்கத்தில் மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வலிகளை வழிகளாக மாற்றுவோம். நாங்கள் சுமந்த வலிகளை விடுதலைக்கான வழிகளாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

எமது மக்கள் 1956ஆம் ஆண்டிலிருந்து, சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 1956ஆம் ஆண்டு இக்னியாகலை படு கொலை என்று 153 பொதுமக்கள், அதுவும் தொழிலாளர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அன்று தொடங்கிய இனப்படு கொலை 2009ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 19ஆம் திகதி முடிந் ததாகக் கூறினாலும், இன்றைய நிலையிலும் கூட அந்த நினைவுத்தூபிகளை அழிக்கின்ற செயற்பாடுகள், தமிழர்களின் மனங்களில் இருக்கின்ற அந்த எண்ணங்களை, சிந்த னைகளை, நினைவேந்தலை அழிக்கின்ற செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

“எங்கே எங்கே எமது உறவுகள்” என்ற கேள்வியும், “வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்” என்ற கோஷமும் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் உள் நாட்டுப் பொறிமுறை மூலமாக எங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று சொல்லப்பட்ட விடயம் 17 ஆண்டுகளில் பொய்யாகத் தான் முடிந்திருக் கிறது. அது இன்னும் நடை பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை. ஆகவே பன்னாட்டுப் பொறிமுறை என்று சொல்லப்படுகின்ற சர்வதேச பொறிமுறை யின் ஊடாக பாதிக்கப்பட்ட உறவுகளுக்குரிய நீதி கிடைக்க வேண்டும். அந்த மக்கள் உயிர்களை இழந்தது மட்டு மல்லாமல், நீதிக்காக 17 ஆண்டுகள் காத்துக்கொண்டிருக்கின் றார்கள். ஆனாலும், நீதி கிடைக்கவில்லை.

ஆகவே, அநுர குமார திசாநாயக்க தலைமையில் அமைந் திருக்கிற இந்த புதிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உரிய பதில் அளிக்கவேண்டும்.

கடந்த காலத்தில் பல அரசாங்கங்கள் இருந்தன. ராஜபக்ஷ அர சாங்கம் இருந்தது. மைத்திரி அரசாங்கம் இருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இருந்தது. ரணில் விக்கிரமசிங்க அர சாங்கம் இருந்தது. இந்த அரசாங்கங்கள் எல்லாம் மொத்தத்தில் ஏமாற்றத்தைத்தான் மக் களுக்கு கொடுத்துச் சென் றிருக்கின்றன. இப்போது பல நம்பிக்கைகளை ஊட் டிய வண்ணம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றிருக்கிறது. எனவே காணாமல் ஆக் கப்பட்ட உறவுகள், கொல் லப்பட்ட உறவுகள், கடத்தப் பட்ட உறவுகள், இந்த முள்ளிவாய்க்கால் பேரவ லத்தில் மிகுந்த வலிகளைச் சுமந்த உறவுகள் இருக் கிறார்கள். இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றுதான் நீண்ட கால மாக அவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி, இன்றைய நிலையில் இளைஞர்கள் இதைப் பற்றி சிந்திக்கக்கூடாது என்ற அடிப்படையிலோ தெரியவில்லை, போதை, மதுசார பழக்கவழக்கங்கள் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கின்றன. அளவுக்கதிகமான மதுபான விற்பனை நிலையங்கள் வடக்கு, கிழக்கில் திறக்கப்பட்டிருக்கின்றன. இது இளைஞர்களின் உணர்வுகளை அழித்து அவர்களை நடை பிணங்களாக மாற்றுகின்ற ஒரு செயற்பாடாகக் கூட அமைந் திருக்கலாம். எனவே இளைஞர்கள், யுவதிகள் இந்த அரசாங் கத்தின் செயற்பாடுகளை கவனிக்கவேண்டும்.

எங்களுடைய பகுதிகளில் நாங்கள் மதுபான தவறணைகளை கேட்கவில்லை. மக்களுக்குரிய நீதியைத் தான் கேட்கிறோம். எனவே உணர்வுகளை அழிக்கக்கூடிய விதத்தில் போதைப் பொருட்களை விற்பனை செய்வதும், அளவுக்கதிகமாக மது பான தவறணைகளைத் திறப்பதும் தமிழ் மக்களின் உணர் வுகளை அழித்து அவர்களைக் களியாட்டப் பிரியர்களாக மாற்று கின்ற ஒரு செயற்பாடாகக் கூட இருக்கலாம். ஆகவே, வலி களைச் சுமந்த நாம் வழிகளைத் தேட வேண்டும். விடுதலைக் கான வழிகளைத் தேடுவதாக இருந்தால் கடந்த காலத்தில் நாங்கள் பட்ட கஷ்டங்கள், அவலங்கள், அநியாயங்களை நாங்கள் மறக்கக்கூடாது.

அடுத்து வரும் சந்ததிகளுக்கும் இவற்றைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால், அவர்கள் இந்தப் போரில் பாதிக்கப்பட்ட எமது இனத்தின் வலிகளை உணராமல் இருந்துவிடுவார்கள். எனவே, இதை அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசெல்வதற் கான இந்த செயற்பாடுகள் 17 வருடங்கள் கடந்தும் தொடர்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மட்டு. கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத் தூபியின் முன் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் வாரம் ஆரம்பம்!

12.05.2026

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, "தமிழின அழிப்பு நாள்" 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (12) மாலையில் கொட்டும் மழைக்கு மத்தியில் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவு தூபிக்கு முன்னால் உயிரிழந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி கஞ்சி வார்த்தை ஆரம்பித்து வைத்தனர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்த்தை உணர்வு பூர்வமாக அவர் ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது மழையையும் பொருட்படுத்தாது கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தினர். இதில் எதிர்கால சந்ததியினர் ஆர்வமாகக் கலந்து கொண்டனர் இவர்களுக்கு கடந்த 17 வருடத்துக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்பின் விபரங்களை தேசிய அமைப்பாளர் த.சுரேஸ்

இளைஞர்களுக்கு விளக்கினார்.

மட்டக்களப்பின் பல்வேறு இடங்களிலும் எதிர்வரும் மே 18ஆம்

திகதி வரை இந்த கஞ்சி வழங்கும் மற்றும் நினைவேந்தல்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாள் கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் மக்கள் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர். முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது – 12.05.2026

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ரவிகரன் எம்.பியின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு!

12.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் நினைவேந்தல் வாரம் 12.05.2026இன்று முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களது மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் நினைவுகூரப்பட்டது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது குறித்த மக்கள் தொடர்பகத்தில் கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்வாரம் நினைவுகூரப்பட்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நினைவுகூரல் நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா கலந்து கொண்டிருந்ததுடன், பெருந்திரளான பொதுமக்களும் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை நினைவுகூரும் முகமாக திரு செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டமானாற்றில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது – 12.05.2026

முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தல் வராத்தின் முதல் நாள் நிகழ்வாக திருக்கோணமலை பாட்டாளிபுரத்தில்...!

12.05.2026

2009 மே மாதத்தில் நீண்ட அளப்பெரும் தியாகங்களைக் கொண்ட ஆயுதப் போராட்ட மௌனிப்பின்னர் முள்ளிவாய்க் காலில் நடந்தேறிய இனப் படுகொலையில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரை நினைவேந்தும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாள் நிகழ்வுகள் இன்றைய நாள் திருக்கோணமலை மாவட்டத்தின் பூர்வீகக் கிராமமான பாட்டாளிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திருக்கோணமலை மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு வினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பொதுச்சுடரினை

மாவீரர் கப்டன் வீரமணியின் தாயார் ஏற்றி வைக்க உயிரிழந்த உறவுகளுக்கு அகவணக்கமும் மலர் வணக்கமமும் செலுத்தப் பட்டது.

இதில் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர் வரும் 17 மாலை வரை திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இந்நிகழ்வு முன்னெடுக்கப்படவுள் ளதுடன் 18 ஆம் திகதி முள்ளிவாய்கால் முற்றத்தில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் திருக்கோணமலையிலிருந்து செல் வோருக்கான விசேட பேருந்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

எனவே எமது இனம் அழிக்கப்பட்டமை மற்றும் படுகொலைக ளுக்கெதிரான நீதி வேண்டி நடைபெறும் இந் நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்போம் .

யாழ். தீவகம் அல்லைப்பிட்டியில் முள்ளிவாய்க்காலில் படுகொலையானவர்களுக்கு நினைவு வணக்க நிகழ்வு

13.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான இன்றைய நாள் புதன்கிழமை யாழ். தீவகம் அல்லைப் பிட்டியில் முள்ளிவாய்க்காலில் படுகொலையானவர்களுக்கு நினைவு வணக்கம் செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

இதன் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர

களின் நினைவாக அல்லைப்பிட்டி பங்குத் தந்தையால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

அத்தோடு அல்லப்பிட்டி சேமக் காலையில் காணப்படும் அல் லைப்பிட்டி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்டவர் களுக்கும் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி வணக்கம் செலுத்தப் பட்டது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பரிமாற்றம்

13.05.2026

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் உண்டு உயிர் வாழ்ந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியினை நினைவு கூரும் ஆரம்ப நிகழ்வு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத் தினரால் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பொதுச் சந்தை கட்டடம் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப் பட்டது.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், வர்த் தகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகருக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி!

13.05.2026

இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் மெத்தியூ டக்வேர்த் அவர்களுக்கும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களுக்குமிடையில் முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்தில் நிலவும் நில ஆக்கிரமிப்புக்கள், விவசாயிகள் மற்றும் மீனவமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் வாழ்வாதார நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும் இதன்போது முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கி அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மூதூர் அம்மன்நகர் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

13.05.2026

முள்ளிவாய்க்கால் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை மூதூர் கிழக்கு - அம்மன்நகர் பகுதியில் புதன்கிழமை (13) மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிரிழந்தவர்களுக்காக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது நினைவேந்தல் நிகழ்வில் பொதுமக்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நில உரிமைக்காக வடக்கு, கிழக்கு ஒன்றிணைவு: முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் கலந்துரையாடல்

13.05.2026

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் கிழக்கு மாகாண நில மீட்பு வலையமைப்பினரின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நில உரிமை தொடர்பான ஒருங்கிணைந்த கள விஜயமும் ஒன்றிணைவுக் கலந்துரையாடலும் இன்று (13) நடைபெற்றன.

இந்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புகள், நில அபகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நில உரிமைக்காக செயற்பட்டு வரும் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டதுடன், முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு, கொக்குத்தொடுவாய், வட்டுவாகல் மற்றும் வற்றாப்பளை பகுதிகளைச் சேர்ந்த காணி உரிமை பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மக்களும் இணைந்திருந்தனர்.

இதன்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் வகையில் நில மீட்புக்கான ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், முல்லைத்தீவு மக்களினால் தங்களது ஆதரவும் ஒற்றுமையும் வெளிப்படுத்தப்பட்டது.

இன்றைய கலந்துரையாடலின்போது குருந்தூர் மலை விவகாரம், கொக்கிளாய் மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இடம்பெற்று வரும் நில அபகரிப்புகள், கேப்பாப்பிலவு மக்களின் காணி மீட்புப் போராட்டம், வட்டுவாகல் கோத்தாபாய கடற்படை முகாம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

அத்துடன், இனிவரும் காலங்களில் நில மீட்புக்காக வடகிழக்கை இணைக்கும் செயலணியாக ஒருங்கிணைந்து செயற்படுவது தொடர்பிலும் முக்கிய தீர்மானங்கள் மற்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை அராலியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நினைவேந்தலும்!

14.05.2026

யாழ். வட்டுக்கோட்டை அராலியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் இன்று (14) வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வு வட்டுக்கோட்டை அராலி வலி மேற்கு உறுப்பினர் ச.சபேசன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக முள்ளிவாய்கால் உயிரிழந்த உறவுகளுக்காக பொதுச் சுடர் ஏற்றப்பட்டடு வணக்கம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

வட்டுகோட்டை அராலி கறுப்பிட்டி பிள்ளயார் ஆலயபகுதி, செம் மணத்தி அராலி துறை ஆகிய இருபகுதிகளில் இந்நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கியூபெக்கில் குறைந்தபட்ச ஊதியம் உயர்வு

03.05.2026

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் குறைந்தபட்ச ஊதியம் இன்று முதல் அதிகாரப்பூர்வமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வு சுமார் 2.5 லட்சம் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கியூபெக் அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் அறிவித்தபடி, குறைந்தபட்ச ஊதியத்தில் ஒரு மணி நேரத்திற்கு 0.50 டொலர்களால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை 16.10 டொலராக இருந்த ஒரு மணித்தியால சம்பளம் 16.60 டொலராக உயர்த்தப்பட உள்ளது.

கியூபெக்கில் குறைந்தபட்ச ஊதியம் உயர்வு ; ஞரநடிநஉள ஆனைைஅரஅ றுயபந ஐள ழேற 1660ீநச உழரச

இதேவேளை, உணவகங்கள் மற்றும் மதுக்கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான ஊதியம் ஒரு மணி நேரத்திற்கு 13.30 டொலராக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த 3.11 சதவீத ஊதிய உயர்வு மூலம் மாகாணம் முழுவதும் உள்ள சுமார் 2,58,900 தொழிலாளர்கள் நேரடியாகப் பயனடைவார்கள் என்று அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஊதிய உயர்வு ஒருபுறம் மகிழ்ச்சியைத் தந்தாலும், கியூபெக்கின் சமூகப் பொருளாதார ஆய்வு நிறுவனமான ஐசுஐளு வெளியிட்டுள்ள புதிய ஆய்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாண்ட்ரியல் (ஆழவெசநயட) போன்ற நகரங்களில் ஒரு நபர் வறுமைக் கோட்டிற்கு மேல் வசதியாக வாழ வேண்டுமானால், அவர் ஒரு மணி நேரத்திற்கு குறைந்தது 30 டொலர் ஈட்ட வேண்டும் என்று அந்த ஆய்வு கூறுகிறது.

தற்போது உயர்த்தப்பட்டுள்ள 16.60 டொலர் என்பது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்காது எனச் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அல்பேர்ட்டா பிரிந்து செல்ல வேண்டுமா! மூன்று இலட்சம் கையெழுத்துகளுடன் மனுத் தாக்கல்!

07.05.2026

கனடாவிலிருந்து அல்பேர்ட்டா மாகாணம் பிரிந்து செல்ல வேண்டுமா என்பது குறித்து பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு (Referendum) நடத்தக் கோரி, சுமார் 3 இலட்சத்திற்கும் அதிக மான கையெழுத்துகள் அடங்கிய மனு தேர்தல் ஆணையத் திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

“ஸ்டே ஃப்ரீ அல்பேர்ட்டா“ (Stay Free Alberta) அமைப்பின் தலைவர் மிட்ச் சில்வெஸ்டர், திங்கள்கிழமை எட்மண்டனில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்தில் இந்த மனுவை அளித்தார்.

சட்டப்படி 1.78 இலட்சம் கையெழுத்துகள் தேவைப்படும் நிலையில், தாங்கள் 3,00,000-க்கும் அதிகமான கையெழுத்துகளைச் சேகரித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருவேளை இந்த மனு அங்கீகரிக்கப்பட்டால், வரும் அக்டோபர் மாதம் தேர்தல் வாக்குகளுடன் இந்தப் பிரிவினை குறித்த கேள்வியும் இடம்பெற வாய்ப்புள்ளது.

பழங்குடியின மக்களின் (First Nations) உரிமைகளை இது மீறுவதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு விரைவில் வரவுள்ளது.

முன்னாள் துணைப் பிரதமர் தாமஸ் லுகாசுக் தலைமையிலான “ஃபாரெவர் கனடியன்” (Forever Canadian) என்ற குழு, அல்பெர்ட்டா கனடாவுடனேயே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஏற்கனவே 4.56 இலட்சம் கையெழுத்துகளைச் சமர்ப்பித்துள்ளது.

வாக்காளர்களின் தனிப்பட்ட விவரங்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டதாக எழுந்துள்ள புகாரைத் தொடர்ந்து, இந்த மனுவில் உள்ள கையெழுத்துகளை மிகவும் தீவிரமாகச் சரி பார்க்கப் போவதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கையெழுத்துகளின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்ட பிறகு, இந்த மனு மாகாண சட்டசபையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் மூலம் கனடா அரசியலில் ஒரு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நான்கு முக்கிய விமானச் சேவைகளை முன்கூட்டியே நிறுத்துகிறது ஏர் கனடா!

07.05.2026

சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை கடும் உயர்வைச் சந்தித்துள்ளதை அடுத்து, இந்த கோடைகாலத்தில் திட்டமிடப்பட்டிருந்த நான்கு முக்கிய காலமுறை விமானச் சேவைகளை முன்கூட்டியே நிறுத்த உள்ளதாக ஏர் கனடா நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரான் போர் தொடங்கியதிலிருந்து விமான எரிபொருளின் விலை இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளதே இந்த அதிரடி முடிவுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

ரொரான்ரோவிலிருந்து சேக்ரமெண்டோ மற்றும் சார்லஸ்டன் ஆகிய நகரங்களுக்கும், வான்கூவரிலிருந்து ராலே நகருக்கும், மாண்ட்ரியலிலிருந்து ஆஸ்டின் நகருக்கும் இயக்கப்படும் விமானச் சேவைகள் இதனால் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடங்களில் மீண்டும் முழுமையான சேவைகளை வழங்க 2027ஆம் ஆண்டு கோடைக்காலம் வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பயணிகளைத் தொடர்பு கொண்டு மாற்றுப் பயண ஏற்பாடுகள் அல்லது முழுத் தொகையையும் திரும்பப் பெறுவதற்கான வசதிகள் செய்து தரப்படும் என ஏர் கனடா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம், ரொரான்ரோ மற்றும் மாண்ட்ரியலில்

இருந்து நியூயார்க்கின் ஜே.எஃப்.கே விமான நிலையத்திற்கான சேவைகளை அக்டோபர் 25 வரை இந்நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தியிருந்தது.

இதற்கிடையில், வெஸ்ட்ஜெட் (WestJet) நிறுவனமும் எரிபொருள் செலவைக் கட்டுப்படுத்த தனது விமானச் சேவைகளை மே மாதத்தில் 3 சதவீதமும், ஜூன் மாதத்தில் 6 சதவீதமும் குறைக்கப் போவதாக அறிவித்துள்ளது. எரிபொருள் விலை யேற்றம் காரணமாக கனடாவின் வான்வழிப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் பயணிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

கனடாவின் ஒன்ராறியோவில் ஆறாவது ஆண்டை எட்டிய தமிழின அழிப்பு அறிவூட்டற்கிழமை!

12.05.2026

கனடாவின் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் 2021 ஆம் ஆண்டு 'சட்டமூலம் 104' நிறைவேற்றப்பட்டதனூடாகத் தொடங்கப்பட்ட '**தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை' [மே 12 – 18]**, இந்த 2026 ஆம் ஆண்டு தனது ஆறாவது ஆண்டை எட்டியுள்ளது. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த மனிதப் பேரவலத்தையும், 1,69,796 க்கும் அதிகமான உயிர்கள் கொல்லப்பட்டும் காணாமலும் ஆக்கப்பட்ட துயரத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் ஒரு வரலாற்று ஊடகமாக இவ் வாரம் அமைகிறது.

"கல்வி என்பது கடந்த கால நினைவுகளைப் பாதுகாக்கவும், தழும்புகளை ஆற்றவும் நம்மிடமுள்ள மிக வலிமையான கருவி" என இச்சட்டத்தை முன்மொழிந்த அமைச்சர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தியதற்கிணங்க, ஒன்ராறியோவின் முன்னணி கல்விச் சபைகள் இவ்வாண்டும் இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளன.

ஒன்ராறியோ மாநிலத்தில் '**சட்டமூலம் 104**' நிறைவேற்றப்பட்ட நாள்முதல், தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை கல்விச் சபைகளின் மட்டத்திலும் படிப்படியாக விரிவடைந்து வரும் அங்கீகாரத்தைப் பெற்றுவருகிறது. ரொரான்ரோ கல்விச் சபை (TDSB), ரொரான்ரோ கத்தோலிக்க கல்விச் சபை (TCDSB), யோர்க் பிராந்திய கல்விச் சபை (YRDSB), பீல் பிராந்திய கல்விச் சபை (PDSB), டூரம் பிராந்திய கல்விச் சபை (DDSB) மற்றும் ஒட்டாவா கத்தோலிக்க கல்விச் சபை (OCSB) உள்ளிட்ட மாநிலத்தின் பல முன்னணி கல்விச் சபைகள் கடந்த ஆண்டுகளில் குறைந்தது ஒருமுறையாவது தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து வரலாற்றுப் பதிவை உருவாக்கியுள்ளன.

அதேவேளை, வோட்டர்லூ (Waterloo), லாரியர் (Laurier), மெக்மாஸ்டர் (McMaster), யோர்க் (York) மற்றும் ரொரான்ரோப் பல்கலைக்கழகம் (UofT) போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் இயங்கும் தமிழ் மாணவர் அமைப்புகளும் ஒவ்வோர் ஆண்டும் இந்த வாரத்தை உணர்வுபூர்வமாக அனுசரித்து வருகின்றன. இவ்வாறாக, கல்வி நிறுவனங்களின் இந்த தொடர்ச்சியான அங்கீகாரங்கள், முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் வரலாற்றை இளைய தலைமுறையினரிடையே நிலைநிறுத்துவதோடு, நீதி மற்றும் நினைவுகூர்தலுக்கான உலகத் தமிழர் குரலை மேலும் வலுப்படுத்தி வருகின்றன.

இந்த அறிவூட்டற் கிழமையின் மிக முக்கியமான மற்றும் உணர்வுப்பூர்வமான அங்கமாக, பிராம்டனில் நிறுவப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் திகழ்கிறது. வகுப்பறைகளில் பாடநூல்கள் வழியாகக் கற்கும் வரலாற்றிற்கு இந்நினைவகம் ஒரு நேரடிச் சான்றாக விளங்குவதால், மாணவர்கள் திரளாக இங்கு வருகை தந்து தமது தேடல்களுக்கான விடைகளையும் ஆழ்ந்த புரிதலையும் பெற்றுச் செல்கின்றனர். அதுமட்டுமன்றி, புலம்பெயர் தேசங்களின் பிற நாடுகளிலிருந்து இங்குள்ள தமிழ் உறவினர்களைக் காண வரும் குடும்பங்கள் கூட, தமது பிள்ளைகளுடன் இந்நினைவகத்துக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்துவதைத் தமக்கான ஒரு கடமையாகக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு, கல்விச் சபைகளின் அங்கீகாரமும், மக்களின் உணர்வுகளோடு இணைந்த இந்நினைவகமும் நீதிக்கான நமது இடைவிடாத போராட்டத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் ஒரு மாபெரும் அடையாளமாகத் திகழ்கிறது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

தமிழ் நாட்டுச் செய்திகள்

தமிழ்நாடு தேர்தல் முடிவுகள்: நடிகர் விஜய் தலைமையிலான 'தவெக' 108 இடங்களில் வெற்றி; ஆனால் பெரும்பாண்மை இல்லை!

04.05.2026

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத மும்முனைப் போட்டி உருவாகிய நிலையில், நடிகர் விஜய் தலைமையிலான தவெக (TVK) முக்கிய அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது.

முதல் முறையாக தேர்தலை சந்தித்த தவெக, சுமார் 30% வாக்குகளைப் பெற்று 108 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

மும்முனைப் போட்டி இதன் மூலம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரு பெரிய கட்சிகளையும் பின்னுக்கு தள்ளி, தனிப்பெருங் கட்சியாக உருவெடுத்துள்ளது.

ஆனால், தமிழக சட்டமன்றத்தில் ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவைப்படும் நிலையில், தவெகவிடம் தற்போது 108 இடங்கள் மட்டுமே இருப்பதால் "தொங்கு சட்டசபை" சூழல் உருவாகியுள்ளது.

தமிழ் நாட்டு முதலமைச்சராக த.வெ.க. தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்பு

10.05.2026

இருபெரும் திராவிட கட்சிகள் 69 ஆண்டு காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்த நிலையில், புதிய அரசை அமைத்து முதலமைச்சராக தவெக தலைவர் விஜய் பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு பொறுப்பு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ஆளுநர் முன்னிலையில் விஜய் ரகசிய காப்பு பிரமாணமும் எடுத்துக் கொண்டார்.

விஜயைத் தொடர்ந்து ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட 9 பேரும் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

முதலமைச்சரின் முதல் கையெழுத்தாக, தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளிலும் இரு மாதங்களுக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் உத்தரவு அமைந்தது.

இதனைத் தொடர்ந்து, போதைப்பொருள் தடுப்புக்கு மாவட்டந் தோறும் சிறப்புப் படை, பெண்கள் பாதுகாப்பு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ஆகிய உத்தரவுகளையும் விஜய் பிறப்பித்துள்ளார்.

இதையடுத்து தனது முதல் உரையில் விஜய், "மக்கள் நலன்களை மட்டுமே லட்சியமாக கொண்ட நம் அரசுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க் கட்சி தலைவர் சகோதரர் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், தமிழ்நாடு தலைவர் செல்வப்பெருந்தகை, பிரவீண் சக்ரவர்த்தி உள்ளிட்டோருக்கு நன்றி. இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட தவெக அரசுக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளின் தலைவர்களுக்கு நன்றி" என்றார்.

மேலும் மக்கள் எனக்கு கொஞ்சம் அவகாசம் தந்தால் உதவியாகவும் ஒத்துழைப்பாகவும் இருப்பேன். பெண்கள் பாதுகாப்பு கடுமையாக கடைபிடிக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை இன்றிலிருந்தே எடுப்பேன். நம் பிள்ளைகளை அதிலிருந்து காக்க வேண்டியது அரசின் பொறுப்பு. எல்லோருக்கும் சட்டம்-ஒழுங்கை உறுதிசெய்வேன்." என்றார்.

"என்னை கஷ்டப்படுத்தியவர்களாக இருந்தாலும், நண்பர்கள், எதிரிகள் யாராக இருந்தாலும் 8 கோடி மக்களும் என் மக்களே.

கல்வி, ரேஷன், மருத்துவம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு முதன்மை கவனம் செலுத்தப்படும்.

மக்களின் பணம் எனக்கு தேவையில்லை. தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், என் அரசில் இருப்பவர்களாக இருந்தாலும் விடமாட்டேன்.

'நாம் ஜெயித்துவிட்டோம்' என ஆட்டம் ஆடலாம் என நினைத்தால் அந்த எண்ணத்தை இப்போதே மனதிலிருந்து எடுத்து விடுங்கள். எங்களுக்கு வாக்களித்த ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் நன்றி" என விஜய் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பேரறிவாளன் வழக்கறிஞர் பதிவை நிறுத்தக் கோரிய காங்கிரஸ் எம்.பி வழக்கு: உயர் நீதிமன்றம் நிராகரிப்பு

13.05.2026

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனை அனுபவித்து, உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பேரறிவாளனின் வழக்கறிஞர் பதிவை நிறுத்தி வைக்கக் கோரி மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.பி. சுதா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவர் கூறியிருந்ததாவது: விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பில் இருந்தவர், ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புடையவர் பேரறிவாளன். அவரை கருணை அடிப்படையில் உச்ச நீதிமன்றம் விடுவித்துள்ளதே தவிர, குற்றமற்றவர் என்று அல்ல.

எனவே, தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சிலில் கடந்த ஏப்.24 அன்று வழக்கறிஞராக பதிவு செய்து கொண்ட பேரறிவாளனின் பதிவை நிறுத்தி வைத்து, பதிவை ரத்து செய்யவும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எல்.விக்டோரியா கவுரி, என்.செந்தில்குமார் அமர்வு, எதிர் மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கேட்காமல் இந்த வழக்கில் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்று கூறி, மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்தனர்.

ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு - வெறுப்புக்களற்ற, உணர்வுகளுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

மே 18ஆம் திகதியை ‘இனப்படுகொலை’ நாளாக அறிவிக்குமாறு தமிழ் நாட்டுச் சட்டமன்றில் கோரிக்கை!

13.05.2026

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட மே 18 ஆம் திகதியை இனப் படுகொலை நாளாக அறிவிக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் வன்னியரசு தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முதலமைச்சர் விஜய் ஆட்சியின் மீதான பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று (13) நடத்தப்பட்டது.

இதன்போது தமிழக வெற்றிக்கழக அரசுக்கு ஆதரவு தெரிவித்த விசிக சட்டமன்ற உறுப்பினர்கள் வன்னியரசு தமிழக அரசிடம் பல்வேறு கோரிக்கை முன்வைத்தனர்.

தங்களது தரப்பில் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினாலும் சில முக்கியத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என

கோரிக்கை விடுக்கிறோம் என்று அவர் தெரிவித்தார்

தமிழக அரசு ஜோதிடம், பில்லி சூனியம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது, அதேபோல மூடநம்பிக்கைகளுக்கு எதிராக சட்டம் இயற்ற வேண்டும், அறிவியலுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்றும் வன்னியரசு பேரவையில் கோரிக்கை வைத்தார்.

தமிழகத்தில் நடக்கும் ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனி சட்டம் வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருக் கிறார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட மே 18ஆம் திகதி இனப் படுகொலை தினமாக அறிவிக்க வேண்டும் என்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப் பினர் வன்னியரசு வேண்டுகோள் விடுத்தார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

ஈரான் போரால் ஏற்பட்ட பதிப்பு; அமெரிக்காவின் பிரபல விமான நிறுவனம் மூடல்!

02.05.2026

அமெரிக்காவின் குறைந்த கட்டண விமான சேவை நிறுவனமான Spirit Airlines தனது அனைத்து விமான சேவைகளையும் நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

2026 மே 2ஆம் திகதி முதல் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்படுவதுடன், வாடிக்கையாளர் சேவையும் முழுமையாக நிறுத்தப்படுவதாக நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"மிகக் குறைந்த கட்டணத்தில் விமான சேவை வழங்கி 34 ஆண்டுகளாக துறையில் பங்களித்ததில் பெருமை கொள்கிறோம்.

எங்களின் பயணிகளுக்கு தொடர்ந்து சேவை செய்ய விரும்பினோம்" என நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மேற்காசியப் போர் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் விலையுயர்வு மற்றும் கடுமையான நிதி நெருக்கடி இந்த முடிவுக்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்பதிவு செய்த பயணிகளுக்கு டிக்கெட் பணம் திருப்பி வழங்கப்படும் என்றும், மாற்று விமான சேவைகளை பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த முடிவால் சுமார் 17,000 பணியாளர்கள் வேலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. இதில் 14,000 நிறுவன பணியாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்களும் அடங்குவர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இருமுறை திவாலாக அறிவிக்கப்பட்ட இந்த நிறுவனம், மீட்பு முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது.

குறிப்பாக டிரம்ப் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்ய முயற்சிகள் நடந்தபோதும், கடன் வழங்குவோர் மற்றும் விமானத் துறை தரப்பில் எதிர்ப்பு எழுந்ததால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு அமெரிக்க விமானப் போக்குவரத்து துறையிலும் பயணிகளிடையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நேட்டோ ஆதரவு பெற்ற ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி வருகிறோம்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்

09.052026

சனிக்கிழமையன்று மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற சுருக்கப்பட்ட இராணுவ அணிவகுப்பில் உரையாற்றிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், உக்ரைனில் உள்ள ரஷ்ய வீரர்கள், நேட்டோவின் அனைத்து நாடுகளின் ஆதரவு பெற்ற ஒரு ஆக்கிரமிப்பு சக்திக்கு எதிராகப் போராடி வருவதாகக் கூறினார்.

பாரம்பரியமான வெற்றி நாள் அணிவகுப்பு, இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியின் தோல்வியை நினைவுகூருகிறது. அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட காட்சிகளில், வீரர்கள் ரஷ்யக் கொடியை ஏந்தியபடி சதுக்கத்திற்குள் அணிவகுத்துச் செல்வது காட்டப்பட்டது. உலக நிகழ்வுகள்

வெற்றி எப்போதுமே நம்முடையதாக இருந்துள்ளது, இனியும் நம்முடையதாகவே இருக்கும், என்று புதின் தனது உரையில் கூறினார். நமது மன உறுதி, துணிவு மற்றும் வீரம், நமது ஒற்றுமை, எதையும் தாங்கிக்கொண்டு எந்தவொரு சவாலையும் வெல்லும் திறன் ஆகியவையே வெற்றிக்குத் திறவுகோல் ஆகும்.

உக்ரைனில் உள்ள ரஷ்ய வீரர்கள், முழு நேட்டோ கூட்டமைப்பின் ஆயுதங்கள் மற்றும் ஆதரவுடன் செயல்படும் ஒரு ஆக்கிரமிப்புப் படையை எதிர்கொள்கின்றனர் என்று கூறிய அவர், அவர்கள் ஒரு நியாயமான காரணத்திற்காகப் போராடுகிறார்கள் என்று தாம் நம்புவதாகவும் மேலும் கூறினார்.

இந்த அணிவகுப்பில் கலந்துகொண்ட வெளிநாட்டுத் தலைவர்களில் மலேசியாவின் மன்னர் சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர், லாவோஸ் அதிபர் தோங்லுன் சிசோலித், கஜகஸ்தானின் அதிபர் காசிம்-ஜோமார்ட் டோகாயேவ், உஸ்பெகிஸ்தானின் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ் மற்றும் பெலாரஸின் தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ ஆகியோர் அடங்குவர்.

சனிக்கிழமையன்று மாஸ்கோவிற்கு வருகை தந்த ஒரே ஐரொப் பிய ஒன்றியத் தலைவர் ஸ்லோவாக்கியப் பிரதமர் ராபர்ட் ஃபிகோ ஆவார், ஆனால் அவர் அணிவகுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கிரெம்ளினில் நடந்த சந்திப்பின்போது, உங்கள் பயணத்தில் சில சிரமங்கள் இருந்தன என்பது எனக்குத் தெரியும் என்று புதின் ஃபிகோவிடம் கூறினார்.

ஆனால் நீங்கள் இங்கே இருப்பதுதான் முக்கியமான விஷயம் என்று கூறிய அவர், ஸ்லோவாக்கியாவின் எரிசக்தி தேவைகளை ரஷ்யாவால் பூர்த்தி செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

உலகம் அழிவுச் சூழலுக்கு செல்வதாகப் போப் லியோ கடும் எச்சரிக்கை!

14.05.2026

உலகெங்கிலும் போர்கள் அதிகரித்து வரும் நிலையில், அதிகரித்து வரும் இராணுவச் செலவீனங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் தாக்கம் குறித்து போப் லியோ ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளதாக அல்ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

ரோமில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களிடையே உரையாற்றிய போப் லியோ, ஐரோப்பிய நாடுகளின் இராணுவச் செலவீனங்கள் பனிப்போர் காலத்திற்குப் பிந்தைய உச்சத்தை எட்டியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

2025 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் இராணுவச் செலவினம் 14 சதவீதம் அதிகரித்து 864 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான முதலீடுகளை குறைத்து, இராஜதந்திரத்தின் மீதான நம்பிக்கையை குறைத்து ஆயுதங்களை அதிகரிப்பதை "தற்காப்பு" என அழைக்கக் கூடாது என வலியுறுத்தினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் பொது நலனுக்கு பயனளிக்காமல், மேல்தட்டு வர்க்கத்தை மட்டுமே வளப்படுத்தும் நிலை உருவாகும் என அவர் விமர்சித்தார்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல்கள் தொடர்பாகவும் போப் லியோ கருத்து வெளியிட்டுள்ளதாகவும், இதன் பின்னணியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவரது கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், யுக்ரைன், காசா, லெபனான் மற்றும் ஈரான் ஆகிய பகுதிகளில் நடக்கும் மோதல்கள், போர் மற்றும் நவீன தொழில் நுட்பத்தின் இணைப்பால் உருவாகும் "மனிதநேயமற்ற பரிணாமத்தை" வெளிப்படுத்துகின்றன என அவர் எச்சரித் துள்ளார்.

இந்த நிலை உலகை "அழிவுச் சூழலுக்கு" இட்டுச் செல்லும் அபாயம் உள்ளதாகவும் போப் லியோ வலியுறுத்தியுள்ளார்.

www.sangathamil.com

மாண்புமிகு திரு ஜோசப் விஜய் அவர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் வாழ்த்துச் செய்தி

விசுவநாதன் ருத்ரகுமாரன், பிரதமர், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

11.05.2026

மாண்புமிகு திரு ஜோசப் விஜய்,
தமிழ் நாடு முதலமைச்சர்,
தமிழ் நாடு

மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் விஜய் அவர்கட்கு,

தமிழ் நாடு மாநில அரசின் முதலமைச்சராக தாங்கள் பொறுப்பேற்றமை குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டு மக்கள் மட்டுமல்ல ஈழத் தமிழ் மக்களும், உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தலைநிமிர்ந்து வாழ ஆவன செய்வீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

சிறீலங்கா தொடர்பான விடயங்களில் தமிழ் நாட்டு அரசை கலந்தாலோசித்து வெளியுறவுக் கொள்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், இந்திய தூதுவராக தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், ஈழத்தமிழருக்கான நிரந்தரத் தீர்வை கொண்டுவர பொதுவாக்கெடுப்பை நடாத்த வேண்டுமென்றும் நீங்கள் தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்திய நிலைப்பாடு, இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடனும், இறைமையுடனும் வாழ வழிவகை செய்யத் துணை புரியக் கூடிய வகையில் தங்கள் ஆட்சிக் காலத்தில் செயல் வடிவம் பெறும் என நம்புகிறோம். மேலும் கச்சதீவு விடயம் குறித்தும், மீனவர்கள் தொடர்பான விடயத்தில் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் மீனவர்களுடன் இணைந்து போராடுவோம் என்ற உங்கள் நிலைப்பாட்டையும் நாம் வரவேற்கிறோம்.

ஈழத்தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினதும், ஈடுசெய் நீதியின் அடிப்படையிலும் தமது அரசியற் தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கான நீதியானதொரு போராட்டத்தில் ஈடுட்டு வருவதனைத் தாங்கள் அறிவீர்கள். இப் போராட்டத்துக்கான ஆதரவை இந்திய ஒன்றிய அரசினதும், உலக அரசுகளினதும் ஆதரவைத் திரட்ட உங்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும் என நம்புகிறோம். மேலும். உங்கள் ஆட்சிக் காலத்தில் உலகத்தமிழர்கள் இந்து சமுத்திர அரசியலில் ஒரு வலுமையமாக பரிணமிப்பார்கள் என நம்புகிறோம்.

இவ்வேளயில், 2015 ஆம் ஆண்டில், சிறீலங்கா இனவழிப்புக் குற்றத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட கையெழுத்துப் போராட்டத்திற்கு நீங்கள் வழங்கிய ஆதரவையும். உங்கள் ஆதரவைத் தொடர்ந்து பெருகிய பல்லாயிரக்கணக்கான கையெழுத்துக்களை இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இதேவேளை. ஈழத் தமிழ் மக்கள் சார்பில் இரண்டு கோரிக்கைகளை இச் சந்தர்ப்பத்தில் தங்கள் கவனத்துக்கு முன் வைக்கிறோம்.

1. ஈழத் தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு. தேசிய துக்க நாளாக நினைவு கூரப்படும் மே 18 ஆம் திகதியன்று தமிழ்நாடு அரசு சார்பில் ஒரு நினைவேந்தல் நிகழ்வு செய்து ஈழத் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

2. ஏற்கனவே தமிழ் நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட, ஈழத் தமிழ் மக்களின் அரசியற் தீர்வுக்கான பொதுவாக்கெடுப்பு, சிறீலங்கா அரசின் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பு குறித்து அனைத்துலக நீதி விசாரணை ஆகிய இரு தமிழ் நாடு சட்டசபைத் தீர்மானங்களாக நடைமுறையில் செயல்வடிவம் பெறுவதற்கான செயற்திட்டத்தை தமிழ் நாடு அரசின் செயற்திட்டங்களுடன் இணைத்து இவ்விரு கோரிக்கைகளும் வலுப்பட உறுதுணையாக இருக்குமாறும் வேண்டுகிறோம்.

எமது இக் கோரிக்கைகள் குறித்து சாதகமான முடிவுகளைத் தாங்கள் எடுப்பீர்கள் என ஈழத் தமிழ் மக்கள் சார்பில் நாம் எதிர்பார்க்கிறோம்.

நன்றி
தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

சுதந்திரம் இல்லையேல் நிம்மதியாக வாழமுடியாது

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும், முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரிகம் தொடங்கிய காலந்தொட்டு இன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்திவருகிறது; யுத்தங்கள் புரிந்து இருக்கிறது; புரட்சிகள் செய்து இருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழமுடியாது. சமாதானமாக வாழமுடியாது. சந்தோசமாக வாழமுடியாது. சுதந்திரத்தை வன்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழ வேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி இல்லை.

இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள்; அல்லாவிடில் இந்தியா இருக்கிறது, எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத் தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்து விட்டால் எமக்கு சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப் பங்களிப்பின்றி எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம் என்பதே மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம். எமது எதிரியோ தனது ஆயுதப்படைகளை எமக்கு எதிராக ஏவி விட்டதுமன்றி சிங்கள வெகுசனத்தையும் தமிழ ருக்கு எதிராக அணிதிரட்டுகிறான். சிங்கள மக்களுக்கு இனவெறியூட்டி, போர்வெறியூட்டி ஆயுதம் தரித்த ஒரு இன யுத்தத்திற்குத் தயார் படுத்துகின்றான். இந்த அதர்ம யுத்தத்திற்கு சிங்கள மக்களிடமிருந்து நிதி திரட்டுகிறான். சிங்கள மக்களும் கோடிக்கணக்கில் பாதுகாப்பு நிதியென்று வாரிவழங்குகிறார்கள். முழுச் சிங்கள தேசமுமே ஒரு இன யுத்தத்திற்கு தயார்நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழராகிய எமது நிலைதான் என்ன?

இன ஒழிப்பின் விளிம்பில் நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச் சியோ, வீராவேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத் தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து, ஒழிந்து, ஒழிந்து, செத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகொடுத்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப் போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் ஒவ் வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்துபோன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாற வேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக்கடமை. இதில் ஒவ்வொரு வருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப்பெற்று சமூக உணர்வும் பிறக்கவேண்டும். பணத்தை முடக் காமல், உணவுப்பண்டங்களை பதுக் காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங் கருதாமல் வசதி படைத்தோர் வசதியற் றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய பகிர்ந்துகொள்ள இனமுமே வேண்டும்.

('எமது மக்களின் விடுதலைக்காக' நூலிலிருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும் பொன் நகை மிந்தும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

— தாயகத்திலிருந்து வருகை தந்திருக்கும் —
தமிழ்த் தேசிய
மக்கள் முன்னணியின்
— கொள்கை பரப்புச் செயலாளர் —
திரு. நடராஜர்
காண்டீபன்
மூத்த சட்டத்தரணி
அவர்களுடனான
கலந்துரையாடல்
"முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையும்
தமிழர் தேசத்தின் எதிர்கால அரசியலும்"
காலம்
16/05/2026
சனிக்கிழமை
நேரம்
5.00 PM
இடம்
5637 Finch Ave East
Toronto, ON M1S 5K9
TORONTO, CANADA
தொடர்புகளுக்கு
647 712 1937 | 416 909 7805
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

K
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Bridal
Non- Bridal
Saree Pleating &
Draping
Hair Flowers &
Bouquet
and more.
Kurinchi
Beauty Creations
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

முள்ளிவாய்க்கால் எப்போதும் முற்றுப்புள்ளி ஆகாது...

முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...
முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...

ஆண்ட இனம் தான் எப்போதும் – ஆளாமல் வீழாது...
தமிழ் ஈழப் போராட்டம் – விடியாமல் முடியாது...
ஆண்ட இனம் தான் எப்போதும் – ஆளாமல் வீழாது...
தமிழ் ஈழப் போராட்டம் – விடியாமல் முடியாது...
முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...

காயம் பட்டக் கனவினை – தூக்கிக் கொண்டு போனோம்...
எம் ஈழ மண்ணில் உயிரை விட்டு – எலும்புக்கூடாய் நடந்தோம்...
காயம் பட்டக் கனவினை – தூக்கிக் கொண்டு போனோம்...
எம் ஈழ மண்ணில் உயிரை விட்டு – எலும்புக்கூடாய் நடந்தோம்...
உறவுகள் துறந்து விட்டு – இரவுகள் சுமந்தோம்...
எம் முகவரி இழந்து விட்டு அகதியாய்த் திரிந்தோம்...
மரணத்தைக் கழுத்திலே கட்டிக் கொண்டு கடந்தோம்.
எம் தேசத்திற்கு மரணத்தை தாய் மண்ணிலே விதைத்தோம் – தாய் மண்ணிலே விதைத்தோம்.

முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...

தொலைந்த எங்கள் வாழ்வைத் தேடி அலைந்து திரிந்து தேய்ந்தோம்...
எம் கறை படிந்த கனவு தன்னை – அழுகையில் கரைத்தோம்...
தொலைந்த எங்கள் வாழ்வைத் தேடி அலைந்து திரிந்து தேய்ந்தோம்...
எம் கறை படிந்த கனவு தன்னை – அழுகையில் கரைத்தோம்...
வாடகைக்கு காற்று வாங்கி – வாழ்க்கை வாழ்ந்தோமே...
இனி வாழ்ந்த எங்கள் வாழ்வு தன்னை – நினைவில் வைப்போமே...
சுவாசிக்க மூச்சுக்காற்றும் – கந்தகத்தில் கரைந்தது...
நினைத்துக் கிடந்த கடவுள் கூட இரங்கவில்லையே... மனம் இரங்கவில்லையே...

முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...

ஆண்ட இனம் தான் எப்போதும் – ஆளாமல் வீழாது...
தமிழ் ஈழப் போராட்டம் – விடியாமல் முடியாது...
ஆண்ட இனம் தான் எப்போதும் – ஆளாமல் வீழாது...
தமிழ் ஈழப் போராட்டம் – விடியாமல் முடியாது...
முள்ளவாய்க்கால் எப்போதும் – முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் – செல்லரித்து போகாது...

நன்றி: பாடலாசிரியர் (வரிகள்): கவிஞர் கவிபாஸ்கர்

வரலாறு சொல்லும் பாடம்

தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –



விடுதலைப்புலிகள், பிரேமதாசா பேச்சுவார்த்தை

அவமானத்தோடு திரும்பியது இந்தியப்படை

சிறீலங்கா வெளிநாட்டு இராணுவ உளவுத்துறையினை ஏற்கவே கூடாது. இந்திய நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலே, திருமலைத் துறைமுகத்தை வேறு ஒருவர் பாவிக்க அனுமதிக்கக் கூடாது. திருமலை எண்ணெய்க் களஞ்சியம் இந்திய இலங்கை கூட்டுமுயற்சியாக இருக்கவேண்டும். வெளிநாட்டு ஒலிப்பரப்பு நிறுவனங்களுக்கு ஒலிப்பரப்பு வசதிகளைத் தவிர்ந்த இராணுவ உளவுத்துறைக்கு பயன்படுத்தும் வசதிகள் வழங்கப்படக்கூடாது. என்ற தனது நலன் தொடர்பான உடன்படிக்கைகூட நிறைவேறாத நிலையில், இந்தியப்படை இராணுவ அரசியல் தோல்விகளோடு இந்தியா திரும்பியது.

பிரேமதாசா தமிழர் பிரதிநிதிகளான புலிகளுடன் பேசி ஒரு சண்டை நிறுத்த உடன்படிக்கைக்கு வந்திருந்தார். இராணுவ வல்லமையால் நியாயம் அற்றமுறையிலே தேர்ந்து எடுக்கபட்டவர்களால் ஆளப்படும் வடக்குகிழக்கு மாகாணசபையைக் கலைப்பது. அரசியல் யாப்பில் 06ஆவது திருத்தத்தை நீக்குவது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது எனப் புலிகளோடு அவர் ஒருப்பட்டிருந்தார். அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத்த நீக்கம் புலிகளின் மீதான தடையை நீக்குவதோடு தாயகம் பற்றிய அமைதியான தீர்வுக்கு வழி வகுக்கக்கூடும் என்றும் தமிழ் மக்கள் நினைத்தனர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியது

ஆனால், இந்தியப்படை விலகியதும் அதிபர் பிரேமதாசா தனது சிங்கள பௌத்த பேரினவாதத்தை வெளிக்காட்டத் தொடங்கினார். புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே பேச முடியும் என்றும், அதுவரை மாகாணசபைத் தேர்தல் நடைபெறாது என்றும் பாதுகாப்பு அமைச்சர் றஞ்சன் விஜேரத்ன மிரட்டத் தொடங்கினார். காலங்காலமாக பேச்சுவாத்தை ஒப்பந்தம், ஒப்பந்த முறிவு என்ற கசப்பான பாடத்தைக் கற்றறிந்த தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் ஏமாறத் தயாராகவில்லை. 1990 மே 07இல், சிங்களப்படைகளின் எறிகணை வீச்சுக்கு 12 மாணவியர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஈழப்போர் இரண்டு தொடங்கிது.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் குருதி வெள்ளத்திலே சிங்களப் பேரினவாதம் நீச்சலடிக்க, விடுதலைப்புலிகளோடு தோளோடு தோள் சேர்ந்து தமிழ் மக்கள் போராடினர். பொருண்மிய, மருந்து, உணவுத்தடைகளால் தமிழ் மக்கள் பட்ட துன்பம் கொஞ்சமல்ல. 1993 மே நாளன்று பிரேமதாசா கொழும்பிலே இடம்பெற்ற குண்டுவெடிப்பிலே கொல்லப்பட, தொடந்து அதிபராய் வந்த டி.பி.விஜயதுங்க “தமிழர்கள் கொடி சிங்களவர் மரம்” என்று இனவாதம் கக்கத்தொடங்கினார்.

அமைதிப் புறாவாக நடித்து ஆட்சியைப் பிடித்த சந்திரிக்கா

1994இல், சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பிலே அதிபர் தேர்தலுக்கு நின்றார். யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை தமிழர்களின் பிரச்சனை தீர்த்தல் என்ற வாக்குறுதிகளோடு தேர்தல் மேடைகளிலே தோன்றினார். இவரது சமாதான முழக்கம் சிங்களவர் மத்தியிலே மட்டுமல்ல தமிழர்கள் மத்தியிலும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது முன்வைத்த 04 அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்று, தமிழர் பிரச்சினைக்கு ஒரு ஏற்புடைய தீர்வை சந்திரிக்கா வழுங்கக்கூடும் என்று தமிழர்கள் எதிர்பார்த்தனர். வரலாற்றிலே இல்லாதவாறான பெரும்பான்மையோடு சந்திரிக்கா வெற்றியும் கொண்டார். அவருடைய வியத்தகு வெற்றிக்கு தமிழ் மக்களின் வாக்குகளே பெரும் காரணமாயிற்று.

சந்திரிக்கா அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தை

தேர்தலில் வென்றதும் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. பேச்சுவார்த்தையும் தொடங்கியது. அரசியற் சிக்கல்களைப்பற்றி ஆராய்வதற்கு முன்னர் தம்முடைய அன்றாடச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட இயல்பு நிலை தோற்றுவிக்கப்படவேண்டும் எனத் தமிழர் தரப்பு வலியுறுத்தியது. பொருண்மிய, மருந்துவ, வாழ்வியல், தடைகளின் உச்சத்தை உய்த்துணைதந்து உருக்குலைந்த தமிழர்கள், தம்மீது விதிக்கப்பட்ட இந்தத்தடைகள் நீக்கப்பட்ட இயல்பு நிலையிலேதான் உறுதியான பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியும் என்று வாதிட்டது, இயல்பு நிலையை மீறிய செயலல்ல. சந்திரிக்கா அரசின் சார்பிலே பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தவர்கள் எவருமே. தாமாக ஒரு முடிவை எடுக்கக்கூடியவர்களாக இருக்கவில்லை. பேச்சுவார்த்தையின் போது முன் வைக்கப்பட்ட ஒவ்வொரு முன்மொழிவுக்கும் கொழும்பிலே முடிவு செய்து சொல்கின்றோம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள். சந்திரிக்கா அரசைப் பொறுத்தவரை தமிழர்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கொண்டு வருவதற்கான எந்தவித அக்கறையையும் அது காட்டவில்லை. சில பொருட்களுக்கான தடை தளர்த்தப்பட்டதாக அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டாலும் அவை தமிழர் பகுதிக்குக் கொண்டு வரப்படுவதை அரச இராணுவமே தடுத்து நிறுத்தியது.

சந்திரிக்கா அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை

பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த காலகட்டத்தை, சந்திரிக்கா அரசு அமைதியைத் திருப்பிக் கொண்டு வரும் முயற்சிக்காகப் பயன்படுத்தவில்லை. மாறாக, வெளிநாடுகளிலிருந்து இராணுவத்துக்குத் தேவையான ஆயுத்தளபாடங்களை வாங்கிக் குவிக்கவே பயன்படுத்தியது. இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் வேலையும் மிக மும்முரமாக நடந்தது. சந்திரிக்கா அரசின் இரட்டைப் போக்குப் பற்றி, தமிழீழ விடுதலைப்புலிகள் பலவாறு எச்சரித்தனர். தமிழர்கள் அன்றாடச் சிக்கல்களுக்கான தீர்வைக் காலந் தாழ்த்தாது செய்யுமாறு பல கடிதங்கள் அவருக்கு எழுதப்பட்டன.

3ஆவது ஈழப்போர் தொடங்கியது

சந்திரிக்கா

ஆனால், பொருண்மியத்தடைகளை நீக்க சந்திரிக்கா முன்வர வில்லை. அரசியல் தீர்வுக்குப் பின்னரே அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற கடும் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். தமிழர்கள் கைவிலங்கிடப்பட்ட நிலையிலே பேசுவதற்குத் தயாராகவில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட, ஐயங்கள் அற்ற இயல்பு நிலையிலே, சமநிலையான ஒருபேச்சு வார்த்தையை அவர்கள் வேண்டினார்கள். சந்திரிக்கா யுத்த தயாரிப்புக்கான. ஒரு கால இடைவெளித் தேவையை, போலிப் பேச்சுவார்த்தை நாடகத்தால் பெற நினைக்கின்றார் என்பது, தமிழர்களுக்குத் தெளிவாகத் தெரியத் தொடங்கியதால், பேச்சு வார்த்தை முறிந்து. 1995 ஏப்பிரல் 19ஆம் நாள் ஈழப்போர் 3 தொடங்கியது.

ஓரிரவில் நடைபெற்ற வரலாறு காணாத குடா நாட்டு இடப்பெயர்வு

சிங்களப் பேரினவாதம் தமிழர்களை ஏமாற்றிய இன்னொரு



நோர்வேயின் தேசியக் கொடியை எரிக்கும் இனவெறியர்கள்

பேச்சுவார்த்தையும் முடிவுக்கு வந்தது. ஆளுங்கட்சி தமிழர்களோடு பேசும்போது எதிர்க்கட்சி எதிர்த்து ஊரைக்கூட்டி, ஊர்வலம் நடத்துவதும், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகி தமிழரோடு பேசும்போது முன்னைய ஆளும் கட்சி மூர்க்கமாக எதிர்ப்பதும் உடன்படிக்கைகளைக் கிழித்தெறிவதுந்தான். சிங்களப் பேரினவாதத் திடமிருந்து தமிழர் இதுவரை கண்டு கொண்ட அனுபவம். சந்திரிக்கா அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட கொடுமைகள் கொஞ்சமல்ல. 5 இலட்சத்துக்கு மேற்பட்ட யாழ்குடா மக்கள் 1995 ஒக்டோபரில். ஒட்டுமொத்தமாக புலம்பெயர்ந்த துயரம் இவரது ஆட்சியிலேதான் நடந்தது. கோவில்கள், பள்ளிகள் இடிப்பு. குழந்தைகள் கொலை. பொருண்மிய மருத்துவ. உணவுப் பொருட்கள் தடையென்று அடக்கு முறையின் உச்சத்தை இவர் காலத்திலே தமிழர்கள் பட்டுணர்ந்தனர். தமிழர்களைப் பொறுத்தவரை. சிங்களப் பேரினவாதத்திடம் முற்றாக நம்பிக்கை இழந்த நிலையில், தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் போரை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தமது தாயக நிலத்தையும் மீட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு தேசிய இனத்துக்கு. அதுவும் 17ஆம் நூற்றாண்டு முற்பகுதிவரை தமிழ் ஈழத்திலே தனியரசு செய்து வந்த இனத்துக்கு, தனது நிலத்தை மீட்டு தன் இறையாண்மையை நிலைநாட்டும் உரிமையுண்டு. தமிழரின் தேசியத்தை, தாயக நிலத்தை. சமத்துவ உரிமையை, பிரிந்து போகும் உரிமையை, ஏற்கத் தயங்குகின்ற, மறுக்கின்ற சிங்கள பௌத்தக் கோட்பாட்டாளரோடு இனியும் ஒருமித்து ஒரு கொடிக் கீழ் வாழ முடியாது என்ற பட்டறிந்த நிலைப்பாட்டுக்குத் தமிழர் வந்துள்ளனர்.

நியாயந் தெரிந்த உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் தமிழ் மக்கள் எப்போதும் வேண்டியே நிற்கின்றனர். போர்க் கலாசாரத்தை மறுதலிக்கும் மனப்பாங்கு, தமிழருக்கு இருக்கும் காரணத்தினாலேதான் சமாதானப் பேச்சுவார்த்தையென்பது மூன்றாந்தரப்பு ஒத்துழைப்போடும் நடுநிலையோடும் நடைபெறவேண்டு மென்று கோரினர்.

எரிக் சொல்கெய்ம்

தமிழர்கள் பல்வேறு தடவைகளில் இக்கோரிக்கையை விடுத் தாலும், உள்நாட்டுச் சிக்கல்களில் வெளியார் தலையீடு தேவையில்லை என்று சிறீலங்கா அரசு மறுத்தது. அதேவேளை, கொடிய அடக்கு முறையைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. எந்த ஒரு வடிவத்திலும் தமிழர்களுக்கான உரிமைகளைச் சிறீலங்கா அரசு தரப்போவதில்லை. ஏனெனில், சிங்கள வரது பேரினவாதமும் பௌத்த மடங்களும் தரவிடப்போவதில்லை. ஏனெனில், சிங்களவரது பேரினவாதம் வரலாற்று அடிப்படைக்குப் பதிலாக மகாவம்சம் என்ற அடிப்படையிற் கட்டப்பட்டிருக்கின்றது. ஜேம்ஸ்.கே.கரன் “தமிழ் தேசியப் போராட்டம்” என்ற தனது கட்டுரையில் கூறுவதைப் போல, அவர்களது தொடர்ந்த இருப்பையும் ஒன்றியைந்த சிறீலங்காவுக்குள் பெற் றுக் கொள்ள எல்லா வழிகளிலும் முயற்சித்துக்களைத்த பின்னர்தான், வேறு வழி ஏதும் இல்லாத நிலையில், தங்கள் மீதான இனப்படுகொலையை எதிர்ப்பதற்காக, தமிழ் மக்கள் ஆயதக் கிளர்ச்சியில் ஈடுபட நேர்ந்தது. நோர்வே அரசு, இலங்கைச் சிக்கலுக்கான தீர்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்து, தான் ஒரு மூன்றாந் தரப்பு நடுநிலையாளராகவோ, ஒத்துழைப்பாளராகவோ பணிசெய்ய முன்வந்தது. அது தொடர்பாக வெளிநாட்டமைச்சர் கொழும்புக்கு வந்து அரசோடு ஆலோசனை கலந்தார். இதனைச் சிங்கள பௌத்த பேரினவாதம் எப்படி எதிர்த்துக் கொண்டது? சிங்கள வகுப்புவாத அமைப்புக்களோடு சேர்ந்த பௌத்த துறவிகள், நோர்வே தூதுவரகத்துக்கு முன் கூடி, நோர்வேயின் தேசியக்கொடியை எரித்தார்கள். பயங்கரவாதிகளான புலிகளின் நட்பு நாடென்று. நோர்வேயை அடையாளம் காட்டினார்கள். இந்தியா முன்பு தலையிட்டபோதும் இதையேதான் கூறினார்கள். இனியும் இதையேதான் கூறுவார்கள். தமிழீழம் என்கின்ற தமது இலக்கை நோக்கி, தமிழர்களின் போராட்டம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறத் தொடங்கியது. சிறீலங்கா அரசு இன்று நட்பு நாடுகளிடம் உதவிக்கு அலைந்துகொண்டிருப்பது. பேச்சுவார்த்தை மூலம் தமிழர் பிரச்சினையை முழுமனதுடன் தீர்ப்பதற்கல்ல. இராணுவ ஆயுத உதவிகளைப் பெற்று தமிழர்களை முற்றாக அழிப்பதற்கே என்பதை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். உலக நாடுகளிடம் சிறீலங்கா எதிர்பார்க்கின்ற உதவி எத்தகையது. சிங்கள பௌத்த பேரினவாத வெறியரான பேராசிரியர் நளின் டி.சில்வா 05.03.2000 ஆம் நாளைய ஜலண்ட் பத்திரிகையில் வரைந்த கட்டுரையில் கூறுகின்றார்.

“நட்பு நாடுகளிடம் உதவி கோரும் பிரச்சினையிருக்கின்றது. ரஷ்யா, சீனா, இந்தியா அல்லது வேறு நாட்டிலிருந்து நாம் உதவி பெற்றாலும், அது ஒரு வரையறையின் பேரிலேயே இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் உதவியை வழங்க வேண்டுமேயொழிய, தமது தத்துவங்களையல்ல. எங்களுடைய சிக்கல்களை நாங்கள் விரும்பும் வழியிலே தீர்த்துக் கொள்வோம். உதவி வழங்கும் நாடுகள் விரும்பும் வழிகளிலல்ல. அவர்கள் எமக்கு உதவுவதாயின் எமக்குத் தேவையானதைத் தரட்டும். எல்.டி.டீ.யும் தமிழ் இனவாதமும் விரும்புவதையல்ல. அவர்கள் எங்களுடைய நண்பர்களாயின் அவர்கள் எல்.டி.டி.ஈஇன் நண்பர்களாக இருக்கவே முடியாது. தமிழ் இனவாதத்தின் நண்பர்கள், வேடம் போடுவதாலேயே நாம் இந்தத் துயரமான நிலையில் இருக்கின்றோம்.”

அது நளின் டி.சில்வாவின் கருத்து மட்டுமல்ல. சிங்கள பௌத்த அரசின், பௌத்த மடங்களின் கருத்தும் அதுவேதான். இதன்படி எல்.டி.டீ.யையும் தமிழர்களையும் வெறுக்கக்கூடிய சிறீலங்காவின் நண்பர்களையே, உதவியென்ற பெயரில் தமிழரை அழிக்க சிறீலங்கா அழைக்க விரும்புகின்றது. பேச்சு வார்த்தைகளைப் பொறுத்த மட்டில், மிகக் கசப்பான பாடங்களைத் தமிழர்கள் படித்துவிட்டார்கள். எந்த ஒரு உடன் படிக்கையையும் சிறீலங்கா அரசு மிக எளிதாகக் கிழித்து வீசிவிடும் என்பது தமிழர்களுக்குத் தெரியும்.

நளின் டி சில்வா

எனவே, தமிழர்களின் இயல்பு வாழ்க்கை மீள்கின்ற வரையில், போரின் முழக்கம் தமிழ் நிலத்தில் கேட்கின்றவரையில் தமிழரின் தேசிய பாரம்பரிய நில, சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைகள் ஏற்றுக் கொள் ளப்படும் வரையில், எந்த ஒரு பேச்சு வார்த்தையும் தமிழர்க்கு உவப்பானதாக இருக்காது என்பதே உண்மை. இந்த நிலைப் பாட்டில், வரலாற்று பட்டறிவுகளாலே தமிழ் மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

பேச்சுவார்த்தைக்கு முன்னோடியான இந்த அடிப்படைகள் இடப்பட்டால், அது நிலைக்கக்கூடிய உறுதியைச் சிறீலங்கா அரசு கொடுக்க முன்வந்தால் மூன்றாந் தரப்பு உதவியுடனும் உறுதியுடனும் தமிழர்கள் பேச முற்படலாம். இல்லையேல், தமிழர் தமது வரலாற்றுத் தாயகத்தை மீட்டு வாழ்வது அல்லது தன்மானத்தோடும் மதிப்போடும் சாவை எதிர்கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இந்நிலை. தன்மானம் உள்ள எந்த இனத்தவராலும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

முடிவுரை

வரலாறு சொல்லும் பாடம் என்ற இந்த நூல் 2000ஆம் ஆண்டில் எழுதப்பட்டு கல்லச்சில் வெளியிடப்பட்டது. காலத்தின், சூழ்நிலையின் தேவை கருதி இது இரண்டாம் பதிப்பாகத் தற்போது வெளிவருகிறது.

இந்நூலிலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளுக்குப் பின் கடந்த ஏழு ஆண்டுகளில் ஏராளமான மாற்றங்கள் நடந்து முடிந்து விட்டன.
குடியரசுத் தலைவர் சந்திரிக்காவால் இலங்கையில் 11ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 12ஆவது நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் ரணில் விக்கிரமசிங்க தலைமையமைச்சராகப் பொறுப்பேற்ற நிலையில், ஏற்கெனவே கட்டு நாயக்காவிலும், தீச்சுவாலையிலும் புலிகளின் தாக்குதல்களினால் அடிவாங்கி நலிந்திருந்தது சிங்கள இராணுவம். புதிய அரசு பதவியேற்றதும் நோர்வேயின் அமைதி முயற்சி தொடர்ந்தது.

அமைதிப் பேச்சு வார்த்தைக்கு நடுநிலைமையாளராகச் செயற்

www.sangathamil.com

பட நோர்வே நாடு விருப்பம் தெரிவித்ததும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வேயை அமைதி முயற்சிக்கான பேச்சு வார்த்தைக்கு நடுநிலைமையாளராகச் செயற்பட வருமாறு அழைப்பு விடுத்தார். நோர்வேயும் நடுநிலைமையாளராக இருந்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்புத்தர முன்வந்ததைத் தொடர்ந்து தலைமையமைச்சர் ரணில் விக்கிரசிங்காவுக்கும், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குமிடையில் நோர்வேயின் முயற்சியால் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. அமைதிக்கான உடன்படிக்கையின்படி தமிழர் நலன்கள் எவையும் பேணப்படவில்லை.

- உயர்பாதுகாப்பு வலயத்தைவிட்டுச் சிங்களப்படை வெளியேறவில்லை. 15 உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப் படவில்லை.
- பள்ளிகள், கோயில்கள், மற்றும் பொது இடங்களில் இருந்த படைகள் அகற்றப்படவில்லை.
- ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வில்லை.
- உடன்படிக்கையின்படி அரசியற் பணிக்குச் சென்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள், குறிப்பாகப் பெண் புலிகள் சிங்களப்படையினரால் சிறுமைப்படுத் தப்பட்டனர். இழிவு படுத்தப்பட்டனர்.
- விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப் பட்டு நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர்.
- தமிழ்மக்களின் அமைதி வழி உரிமைக்குரல்கள் படை வல்லமையால் அடக்கப்பட்டன.
- ஆறு சுற்று அமைதிப் பேச்சுக்களும் பயனின்றி இழுபட்டன.
- தீச்சுவாலையிலும், கட்டுநாயக்காவிலும் அடிபட்டு உருக்குலைந்து போயிருந்த சிங்களப்படையை விரைந்து சீர்செய்வதற்காகவே, கால இடைவெளி களைச் சிங்கள அரசு வஞ்சனையோடு பயன்படுத்து கிறது என்று பொது மக்களே பேசத்தலைப்பட்டனர்.

பேச்சுவார்த்தையை நடாத்திக் கொண்டே விடுதலைப் புலிகளி லிருந்து கருணாவை பிரித்து புலிகளை வலுவிழக்கச் செய்து கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றும் கபட முயற்சியில் ரணி லின் அரசு இறங்கியது. சீர்கெட்டிருந்த நிலைமையை மேலும் குழப்புகின்ற வகையில் குடியரசுத்தலைவர் சந்திரிக்கா, ரணி லின் ஆட்சியைக் கலைத்ததுடன், தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கக் கூடாது என்ற பிடிவாதம் பிடித்த கடும் போக்காளர் களுடன் கைகோத்துக் கொண்டு தேர்தலில் நின்று தொங்கு பாராளுமன்றத்தை அமைத்துக் கொண்டார். அதன் பின் அமைதி முயற்சிக்கான உடன்படிக்கை முற்றிலுமாக வெளிப் படையாகவே மீறப்பட்டது.

- அரசியற்பணிக்குச் சென்ற புலிகள் செல்லும் வழி களில் குறிவைத்துத் தாக்கப்பட்டனர் கொல்லப் பட்டனர். பழி துரோகி கருணாவின் மீது சுமத்தப் பட்டது.
- புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த புலி களின் முகாம் மீதும் ஆழ ஊடுருவி ஒட்டுப்படை களின் ஒத்துழைப்புடன் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.
- புலிகள் மட்டுமின்றி, தமிழர் உரிமைக்குரலை ஓங்கி ஒலித்த அரசியற்றலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.
- தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் வரிசையாகக் கொல்லப்பட்டனர். தமிழ் ஊடகங்கள் பல அச்சுறுத்த லுக்குள்ளாகின.
- தமிழ் மக்கள் உரிமைக்குரலுக்கு, அரசின் செயற் பாடுகளுக்கு தடைகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப் பட்ட நிலையில் அமைதி முயற்சியை, அதில் ஈடுபட்ட நடுநிலை நாடுகளையும் வெளிப்படையாகவே எதிர்த்து இனவெறியைக் கிளப்பிவந்தவர்களின் செயற்பாடுகளுக்கு அரசின் அனுமதியும், பாதுகாப்பும் வழங்கப்பட்டன மூன்றாவது ஈழப்போருக்கு வித் திட்டது போலவே நான்காவது ஈழப்போருக்குக்கான சூழ்நிலையையும் சந்திரிக்காவே ஏற்படுத்தினார். தன் ஆட்சிக்காலத்தை நீட்டி அரியணையில் தொடர்ந் திருக்க முற்பட்ட சந்திரிக்காவின் பெருவிருப்பில் மண்விழுந்தது.



பண்டா குடும்பத்தின் அரசியல் வாழ்வை முற்றாக ஒழித்துக் கட்டி ஆட்சியைக்கைப்பற்றும் திட்டத்தோடு செயற்பட்ட ஜே.வி.பி யினருடனும் ஹெல-உறுமயவுடனும் கூட்டணி வைத்து மகிந்த சனாதிபதியானார். 10ஆண்டுகள் நாடாண்ட சந்திரிக்கா அவமானப்படுத்தப்பட்டு அரசியலை விட்டே ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டார்.

இனவெறியர்களின் கூட்டணி மகிந்த சிந்தனையின்படி விடு தலைப் புலிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் எதிராக மட்டுமல்லாது அமைதி முயற்சிக்கு முன்னின்றுழைக்கும் நோர்வேக்கெதிராக வும், இணைத்தலைமை நாடுகளுக் கெதிராகவும், சிங்கள மக்களைத் தூண்டிவிடும் வகையிலான கிளர்ச்சிகள், ஊர் வலங்கள், பரப்புரைகளையும், நடத்துவதற்கு அனுமதியும், பாதுகாப்பும் உள்நோக்கத்துடன் வழங்கப்பட்டு வருகின்றன.

போர்நடைபெற்ற கடந்த காலங்களையும், மிஞ்சுகின்ற வகை யில் முப்படைகளும் ஏவப்பட்டு தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப் பட்டும், படுகாயங்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர்.

அறிவிக்கப்படாத (பிரகடனப்படுத்தப்படாத) பெரும் போர் தமிழ் மக்களுக் கெதிராக கடந்த 11-08-2006 அன்று முதல் நிகழ்த் தப்பட்டு வருகிறது.

இந்த ஏழு ஆண்டுகால நிகழ்வுகள் விரிவாகவும். விளக்க மாகவும் தமிழீழ மக்களுக்காக "வரலாறு சொல்லும் பாடம் - பாகம் 2" ஆக விரைவில் வெளிவர இருக்கின்றது.

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு முற்றும்



1981ஆம் ஆண்டு மே, யூன் இனப்படுகொலை

1981 ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத் தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச் சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத் தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப் பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப் புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படை களும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதி நிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப் பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ் விடத்திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிங்களக் காவற் றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட் டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப் பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப் பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாய முற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாக னங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர் முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப் புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள் ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியி லிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்ற வெளி யிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை களின் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட்டன.

House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித் திருக்கிறார்கள். நிலைமையைப் புரிந்து கொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரி யாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக் கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ் வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனி யனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட் டார்கள் என்றும், அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட் டிருந்தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

15.05.1985 குமுதினிப் படுகொலை

யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந் தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறை முகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறை முகத் துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்த போது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்ற மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பய ணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற் றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங் களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண் டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்

செல்லப்பட்டார்கள் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,

"அநுரதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப் படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற்றிலுள்ள குழந்தை "கொட்டியா"என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப் பட்டனர்".

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம், 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்தொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்தொழில்
6. தில்லைநாதன், 32, கடற்தொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்தொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்தொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்தொழில்
10. செபமாலை கிருஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுஷியா, 23, -
13. பேர்ணாட் கிறார் பூரணம், -
14. வெ.கந்தையா, 44, கடற்தொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்தொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்தொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்தொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்தொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்தொழில்
21. இராமன் முருகன், 52, கடற்தொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன் , 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்தொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்தொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, ,.போ.ச ஓட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்தொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்

பெரியபுல்லுமலை படுகொலை – 20 மே 1980

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப் பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்து மூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணி வகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணி தட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக்கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக் கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987

யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக் குடம்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங் கற்சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழி பட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெருவிருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதி மீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாய தாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்கு வானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப் போட்டதுடன், பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலாமான வீதிகள், பெரிய மர நிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7 மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00 மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக் கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர் வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தார்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந் தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்தொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14
09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி 48
12. கணேசபதி சதாகரன் கமம் 16

13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தர்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி 26
18. தம்பிஜயா றமணன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16
20. தவராசசிங்கம் கமலேஸ்வரி 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தர்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி -34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் - 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57
32. சிவனடி இராமநாதன் வைத்திய ஊழியர் - 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்தொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஜயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் - 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09
12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் -13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திரராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஜயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17. ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

வற்றாப்பளைப் படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாபபளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடை பெற்றுக் கொண்டிருந்த பி.ப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ் விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் அறுபது பேர் வரை காயமடைந்தார்கள்.

இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,
“வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமைபோல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப்பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தி யிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி –
02. நவரத்தினசாமி சிவசேகரம் – –
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி –

07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார் தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்தொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் – 42

காயமடைந்த்தவர்க்களின் விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் – 21
03. கனகேஸ்வரன் – 20
04. கார்த்திகேசு நித்தியராசா – 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் – 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா – 24
08. நேசம் – 32
09. வெற்றிவேலு மதிவதனம் – 13
10. றெஜித் – 27
11. சாந்தினிதேவி – 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகர் – 16
13. வடிவேலு – 40
14. விஜயரட்ணம் மாணவன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

புல்லுமலை படுகொலை – 1986 ... 1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலை செய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்து மூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணி வகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

தெல்லிப்பளை ஆலயப் படுகொலை – 30 மே 1992

யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆண்டுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள் அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கை யம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12 மணியளவில் விமானப்படையின் இரண்டு "அவ்ரோ" விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்த மண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்த வேளை காலை 10.00 மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணை வீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள். ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை - 28
02. ஜயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா - 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப்பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள்

தம்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணப்படுகினற் வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "கிபீர்" விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங்கூடலினுள் பாதுகாப்பு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தம்ப்பிராயைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான றீட்டம்ம்மா சம்பவத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,
"1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக் கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்த வேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்துவிட்டனர். பாதிக்கப் பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடம்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்தொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்தொழில் 28

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75
02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

பூநகரியில் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி எறிகணைத் தாக்குதலில் மாணவர் படுகொலை 16 மே 2007

பூநகரியில் (பூநகரி) செவ்வாய்க்கிழமை நண்பகல் சிறீலங்கா இராணுவம் (எஸ்.எல்.ஏ) பீரங்கி எறிகணைகளை வீசியதில் 17 வயது சிறுவன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் மற்றும் அவனது தந்தை காயமடைந்தார்.

கிளி. பூநகரி ஸ்ரீ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கனகரட்ணம் மோகன்ராஜ் என்ற மாணவனின் சடலமே செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

பூநகரி நான்காம் மைல் பகுதியில் உள்ள சிவிலியன் குடியேற்றத்தின் மீது சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைகள் வீசிய போது திரு. மோகன்ராஜ் மதிய உணவு இடைவேளைக்காக வீட்டுக்குச் சென்றிருந்தார்.

திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008

கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீ லங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர்.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05பேர் உட்பட 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒரு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்ச்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40
10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

வடமராட்சி கிழக்கில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சில் இருவர் படுகொலை 23.05.2008

கிளிநொச்சியிலிருந்து வடகிழக்கே 21 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுண்டிக்குளம் கல்பாடு என்ற இடத்தில் உள்ள சிவிலியன் குடியிருப்பு மீது சிறீலங்கா விமானப்படையினர் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தாக்குதல் நடத்தியதில் 14 வயது சிறுமியும் 3 வயது குழந்தையும் உயிரிழந்தனர். தாக்குதலில் ஒரு பெண் காயமடைந்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள்.

03 வயதான ஆர்.விஜித் மற்றும் 14 வயதான பி.கயல்விழி ஆகிய இருவருமே விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ரவிச்சந்திரன் மகாலட்சுமி (29) என்பவர் படுகாயமடைந்தார்.

பல்லாயிரம் மக்கள் மருந்தின்றி இறப்பு – 16 மே 2009

2,000 முதல் 3,000 வரையிலான எண்ணிக்கையில் இறந்தவர்களின் உடல்கள் பொது மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் எல்லா இடங்களிலும் கிடக்கின்றன, மேலும் பொது மக்கள் அனைவரும் இறந்த உடல்களின் கடுமையான துர்நாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த தன்னார்வ மருத்துவர் கூறினார்.

“சிறீலங்கா இராணுவம் இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களால் அனைத்து மருத்துவ வசதிகளையும் அழித்துவிட்டது, மேலும் சிறீலங்கா இராணுவம் ஆனது மனிதாபிமானமற்ற மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களை பொதுமக்கள் மீதான மரணம் அல்லது சரணடைதல் ஆகிய இரண்டே வழிகளை மட்டுமே வழங்கி வருகிறது” என்று அவர் மேலும் கூறினார்.

தன்னார்வ மருத்துவரே சனிக்கிழமை காலை 100 க்கும் மேற்பட்ட இறப்புகளைக் கண்டார். அனைத்து அரசு மருத்துவர்களும் உயர் அதிகாரிகளும் ஷெல் தாக்குதலில் இருந்து தப்பி ஓடிவிட்டனர்.

“காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் இருந்து எங்களுக்கு இடை நிறுத்தம் தேவை. பலத்த காயம் அடைந்தவர்களை மருத்துவ கவனிப்பின்றி இறக்க அனுமதிக்கப்படும் வெளிப்புற மருத்துவக் குழுவின் தீவிர தேவை உள்ளது,” என்று தன்னார்வ மருத்துவர் தமிழ்நெட் மூலம் தெரிவித்தார். செயற்கைக்கோள் தொலைபேசி.

“அனைத்திற்கும் மேலாக, காயமடைந்தவர்களுக்கும் எஞ்சியிருக்கும் பொதுமக்களுக்கும் அவசரமாக உணவு மற்றும் தண்ணீர் தேவை. பதுங்கு குழிகளுக்குள் உணவு இல்லாமல் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்.”

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர்களான சிரேஷ்ட வைத்தியர்களான டி.சத்தியமூர்த்தி மற்றும் எஸ்.வரதராஜா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் ஆகியோர் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

25, 000 மேல் காயம் பட்ட பொது மக்கள் சிகிச்சை இன்றி உயிரிழப்பு – 17.05.2009

சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த சுமார் 25,000 பொதுமக்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெறாமல் உயிரிழந்து வருவதாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஞாயிறு நண்பகல் தெரிவித்தார். வட்டுவாகல் அல்லது இரட்டை வாய்க்கால் ஊடாக காயமடைந்தவர்களை வெளியேற்றுமாறு திரு.பத்மநாதன் ஊடாக ஐ.சி.ஆர்.சி யிடம் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும், அதற்கு ஐ.சி. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள், எல்லா இடங்களிலும் சடலங்கள் உள்ளன, மீதமுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பின் படைகளின் ஒவ்வொரு வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு மத்தியில் பதுங்கு குழிகளில் உள்ளனர். SLA ஆனது மக்களைத் தப்பியோட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரும்புகிறது, சூசை கூறினார்.

என்ன நடக்கிறது என்று ஐசி கவலைப்படவில்லை. 25,000 பேரைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் இப்போது காயமடைந்து கொல்லப்படுகிறார்கள். குறைந்த பட்சம் இப்போது செயல்பட்டால் அவர்களைக் காப்பாற்ற முடியும். மீட்புக்கான அறிகுறிகள் இருப்பதால் நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம், என்றார்.

இதற்கிடையில், வன்னியில் இருந்து வரும் சமீபத்திய தகவல்கள், பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் SLA யால் பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் முதலில் அவர்கள் மீது எதேச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே, பலரின் மரணம் மற்றும் காயம் ஏற்பட்டது.

2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?

வெடியகற்றும் பணியில் ஈடுபட்டவர்களால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் .
(இலங்கை இராணுவம் போழுல் பயன்படுத்திய தடைசெய்யப்பட்ட குண்டுகள்)

1.RBK – 500 V X 2.5RT கொத்துக் குண்டு முல்லைத்தீவு.சாலை எனுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது

Remnants of what appears to be an RBK-500 AO-2-5RT cluster bomb uncovered near Chalai,Sri Lanka. Photograph- Source

2.சுண்டிக்குளம் அருகில் காணப்படும் ஒரு வெடிக்காத ஏஓ 2.5RT கொத்து குண்டு

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.

3.சுண்டிக்குளத்தில் காணப்பட்ட இதே கிளஸ்டர் குண்டு ஜோர்ஜியா . சூடான் மற்றும் சிரியாவில் பயன்படுததபட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.

4. xU VX 2.5RTகுண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் குழிதோண்டும் போது காணப்பட்டது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.

முள்ளிவாய்க்கால்

வலி சுமந்த பதிவுகள்...

மே 18
146,679
ஈழத்தமிழர் படுகொலை
சுவடுகள்...!

மே 18 – முள்ளிவாய்க்கால் சுவடுகள்...!

146,679 ஈழத்தமிழர் படுகொலை



Figure Two: Likely Craters in CZ, May 6, 2009

This image shows apparent impact craters in the CZ on May 6, 2009 (Lat: 9.32 N Long: 80.77 E).















Figure 6-16. Six-mortar star formation.





NO FIRE ZONE
THE KILLING FIELDS OF SRI LANKA



பிரிகேடியர் பால்ராஜ்

பாலசேகரம் கந்தையா

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு

(27.11.1965-20.05.2008)

மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்


You to UN?

மே 18, 2009
தமிழின அழிப்பு நாள்
நினைவில் வாழ்கிறோம். நீதிக்காக நிற்கிறோம்.

கந்தரோடையிலும் வட இலங்கையிலும் கண்ட ஆதிகால நாணயங்கள் பகுதி – 2

பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

நாணயத் தொடர் 6
சங்ககால சேர, சோழ நாணயங்கள்: கி.மு. 200 – கி.பி. 300

யாழ்ப்பாண மையங்களில் பாண்டிய நாட்டு நாணயங்களைப் போல பழைய சேர, சோழ நாணயங்கள் அதிக அளவில் காணப்படுவதில்லை. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து நாணயங்கள் அனைத்தும் சதுர வடிவிலேயே காணப்படுகின்றன. இவற்றில் சேர நாணயங்களில் முன்பக்கம் யானையும், மறுபக்கம் சேர அரச இலச்சினையான அம்பு-வில்லும் காணப்படுகின்றன. சோழ நாணயங்களிலும் ஒரு பக்கம் யானையும், மறுபக்கம் சோழ அரச இலச்சினையான புலியும் காணப்படுகின்றன.

சதுர வடிவான சேர, சோழ நாணயங்கள்

நாணயத் தொடர் 7
பல்லவ நாணயங்கள்: கி.பி. 300 – கி.பி. 900

வட இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் பல்லவ அரச நாணயங்களும் காணப்படுகின்றன. இவற்றில் ஆரம்ப காலப் பல்லவ நாணயங்கள் வட்ட வடிவாகவும், எழுந்து நிற்கும் எருதை அரச இலச்சினையாகவும் கொண்டிருக்கின்றன. பிற்காலப் பல்லவ நாணயங்களில் எருதுக்குப் பதில் சிங்க உருவம் அரச இலச்சினையாகக் காணப்படுகிறது.

ஆதி பல்லவ அரசர்கள்: கி.பி. 300–கி.பி. 500

தமிழகத்தை ஆண்ட பல்லவ அரசர்கள் இரண்டு அரச பரம்பரைகளைச் சேர்ந்தவர்கள். கி.பி. 3ஆம் – 6ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட பல்லவர்கள் ஆந்திராவின் சாதவாகன மன்னர்களின் பாளையக்காரர்கள் (Feudatories) ஆவார்கள் என வரலாற்றாசிரியர்களான நீலகண்ட சாஸ்திரி, கிருஷ்ணசாமி ஐயங்கார் ஆகியோர் கருதுகிறார்கள். அவர்கள் ஆட்சி புரிந்த தொண்டைமண்டலம் சாதவாகனப் பேரரசின் ஒரு பகுதி என கல்வெட்டு ஆதாரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், சங்க இலக்கியமான கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பெரும்பாணாற்றுப்படை தொண்டை மண்டலத்தை வடதமிழகத்தைச் சேர்ந்த பிரதேசமாகவும், அதை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனை ஒரு தமிழ் அரசனாகவும் குறிப்பிடுகிறது. இளந்திரையன் சோழ மன்னன் கரிகால் வளவனின் பேரன் ஆவான்.

எருது இலச்சினை கொண்ட பல்லவபுரிப் பல்லவ நாணயம். கி.பி. 350

பல்லவர்களின் பேரரசனான ஸ்ரீஸ்கந்தவர்மனின் (கி.பி. 300–350) மயிடாவோலு மற்றும் பிரித்தானிய அருங்காட்சியக சாருதேவி செப்பேடுகள் அவனது ஆட்சிப் பிரதேசம் வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கே பெண்ணாறு வரையும், மேற்கே பெல்லாரி மாவட்டத்திலிருந்து கிழக்கே (வங்காளக்) கடல் வரையும் பரந்திருப்பதாகக் குறிப்பிடுகின்றன. இதிலிருந்து அவனது ஆட்சிப் பிரதேசம் இன்றைய தென் ஆந்திராவையும், வடக்குத் தமிழ்நாட்டையும் அடக்கியிருந்தது எனலாம். அவனது தலைநகரம் பல்லவபுரி எனக் கூறப்படுகிறது. பல்லவபுரி இன்றைய ஆந்திராவின் நெல்லூரிலுள்ள 'பவத்திரி' என இனங்காணப்படுகிறது. இந்த அரசர்கள் எருதை இலச்சினையாகக் கொண்ட வட்ட வடிவான செப்பு, வெள்ளி நாணயங்களை வெளியிட்டார்கள்.


கந்தரோடைச் (கதிரைமலை) சதுர வடிவான செப்பு நாணயங்கள்

Image Source - ப. புஷ்பரட்ணம்

பல்லவ நாணயங்கள் கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி, மாந்தை மற்றும் பல வன்னி மையங்களில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பல்லவர்களின் வெள்ளி நாணயங்கள் இந்தியாவில் காணப்படாத போதிலும், அவை வட இலங்கையில் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வட இலங்கையிலுள்ள 'பல்லவராயன்', 'பல்லவராயன்கட்டு', 'பல்லவராயன்கட்டு ஆறு' ஆகிய இடப்பெயர்கள் பல்லவர்களின் படைத்தளபதி ஒருவர் தனது இராணுவச் சேவைக்கான பாராட்டாக வட இலங்கையில் சன்மானமாகப் பெற்றுக்கொண்ட நிலப் பகுதியைக் குறிப்பிடுவதாகக் கொள்ளப்படுகின்றன (yeneral of the Pallava dynasty who received a land grant in recognition of his military alliances) (Thiagarajah Siva, 2016: 212).

சில வரலாற்றாசிரியர்கள் 'பல்லவராயன்கட்டு' பாண்டியர்கள் பெற்றுக்கொண்ட நிலப்பகுதி என்றும், 'பல்லவராயன்கட்டு' என்பது தவறான பெயர் (Misnomer) என்றும் கூறுவர். இதற்கான ஆதாரம் எதுவும் தரப்படவில்லை.

பிற்காலப் பல்லவர்கள்: கி.பி. 600–850

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழர்களிடமிருந்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பல்லவர்கள் அங்கே தலைநகரம் அமைத்து சக்திவாய்ந்த ஓர் அரசை அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்தி ஒரிஸா, தஞ்சாவூர், திருச்சி ஆகிய பிராந்தியங்களைத் தங்களின் ஆட்சியின்கீழ் கொண்டுவந்தார்கள். அவர்களின் ஆட்சியில் காஞ்சி தலைநகரமாகவும், மாமல்லபுரம் துறைமுக நகரமாகவும் செயற்பட்டது.

நரசிம்மவர்மனின் காஞ்சிப் பல்லவ நாணயம் கி.பி. 630 – 668

காஞ்சிப் பல்லவர்களின் அரசை சிம்மவிஷ்ணு என்ற அரசன் ஆரம்பித்து வைத்தான். அவனது மகனான மாமல்லன் என்ற மகேந்திரவர்மன் மாமல்லபுரம் குகைக்கோயில் ஆக்க வேலைகளை ஆரம்பித்து வைத்தான். காஞ்சி நகரின் அதீத செல்வங்களைப் பற்றிக் கேள்வியுற்ற சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி பல்லவ அரசின்மேல் படையெடுத்து வந்து, போரில் மகேந்திரவர்மனைத் தோற்கடித்து செல்வங்களைச் சூறையாடிச் சென்றான். இச்சம்பவம் பல்லவ அரசுக்கு பெருத்த அவமானமாகப் போயிற்று. மகேந்திரவர்மன் புலிகேசியின் மீது மேற்கொண்ட பழிவாங்கும் முயற்சிகள் பயனற்றுப் போயின.

மாமல்லன் மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியின் நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று, மிகுந்த தைரியத்துடனும் புத்திசாதுர்யத்துடனும் போர் நடத்தி, சாளுக்கியர்களின் தலைநகரான பாதாமியை எரித்து தரைமட்டமாக்கினான். தனது தந்தையினால் ஆரம்பிக்கப்பட்ட மாமல்லபுரம் குகைக் கோவில்கள் நரசிம்மவர்மனின் ஆட்சிக் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. நரசிம்மவர்மன் பல்லவ அரச இலச்சினையை சிங்கமாக மாற்றியமைத்து, சிங்க உருவம் கொண்ட நாணயங்களை வெளியிட்டு வைத்தான். பின்னர் கி.பி. 850 ஆம் ஆண்டளவில் அதுவரை சிற்றரசர்களாக இருந்த சோழ அரசர்கள் புத்துறுதியும் புதுவலிமையும் பெற்று பல்லவர்களுடன் போராடி காஞ்சியையும் இழந்த பிரதேசங்களையும் மீளப் பெற்றுக்கொண்டார்கள். பல்லவ சிங்க நாணயங்கள் மேற்கூறப்பட்ட யாழ்ப்பாண மையங்களில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

நாணயத் தொடர் 8
வட இலங்கை அரச நாணயங்கள்: கி.பி. 300 – கி.பி. 800

2002ஆம் ஆண்டில் வெளிவந்த கலாநிதி பரமு புஷ்பரட்ணத்தின் வரலாற்றுப் புகழ்கொண்ட நாணயவியல் ஆய்வான Ancient Coins of the Sri Lankan Tamil Rulers என்ற நூலில், தமிழகத்தின் சங்ககாலத்திற்குச் சமமான காலப் பகுதியிலேயே இலங்கையில் தமிழ் அரசர்களின் மாநில உருவாக்கம் ஆரம்பித்துவிட்டதை நாணயவியல் ஆய்வுகள் மூலம் அவர் எடுத்துக் காட்டியிருந்தார். அதற்கு ஆதாரமாக வட இலங்கையில் வெவ்வேறு காலகட்டத்திற்குரிய பலவகை நாணயங்களைத் தனது களஆய்வில் வெளிக்கொணர்ந்திருந்தார்.

இவற்றில் ஆதியான நாணயங்கள் சதுர வடிவானவை. உருக்கிய செம்பில் உருவாக்கப்பட்ட இந்த நாணயங்கள் 1.8 செ.மீ. நீளமும், 1.6 செ.மீ. அகலமும், 2.8 கிராம் நிறையும் கொண்டவை. இவற்றை கதிரைமலை (கந்தரோடை) அரச நாணயங்களாக அவர் இனங்கண்டார். இவற்றில் மூன்று வகையான நாணயங்கள் காணப்பட்டன.

இரு விளக்குகளுக்கிடையே காணப்பட்ட மீன். மீன் சின்னம் பாண்டியர்களால் மட்டுமல்லாது வட இலங்கையின் அரசர்களாலும் பாவிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நாணயங்கள் தமிழ்நாட்டில் காணப்படவில்லை.

நாணயத்தின் முன்பக்கத்தில் எழுந்து நிற்கும் எருதும், பின்பக்கத்தில் யானையின் உருவமும் காணப்படும் நாணயங்கள்.

முன்பக்கத்தில் யானை அல்லது எருதின் உருவமும் (தெளிவில்லை), பின்னால் மீனின் உருவமும் பதித்த தேய்ந்த நிலையிலுள்ள நாணயம் (Pushparatnam, 2002: 97-98).

இந்த நாணயங்களை முன்னர் ஆராய்ந்த ஹியூபேர்ட் பிடுல்வ் (Biddulph, 1966: 32) இவற்றை பாண்டிய அரசனான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வட இலங்கை வழியாக படையெடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றிய சமயம் வெளியிட்ட நாணயங்களாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த அரசன் தனது ஆட்சியில் பாண்டிய நாட்டில் வெளியிட்ட நாணயங்கள் எல்லாம் வட்ட வடிவானவை. சங்க காலத்தின் பின்னர் எந்தத் தமிழக அரசரும் சதுர வடிவான நாணயங்களை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாணயத் தொடர் 9
சிங்கை நகர் அரச நாணயங்கள்: கி.பி. 800 – கி.பி. 1242

இக்காலத்தில் வெளியான யாழ்ப்பாண நாணயங்களில் காணப்படும் சின்னங்கள் ஆரம்ப-மத்தியகால யாழ்ப்பாண நாணயங்களின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாண

வைபவமாலை தரும் தகவல்களின்படி கதிரைமலை (கந்தரோடை) அரசர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தங்களது அரச தலைநகரை செங்கடக நகருக்கு (சிங்கைநகர்) மாற்றிக் கொண்டார்கள் என அறிய முடிகிறது. சிங்கைநகர் இருந்த இடம் இன்றைய யாழ்ப்பாணக் கோட்டை இருந்த இடம் என்பது சந்தேசய நூல்கள் தரும் தகவல்களின்படி பரணவிதானவினால் நிறுவப்பட்டது ஏற்கனவே (இயல்-5) கூறப்பட்டிருக்கிறது.

சிங்கைநகர அரசர்களின் நாணயங்கள்

இந்த யாழ்ப்பாண நாணயங்களில், ஆரம்பகால நாணயங்களில் முன்பக்கத்தில் ஒரு குதிரையின் உருவமும், பின்னால் மீன் உருவங்களும் காணப்படுகின்றன. அதைத் தொடர்ந்து வந்த காலங்களில் வெளிவந்த நாணயங்களில் முன்பக்கத்தில் உட்கார்ந்த நிலையிலுள்ள எருதின் உருவம் (நந்தி) காணப்படுகிறது. இந்நந்தியின் மேல் பிறைநிலவு உருவமும், இரு பக்கங்களிலும் இரு குத்துவிளக்குகளும் காணப்படுகின்றன. நாணயங்களின் மறுபக்கத்தில் இரண்டு அல்லது மூன்று மீன்களின் உருவங்கள் காணப்படுகின்றன.

சேயோன் (1998: 54-57) இம்மாதிரியான நாணயங்களை யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டம் ஆகிய இடங்களிலிருந்து பெற்றுக்கொண்டார். வடிவேலு என்பவர் பூநகரி பிரதேசத்திலிருந்து 302 நாணயங்களைப் பெற்றுக்கொண்டார். கலாநிதி புஷ்பரட்ணம் ஈழவூர் உடையார் குமாரசாமியின் மாந்தோப்பிலிருந்து இம்மாதிரி 600 நாணயங்களைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு பெருந்தொகையான நாணயங்களை பூநகரிப் பகுதியிலிருந்து பெற்றுக்கொண்டமையால் சிங்கைநகர் பூநகரிப் பகுதியில் இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தார் (Pushparatnam, P. 2002: 110).

இந்த நாணயங்களின் பலவகையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாணயங்களின் பின்னால் காணப்படும் இரண்டு அல்லது மூன்று மீன்கள் சில நாணயங்களில் ஒரே பக்கம் நோக்கியும், சிலவற்றில் ஒன்றிற்கு ஒன்று எதிராக நோக்கியும் காணப்படுகின்றன. அநுராதபுரத்தில் கண்டெடுத்த நாணயங்களில் ஒரு பக்கம் எருதும், மறுபக்கத்தில் இரு மீன்களும் காணப்படுகின்றன (Bopearachchi, 1958: 157).

இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ்வகையான வட இலங்கை நாணயங்களை ஆராய்ந்த பிரித்தானிய நாணயவியலாளரான ஜேம்ஸ் பிரின்செப் (James Prinsep, 1858: 491.23) இவற்றை இலங்கையில் தயாரிக்கப்பட்ட நாணயங்கள் என ஒப்புக்கொண்டார். ஆனால் பின்பக்கத்தில் இருந்த மீன் சின்னங்களைக் கொண்டு, இவை பாண்டிய அரசர்கள் இலங்கையைக் கைப்பற்றியிருந்த வேளையில் வெளியிட்ட நாணயங்கள் என முடிவெடுத்தார். இவ்வகையான நாணயங்கள் தமிழ்நாட்டில் காணப்படவில்லை.

சிங்கைநகர அரசர்களின் நாணயங்கள். ஒரு சில நாணயங்களின் முன்பக்கத்தில் குதிரை உருவம் காணப்பட்ட போதிலும், பெரும்பாலான நாணயங்களில் எருதே அரச இலச்சினையாக குத்து விளக்குகளோடு காணப்படுகிறது. இதிலிருந்து யாழ்ப்பாண அரசர்கள் சிங்கைநகர் ஆட்சிக் காலத்திலிருந்தே நந்தியை அரச இலச்சினையாகக் கொண்டிருந்தார்கள் என்பது புலனாகிறது.

நாணயத் தொடர் 10

அரேபிய - சீன நாணயங்கள்: கி.பி. 600 - கி.பி.1200

1921-22, 2017-18 ஆண்டுகளில் நடைபெற்ற யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கி.பி. 600க்கும்-கி.பி. 1200க்கும் இடைப்பட்ட கால சசானிய, அரேபிய, சீன மட்பாண்டங்களுடன் அக்காலத்தைய அரேபிய, சீன நாணயங்களும் வெளிக் கொணரப்பட்டன. அரேபிய நாணயங்கள் செம்பு, பித்தளை, வெண்கலம் ஆகிய உலோகங்களால் ஆன வட்ட வடிவான நாணயங்கள். அவற்றில் சில நாணயங்களில் உம்மாயத் கலிபா அரசர்களின் (கி.பி. 661-750) பெயர் பதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத் தவிர பல மத்தியகால (Medieval Period) நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணச் சிங்கை அரசர்காலச் சீன நாணயங்கள்

யாழ்ப்பாணச் சிங்கை அரசர்கால அரேபிய நாணயங்கள்

இவற்றோடு ஒப்பிடும் போது சீன நாணயங்கள் செம்பு, வெண்கலம் மற்றும் விலைமதிப்பற்ற வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களிலும் உருவாக்கப்பட்டன. இந்த நாணயங்கள் அனைத்திலும் நடுவில் ஒரு சதுர வடிவான துவாரம் காணப்படுகிறது. இந்த நாணயங்களை ஒரு நூல் வழியாகக் கோர்த்து சுலபமாகக் கையாளுவதற்காக இந்த முறை மேற்கொள்ளப்பட்டது. சீனாவில் கின் வம்ச அரசர்கள் காலத்திலேயே (Qin Dynasty 206-221), கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து, வட்ட வடிவான தரப்படுத்தப்பட்ட நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நாணயங்களின் காலப்பகுதியும், தொகையும் அக்கால யாழ்ப்பாணத்தில் செழிப்புற்றிருந்த அரேபிய, சீன வர்த்தகங்களின் அளவையும், பரவலையும் எடுத்துக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

நாணயத் தொடர் 11

சாவக அரசர்களின் நாணயங்கள்: கி.பி. 1250 - கி.பி. 1270

வரலாற்றுப் பின்னணி

கி.பி. 1215 இல் கலிங்கமாகனின் படையெடுப்பால் பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்றது. கலிங்கமாகனும் அவனுடைய துணையரசனாகிய ஜெயபாகுவும் பொலநறுவையிலிருந்து இராஜரட்டையை நெடுங்காலம் ஆட்சிசெய்தனர் என சிங்கள வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அவனது ஆட்சிப் பரப்பு யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசம், திருகோணமலை வரை பரவியிருந்தது. கலிங்கமாகனின் வேளக்காரப்படையில் வன்னியர்கள் இருந்தார்கள். மாகன் பொலநறுவையைக் கைப்பற்றிய பின் வன்னிப் பகுதியின் ஆட்சியை வன்னியருக்குப் பகிர்ந்து கொடுத்தான் என மட்டக்களப்புப் பூர்வசரித்திரம் கூறுகிறது. அதனைத் தொடர்ந்து வன்னிப் பகுதியின் பல சிற்றரசுகள் தோற்றம் பெற்றன. கோகர்ணம், கொட்டியாரம், கந்தளாய், மன்னார், மாதோட்டம், ஊராத்துறை போன்ற இடங்களில் மாகன் படைநிலைகளை அமைத்து பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்தான் என சூளவம்சம் கூறுகிறது.

சந்திரபானு என்ற சாவக நாட்டு அரசன் கி.பி. 1247 இல் இலங்கையின் தம்பதெனியா சிங்கள அரசு மீது படையெடுத்து வந்தான். அவனால் வெற்றிகாண முடியவில்லை; தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டான். அவன் இரண்டாம் தடவையாக சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து படைகளைச் சேர்த்துக் கொண்டு வட இலங்கையில் மாகன் ஆட்சிபுரிந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கே தனது ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்டு தம்பதெனியா அரசனான இரண்டாம் பராக்கிரமபாகுவைத் (கி.பி. 1236-1270) தாக்கினான். சந்திரபானுவால் மீண்டும் வெற்றிகாண முடியவில்லை. யாழ்ப்பாணம் திரும்பி சிங்கைநகரிலிருந்து ஆட்சி புரிந்தான்.

சாவகரின் ஆட்சி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வடக்கிலுள்ள வன்னிப் பிரதேசத்திலும், திருகோணமலையிலும் அமைந்திருந்தது என்பதை 13ஆம் நூற்றாண்டின் திரிசிங்கள கடயம் பொத் என்ற நூல் குறிப்பிடுகிறது. சாவகச்சேரி, சாவங்கோட்டை, சாவகக்கோட்டை ஆகிய இடப்பெயர்கள் சாவகர் ஆட்சியில் தோற்றம் பெற்றன.

சந்திரபானு வெளியிட்ட யாழ்ப்பாணச் 'சாவக' நாணயங்கள்

சந்திரபானுவின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1253-1268) படையெடுப்பு வட இலங்கையின் மீது நடைபெற்று, யாழ்ப்பாணச் சாவக அரசு பாண்டியரின் மேலாதிக்கத்தின் கீழ் வந்தது. சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தியில் வரும் "துலங்கொழி மணியும், சூழி வேழமும் இலங்கை காவலனை இறை கொண்டருளி" என்ற வரிகளில் பாண்டியர்கள் யானைகளையும் மணிகளையும் திறையாகக் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

பின்னர் பாண்டியர்களுக்கு சந்திரபானு திறை செலுத்த மறுத்ததனால் பாண்டிய அரசர்கள் படையெடுத்து வந்து அவனைத் தோற்கடித்து கொலை செய்தார்கள். சுந்தர பாண்டியனின் துணை அரசனாகிய வீரபாண்டியனுடைய பத்தாவது ஆண்டு மெய்க்கீர்த்தியில் "சோணாடும் ஈழமும் சாவகன் முடித்தலையும் கொண்டருளிய" என்ற வாசகம் வருகிறது. சோழ நாட்டையும் ஈழத்தையும் வென்று கைப்பற்றியதோடு சாவக அரசனின் முடித்தலையையும் இவன் கவர்ந்தான் என அறிய முடிகிறது.

பதினோராம் ஆண்டு முதலான வீரபாண்டியன் மெய்க்கீர்த்தி அவனது ஈழப் படையெடுப்பைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது. குடுமியாமலைச் சாசனத்திலும் வீரபாண்டியனுடைய இலங்கைப் படையெடுப்பைப் பற்றிய செய்திகள் வருகின்றன. வீரபாண்டியன் இலங்கைக்குச் சென்று போர் புரிந்து அந்நாட்டு மன்னன் ஒருவனைக் கொன்று, அவனுடைய முடி முதலான அணிகலன்களையும், சிங்காசனம், வெண்கொற்றக்குடை, சாமரம் முதலிய அரச சின்னங்களையும் கவர்ந்தான் என்றும், பின்னர் முன்பு தனக்குப் பகைத்தொழில் புரிந்து பின்பு பணிந்து விட்ட சாவகனுடைய மைந்தனுக்கு ஆட்சியுரிமை வழங்கி, வீரக்கழல் அணிவித்து அவனை ஆனைமேல் ஏற்றி நகரத்திற்குச் செல்லவிட்டான் என்றும் அச்சாசனம் கூறுகிறது. இம் மெய்க்கீர்த்தி தரும் செய்திகளின் மூலம் யாழ்ப்பாணத்தில் சாவகர்கள் ஏற்படுத்தியிருந்த இராச்சியத்தை பாண்டியர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள் என அறிந்துகொள்ள முடிகிறது.

இதன் பின்னர் ஏற்பட்ட பாண்டிய மன்னர்களின் மேலாதிக்க வலுவும், வட இலங்கை அரச விவகாரங்களில் அவர்களின் தலையீடும், கி.பி. 1284ஆம் ஆண்டில் ஆரியச் சக்கரவர்த்தி என்பவனின் தலைமையில் நடைபெற்ற இலங்கைப் படையெடுப்பின் பின்விளைவுகளுமே யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களின் தோற்றத்திற்குக் காரணங்களாக அமைந்தன.

சாவக அரசர்கள் வெளியிட்ட யாழ்ப்பாண நாணயங்களில் உட்கார்ந்த நிலையிலுள்ள காளை உருவங்களை யாழ்ப்பாண அரசின் இலச்சினையாகப் பொறித்திருப்பதைக் காண முடிகிறது. சிங்கைநகர் அரசர்களின் இலச்சினையான காளையின் உருவத்தையே இவர்களும் அரச சின்னமாகப் பாவித்தார்கள். இவர்களின் நாணயங்களின் முன்பக்கத்தில் காளையின் உருவமும், மறுபக்கத்தில் 'சாவக' என்ற பெயர் பொறிப்பும் காணப்படுகின்றன.

நாணயத் தொடர் 12

யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் அரச நாணயங்கள்: கி.பி. 1284 - கி.பி. 1450

வரலாற்றுப் பின்னணி

பாண்டிய மன்னன் முதலாம் சடாவர்மனின் ஆட்சிக் காலத்தில் அவனது துணை அரசனான வீரபாண்டியன் இலங்கையின் மேல் படையெடுத்து, யாழ்ப்பாண அரசன் சாவகன்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை
தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

சந்திரபானுவைச் சிரச்சேதம் செய்து அவனது மகன் 'சாவகன் மைந்தனை' பாண்டியர்களின் மேலாதிக்கத்தின் கீழ் யாழ்ப்பாணத்தின் அரசனாக்கியதை ஏற்கனவே பார்த்தோம். யாழ்ப்பாண விவகாரங்களைக் கவனிப்பதற்காக விட்டுச் சென்ற பிரதானிகளுள் பாண்டிமழவன் என்பவன் முக்கியமானவன்.

யாழ்ப்பாண இராச்சிய ஆரியச்சக்கரவர்த்தி அரசர்களின் சேது நாணயங்கள்

பாண்டிய நாட்டில் முதலாம் சடாவர்மனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய அரசைப் பேரரசாக்கி, இராச்சியத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்தான். யாழ்ப்பாணத்தில் அரசன் 'சாவகன் மைந்தனை' தொடர்ந்து வேறு அரசர்கள் இல்லாமையால் பாண்டிமழவன் அரச நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு சுந்தரபாண்டியனுக்குச் செய்தி அனுப்பினான். சுந்தரபாண்டியன் தனது தளபதிகளில் ஒருவனான ஆரியச்சக்கரவர்த்தி என்பவனைப் பெரும் படையுடன் கி.பி. 1284ஆம் ஆண்டில் இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இவன் யாழ்ப்பாண அரச அதிகாரத்தை எடுத்துக் கொண்டான்.

"Towards the end of the thirteenth century Āryaccakravarthi, a chieftain from the Pāndya kingdom acquired authority over the kingdom in the northern part of the island" (Pathmanathan, S. 1978: 5)

யாழ்ப்பாணத்தில் தனது படையுடன் நிலைகொண்ட ஆரியச்சக்கரவர்த்தி அங்கிருந்து யாப்பகுவவிலிருந்த சிங்கள அரசின் மீது படையெடுத்துச் சென்றான். அவனது படையெடுப்பைப் பற்றி சூளவம்சம் இவ்வாறு விவரிக்கிறது:

"முன்பு பஞ்சமொன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையிற் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியன் அல்லாதாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டனத்தினுள் (யாப்பகுவ) அவன் நுழைந்தான். அங்கிருந்த புனித தந்ததாதுவையும், விலை மதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு திரும்பினான்".

சாவகர்களின் பின்னர் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆட்சி ஏற்பட்டதற்கு மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துப் பாண்டியப் படையெடுப்பின் விளைவே காரணமாகும். சூளவம்சம் குறிப்பிடும் படைத்தலைவனாகிய ஆரியச்சக்கரவர்த்தியோ, அவனது வம்சாவளியிலுள்ள ஒருவனோ யாழ்ப்பாணத்தில் அரசனாக அதிகாரம் பெற்றான். ஆரியச்சக்கரவர்த்தி என்பது யாழ்ப்பாணத்தில் அரசரின் இயற்பெயராகவன்றி வம்சப் பெயராகவே வழங்கி வந்தது (சிற்றம்பலம், சி.க. 1992: 30-33).

சேது நாணயங்கள்

நீண்ட காலமாக யாழ்ப்பாண மக்கள் ஐரோப்பியரின் ஆட்சியின் கீழ் இருந்தமையால் சேது நாணயங்களைப் பற்றி எதுவுமே அறிந்திருக்கவில்லை. சேது நாணயங்களிலே மிகப் பெரும்பாலானவை இலங்கையின் வடபகுதிகளிலே ஈழ மன்னர் பலரின் நாணயங்களோடு கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுவாமி ஞானப்பிரகாசர் எழுபது சேது நாணயங்களைத் தேடிப் பெற்று ஆராய்ந்த பின்னர், அவற்றை யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என்பதை முதன்முதலாக தக்க சான்றுகளுடன் நிறுவினார் (Gnanapragasar, S. 1920: 172-179).

யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் சேதுவுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இராமேஸ்வரத்திலுள்ள இராமநாத சுவாமி கோயிலின் திருப்பணிகளைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் அவர்கள் ஏற்றிருந்தனர். யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் சேது காவலன் என்ற விருதினைக் கொண்டிருந்தனர் என்பதை 'செகராசசேகரமாலை', 'தக்ஷிண கைலாசபுராணம்' ஆகிய யாழ்ப்பாணத்து நூல்கள் அறியத்தருகின்றன. நாணயங்களில் காணப்படும் 'சேது' என்ற பதிவு, 'சேதுகாவலன்' என்ற சொல்லின் குறுகிய வடிவமாகும்.

நாணய வகை 2

சேது நாணயங்களை ஆராய்ந்த நாணயவியலாளர்கள் இவற்றின் உருவம், அமைப்பு, எடை என்பவற்றைக் கொண்டு இவற்றை நான்கு வகையாகப் பிரிவுபடுத்தியுள்ளனர் (Pathmanathan, S. 1980: 409-447).

வகை 1

இவை 13 ஆம் நூற்றாண்டுச் சோழ நாணயங்களை ஒத்தவை. சராசரி 0.74 அங்குல விட்டமும் 61.7 கிரெயின் நிறையும் கொண்ட இந்த நாணயங்கள், அவற்றை ஒத்த சோழக் காசுகளை விடப் பெரியவை. இவை வார்க்கப்பட்ட செப்பு நாணயங்கள். இவற்றின் முற்பக்கத்தில் கிரீடம் அணிந்து நிற்கும் அரசனின் தோற்றம் காணப்படும். வலக்கரத்தின் கீழ் ஒரு விளக்குச் சுடரும், இடக்கரத்தின் கீழ் ஒரு திரிசூலமும் காணப்படும். நாணயத்தின் பின்பக்கத்தில் உட்கார்ந்த நிலையில் நந்தி (காளை) உருவமும், அதன் கீழே 'சேது' என்ற மொழியும் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த நாணய வகையில் மூன்று ரகங்கள் உள்ளன. முன்புறம் காணப்படும் உருவங்களில் விளக்கு, மயிலின் தலை, திரிசூலம், பிறைச் சந்திரன் என்பன கலந்து காணப்படும். ஆரியச் சக்கரவர்த்திகள் இடபத்தையே தமது அரச இலச்சினையாகக் கொண்டு நந்தி உருவத்தை தமது நாணயங்களிலே பதித்தார்கள்.

நாணய வகை 1

வகை 2

இவ்வகை நாணயங்கள் முதலாம் வகை போலவே அமைந்துள்ளன. முன்பக்கத்தில் அரசனின் உருவத்தின் இடது பக்கத்தில் நந்தியின் சிறு உருவம் பதித்திருக்கும். பின்புறத்தில் நந்தியின் உருவத்தைச் சுற்றிவர புள்ளிகளால் ஆன ஒரு வளையம் நாணய விளிம்பில் காணப்படும். இப்புள்ளி வளையம் சில நாணயங்களின் இரு பக்கங்களிலும் காணப்படும். இந்த நாணயங்கள் சராசரி 0.80 அங். விட்டமும் 61 கிரெயின் நிறையும் கொண்டவை. முன்புறத்தைப் போல பின்புறத்திலுள்ள உருவங்களும் ஒரு வட்டத்தினுள்ளே அமைக்கப்பட்டு, சுற்றிலும் புள்ளிகள் காணப்படும்.

நாணய வகை 2

வகை 3

அழகுமிக்க கலை வனப்பான இந்த நாணயங்கள் ஆரியச் சக்கரவர்த்திகளின் உலோகத் தொழிற்சாலைகளில் தொழில் புரிந்த தொழிலாளர்களின் தொழில்நுட்பத்திறனுக்கும், கலைத் திறனுக்கும், வார்ப்புக்கலையின் முன்னேற்றத்திற்கும் எடுத்துக்காட்டாக அமையக்கூடியவை. நாணயத்தின் முன்பக்கமுள்ள அரச உருவம் மெலிந்தும், நேராகவும் காணப்படும். வலது கரத்தின் கீழ் வச்சிராயுதம் போன்ற உருவமும், இடப் பக்கத்தில் திரிசூலம் மற்றும் செங்கோல் போன்ற நேர்கோடும் காணப்படும்.

நாணயத்தின் பின்பக்கத்தில் நந்தியின் தலையின் மேல் சற்றுப் பின்புறமாக பிறைச்சந்திர வடிவமும், அதன்மேல் ஒரு தாரகையைக் குறிப்பிடும் புள்ளியும் காணப்படும். நந்தியின் முன்னும் பின்னும் மும்மூன்று புள்ளித் தொகுதிகள் உள்ளன. நந்தியின் கீழே ஒரு தடித்த கோடு வரையப்பட்டிருக்கும். அக் கோட்டின் கீழே 'சேது' என்ற வாசகம் காணப்படும்.

மேற்குறிப்பிட்ட நாணயத்தின் ஒரு வேறுபாடாக நந்தியின் உருவம் ஒரு அரை வட்டத்தினுள்ளும், கீழே 'சேது' என்ற வாசகம் ஓர் அழகிய வட்டத்தினுள்ளும் அமைந்துள்ளன. வட்டங்களைச் சுற்றி புள்ளிகளினாலான வளையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலுள்ள நாணயத்தின் மற்றொரு வேறுபாடான அளவில் சிறிய நாணயத்தில் வட்ட வளையங்களைச் சுற்றி ஒரு சங்கிலி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் மிக அரிதாக உள்ளன.

கி.பி. 1450க்குப் பின்னர் நல்லூரிலிருந்து யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களின் நாணயங்கள்

வகை 4 – தாமரை நாணயங்கள்

தாமரை நாணயங்கள்

இவ்வகையான நாணயங்கள் அளவில் சிறியன. அவை சராசரி 34.67 கிரெயின் நிறை கொண்டவை. அவற்றின் முன்பக்கத்தில் மற்றைய நாணயங்களில் வரும் அரச உருவங்களுக்குப் பதிலாக அழகிய எட்டு இதழ்களைக் கொண்ட தாமரை மலரின் வடிவம் காணப்படும். மறுபக்கத்தில் நந்தியின் உருவமும், கீழே 'சேது' என்ற மொழியும் காணப்படும். இதன் ஒரு வேறுபாடாக முன்பக்கத்திலுள்ள தாமரை மலரின் நடுவே 'சேது' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் (Pathmanathan, S. 1980: 409–447).

நன்றி: சிவ. தியாகராஜா - எழுநா முகநூல்

செர்பியாவில் கூட்டு இராணுவப் பயிற்சியில் நேட்டோ: ரஷ்ய உறவை முறிக்கிறதா பால்கன் நாடுகள்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா-

13.05.2026

ஐரோப்பிய அரசியலில் நீண்டகாலமாக நடுநிலை நாடு என்ற அடையாளத்தை காத்து வந்த செர்பியா (Serbia), தற்போது ஒரு முக்கியமான மாற்றத்தின் வாசலில் நிற்கிறது. ஒருகாலத்தில் தனது தலைநகர் பெல்கிரேட்டை குண்டு வீசிய நேட்டோவுடனே கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவது, பால்கன் பிராந்திய அரசியலில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது.

கொசோவோப் போரில் நேட்டோ :

கொசோவோப் போரின் காயங்கள் இன்னும் செர்பிய மக்களின் நினைவில் உயிரோடு இருக்கும் நிலையில், இந்த இராணுவ ஒத்துழைப்பு உலக அரசியலில் பல கேள்விகளையும் புதிய விளக்கங்களையும் உருவாக்குகிறது. 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற கொசோவோப் போர் (Kosovo War) காலத்தில், நேட்டோ தலைமையிலான கூட்டுப்படைகள், முன்னாள் யுகோஸ்லாவிய நாட்டில் இருந்த செர்பியா அரசின் மீது விமானத் தாக்குதல்களை கோரமாக மேற்கொண்டன. குறிப்பாக பெல்கிரேட் (Belgrade) மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுகள் செர்பிய மக்களின் தேசிய மனநிலையை ஆழமாகப் பாதித்தன.

நேட்டோவின் கொடூரமான வான் தாக்குதல்களில் அரசு கட்டிடங்கள், பாலங்கள், தகவல் தொடர்பு மையங்கள் மட்டுமன்றி பொதுமக்களும் பலர் உயிரிழந்தனர். நேட்டோவின் நடவடிக்கை மனித உரிமை பாதுகாப்பு என்ற பெயரில் நடந்தாலும், செர்பிய சமூகத்தில் அது இன்னும் அரசியல் அவமதிப்பு மற்றும் மேற்கத்திய ஆக்கிரமிப்பு என்றே இன்றும் நினைவு கூரப்படுகிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு செர்பிய தலைநகர் பெல்கிராட் மீது குண்டு வீசிய நேட்டோ கூட்டணிக்கும், இந்த பால்கன் நாட்டிற்கும் இடையிலான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒத்துழைப்பாக, செர்பியாவும் நேட்டோவும் தங்களின் முதல் கூட்டு இராணுவப் பயிற்சியை தற்போது தொடங்கியுள்ளன.

மே 12 தொடங்கி மே 23 வரை நடைபெறும் இந்த இரண்டு வார காலப் பயிற்சிகளில், செர்பியா, இத்தாலி, ருமேனியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் அறுநூறு வீரர்கள் பங்கேற்கின்றனர். பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, மாண்டினீக்ரோ, ருமேனியா, செர்பியா, துருக்கி, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவத் திட்டமிடுபவர்களும் பார்வையாளர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

பால்கன் பிராந்தியத்தில் நீண்ட அமைதியையும் நிலையான ஸ்திரத்தன்மையையும் பாதுகாப்பதே இந்த ஒத்துழைப்பின் நோக்கம் என்று செர்பியாவின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. இந்தப் பயிற்சியின் திட்டமிடல், இந்தக் கூட்டு முயற்சியின் ஒரு முக்கியப் பகுதியாக இருந்துள்ளது. நேட்டோ மற்றும் செர்பிய ஆயுதப் படைகள் ஆகிய இரண்டுக்கும் பெரிய சர்வதேசப் பயிற்சிகளைத் திட்டமிடுவதில் நீண்டகால அனுபவம் உள்ளது.

அமைதிக்கான கூட்டாண்மை:

இந்த தந்திரோபாய இராணுவ பயிற்சி, நேட்டோவின் “அமைதிக்கான கூட்டாண்மை” திட்டத்தின் கீழ் வருகிறது. இதில்

செர்பியா கடந்த பல ஆண்டுகளாக ஒருபுறம் ரஷ்யாவுடன் பாரம்பரிய நட்புறவைத் தொடர்ந்தும், மறுபுறம் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் பாதுகாப்பு அமைப்புகளுடனும் உறவை மேம்படுத்தியும் வந்துள்ளது. இந்த இரட்டை அணுகுமுறை, கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான சமநிலை அரசியல் என்று விவரிக்கப்படுகிறது. ஆயினும் நேட்டோவுடன் ஒத்துழைப்புதற்கு செர்பிய தேசியவாத அரசியல் இயக்கங்கள், நேற்றைய எதிரியுடன் இன்று இணைவது வரலாற்றை மறப்பது என கடுமையாக விமர்சித்து, எதிர்ப்பு குரல்களை எழுப்பியுள்ளனர்.

செர்பியா கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக ஒரு அங்கமாக இருந்து வருகிறது. அந்நாடு நேட்டோ உறுப்பினர்களுடன் தொடர்ந்து பயிற்சிகளில் பங்கேற்று வந்தாலும், இந்தக் கூட்டணியுடன் நேரடியாக நடத்தப்படும் முதல் பயிற்சி இதுவாகும்.

பெல்கிராட் துயரமான வரலாற்று நினைவுகளுக்கிடையே தற்போது இரண்டு வாரங்கள் நீடிக்கும் கூட்டு இராணுவப் பயிற்சியை செர்பியா நடத்துவது மிகப்பெரிய அரசியல் திருப்பமாகவும் பார்க்கப்படுகிறது. இந்தப் பயிற்சி வெறும் இராணுவ ஒத்துழைப்பாக மட்டும் இல்லாமல், ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பில் செர்பியா எவ்வாறு தன்னுடைய இடத்தை மறுசீரமைக்கிறது என்பதற்கான அடையாளமாகவும் கருதப்படுகிறது.

செர்பியா கடந்த பல ஆண்டுகளாக ஒருபுறம் ரஷ்யாவுடன் பாரம்பரிய நட்புறவைத் தொடர்ந்தும், மறுபுறம் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் பாதுகாப்பு அமைப்புகளுடனும் உறவை மேம்படுத்தியும் வந்துள்ளது. இந்த இரட்டை அணுகுமுறை, கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான சமநிலை அரசியல் என்று விவரிக்கப்படுகிறது. ஆனால் உக்ரைனிய போரின் பிறகு ஐரோப்பாவின் பாதுகாப்பு அரசியல் வேகமாக மாறியதால், செர்பியாவும் தன்னுடைய இராணுவ மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நிகழ் காலத்தில் இந்தப் பயிற்சிகள் மூலம் நேட்டோ, பால்கன் (Balkan) பிராந்தியத்தில் தனது செல்வாக்கை மேலும் வலுப்படுத்த முயல்கிறது. ஏற்கனவே கொசோவோவில் நேட்டோ தலைமையிலான KFOR அமைதி படைகள் செயல்பட்டு வருகின்றன. அதேசமயம், செர்பியாவின் உள்நாட்டில் இந்த ஒத்துழைப்புக்கு எதிர்ப்பு குரல்களும் எழுகின்றன. குறிப்பாக தேசியவாத அரசியல் இயக்கங்கள், நேற்றைய எதிரியுடன் இன்று இணைவது வரலாற்றை மறப்பது என கடுமையாக விமர்சிக்கின்றன.

ஆனாலும் இன்னொரு புறம், நடைமுறை அரசியல் நோக்கில் பார்க்கும் போது, செர்பியாவுக்கு இது பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ரீதியாக பல நன்மைகளை வழங்கக் கூடும். நேட்டோ நாடுகளுடன் இணைந்து செயல்படுவது, நவீன இராணுவப் பயிற்சி, தகவல் பரிமாற்றம், பாதுகாப்பு ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் செர்பியாவுக்கு புதிய அனுபவத்தை வழங்குகிறது. மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான தனது நீண்டகால நோக்கத்துக்கும் இது ஒரு சைகையாகக் கருதப்படுகிறது.

இந்த மாற்றம், உலக அரசியலின் அடிப்படை உண்மையையும் மீண்டும் நினைவூட்டுகிறது. சர்வதேச நாடுகளில் நிரந்தர நண்பர்களோ எதிரிகளோ இல்லை. நிரந்தரமானது அவர்களின் தேசிய நலன்கள் மட்டுமே. ஒருகாலத்தில் குண்டு வீச்சின் சத்தம் கேட்ட இடங்களில் இன்று கூட்டுப் பயிற்சியின் ஒத்துழைப்பு மொழி ஒலிக்கிறது. அதுவே சர்வதேச அரசியலின் முரண்பாடான இயல்பாகும். இது எதிர்காலத்தில் உக்ரைன் மீண்டும் கைகோர்க்கும் வாய்ப்புகளும் உள்ளன.

செர்பியா அங்கீகரிக்காத கொசோவோ:

கொசோவோ போரின்போது, 1999இல் செர்பியாவுக்கு எதிராக நேட்டோ நடத்திய வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து, செர்பியாவில் நேட்டோ ஒரு எதிர்ப்பு நிலை மனோபாவமாக இருந்து வருகிறது. 1999 போர் முடிவடைந்ததிலிருந்து, நேட்டோ தலைமையிலான ஒரு அமைதிப்படை கொசோவோவில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், செர்பியா தனது முன்னாள் கொசோவா மாகாணத்தின் சுதந்திரப் பிரகடனத்தை ஒரு போதும் அங்கீகரித்ததில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாத சில பால்கன் நாடுகளில் செர்பியாவும் ஒன்றாகும். அது நேட்டோ மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுடனும் நெருங்கிய உறவுகளைப் பேணிவரும் அதே வேளையில், நடுநிலைமைக் கொள்கையையும் கடைப்பிடித்து வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில், ரஷ்யா மற்றும் சீனாவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதோடு, நேட்டோ உறுப்பு நாடுகளிடமிருந்தும் ஆயுதங்களை வாங்குவதன் மூலம் செர்பியா தனது இராணுவத் திறன்களைக் கணிசமாக வலுப்படுத்தியுள்ளது.

செர்பியா - நேட்டோ உறவின் இந்த புதிய கட்டம் எதிர்காலத்தில் பால்கன் பிராந்தியத்தின் பாதுகாப்பு அமைப்பையே மாற்றக் கூடியதாக இருக்கலாம். ஆனால் வரலாற்றுக் காயங்கள் முழுமையாக ஆறாமல் இருக்கும் நிலையில், இந்த ஒத்துழைப்பு எவ்வளவு நிலைத்திருக்கும் என்பது இன்னும் திறந்த கேள்வியாகவே உள்ளது.

கொஞ்சம் பேசுவோம்

பவித்திரா ராகவன்

யாழ்ப்பாண வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை அறைக்கு வெளியே யாருமே இல்லாமல் தனிமையில் உயிரைக் கையில் பிடித்தவாறு பிரம்பை பிடித்தவளாகக் காத்துக் கொண்டிருக் கிறேன். உள்ளே எமது பதினைந்து வயது மகன் லாவண்யன் வாழ்விற்கும் சாவிற்குமிடையில் போராடிக் கொண்டிருக் கிறான். அங்கிருப்போரின் கண்ணிற்கு நான் கொடியவளாகக் காட்சியளிக்கிறேன். என் உறவினர்களின் பார்வையில் நான் அடங்காப்பிடாரி, திமிர் பிடித்தவள், சொற்கேளாதவள் இன்னும் பல பட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். என்னை குறை கூற ஆயிரம் உறவுகள் இருந்தாலும் கையைப் பிடித்து ஆறுதல்படுத்த ஒரு ஜீவன் கூட அருகிலில்லை. சமூகம் என்ன வேண்டுமென்றாலும் கதைக்கட்டும். என் மகன் உயிருக்கும் போராடும் போது இந்த ஏச்சுக்கள் ஒன்றும் பெரிதல்ல. எந்த வொரு தாயும் தனது மகன் பிழையான வழியில் போக அனு மதிக்க மாட்டாள் நானும் விதிக்குட்பட்டவளே. ஆயிரமாயிரம் கனவுகளுடன் ஒருவனைக் கைபிடிக்தேன். அதுவும் உற் றாரும் உறவினரும் அமைத்துக்கொடுத்த வாழ்க்கை.ஆனால் வெறும் ஒரு மாத வாழ்க்கையிலே அவனுக்கு ஏற்கனவே திருமணத்திற்கு புறம்பான வாழ்க்கை இருக்கிறது என்பதை அறிந்த பின்னர் அந்தத் திருமணபந்தக்கை தொடர எனது தன் மானம் இடம் தரவில்லை. குடும்பத்தாரினதும் உறவினர்க ளினதும் அறிவுரைகளை மீறி வீட்டை விட்டு வெளியேறினேன். இப்போது புரிகிறதா எனக்கு ஏன் இவ்வளவு அளவுகடந்த பட் டங்கள் அளிக்கப்பட்டனவென்று எனக்குக் கிடைத்த ஒரே ஆறுதல் எனது திருமண வாழ்த்தைக்குக் கிடைத்த எனது மகன் லாவணியன் இன்று அந்த மகன்தான் உள்ளே உயிருக் குப் போராடிக் கொண்டிருக்கிறான்

வெறும் பாடசாலைக் கல்வியை மட்டுமே வைத்திருந்த நான் ஆரம்ப காலங்களில் அவனை வளர்ப்பதற்காக கிடைத்த வேலை எல்லா வற்றையும் செய்தேன். பணம் தேடுவதற்காக நாள் முழுவதும் உழைத்தேன் இதனிடையில் என்னுடைய கல்வித்தகமையையும் திறந்த பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் கற்று பட்டம் பெற்றேன். நல்ல வேலையும் கிடைத்தது இதற்கு நடுவில் லாவண்யனும் நாளொடு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்தான். நல்ல பொறுப்பானவனாக வும் திறமைசாலியாகவும் மிளிர்ந்தான் அவனைப் பற்றி நான் கவலைப்படத்தேவையில்லையென எனக்குள் பட்டுக் கொண் டேன். என் கஷ்டத்தை நன்கு அறிந்தது அவன் அனைத்து விட யங்களையும் சிறப்பாக கையாளுவான். ஆனால் ஒரு வருட மாக என்னால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. தெரிய வில்லை, யார் கண் பட்டதோ தெரியவில்லை.

ஆம், வழமைக்கு மாறாக லாவண்யன் போக்கில் கடும் மாறுதல். ஏதே பிரம்மை பிடித்தவன் போல காணப்படுவான் அதிகம் பேசுவதை தவிர்த்துக் கொள்வான், நானும் எவ்வ ளவோ முயன்றும் ஏதும் மறாவில்லை. அன்பாக அருகில் இருந்து,

“அப்பு .... என்னாச்சு?.......” என்று கேட்டால் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டு அறைக்குள் சென்று கதவை படார் என்று மூடிக்கொள்வான் சில வேளைகளில் முரட்டுத்தனமான உரக்க கத்துவான்.

ஒருவேளை பருவமாற்றமாக இருக்கலாம் என்று என்னை நானே சமாதானம் என்று செல்வேன். அவன் நண்பர்களிடம் கூட கேட்டுப்பார்த்தேன் ஏதும் காதல் பிரச்சினை என்றாலும் சொல்லுங்கள் என்று கேட்டுப்பார்த்தேன். போதைக்கு அடிமையாகி விட்டானோ என்றும் எண்ணிப் பார்த்தேன்.

முன்பெல்லாம் கணித பாடத்தை மிகவும் விரும்பிப் படிப்பான் அவன் பாடசாலை ஆசிரியர் சண்முகத்தை அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவரும் இவனுக்கு விருப்பத்துடன் பாடம் புகட்டுவார் பாடசாலை நேரத்திற்கு அப்பாலும் வீட்டிற்கு அழைத்து கற்றுக் கொடுப்பார். இப்போதெல்லாம் அவருடன் கூட லாவணயன் அதிகம் பேசுவதில்லையாம் என்று நண்பர்கள் கூறி கேள்விப் பட்டேன். நானும் இது நாளை மாறிவிடும் என்று நம்பிக்கை கொண்டேனே தவிர, ஆயிரம் நாளைகள் கடந்தும் எதுவும் மாறவில்லை. என்னாலும் இதற்கு மேல் பொறுக்க முடியாமல் அவனுடன் சண்டை போடத் தொடங்கினேன். பலமுறை ஏன் இப்படி இருக்கிறாய் என நச்சரிக்கவும் தொடங்கினேன். அன்று காலை அப்படி தான்

“லாவண்... இந்தா இதில் இட்லி இருக்கு சாப்பிடு...”

“இல்ல வேணாம்...”

“லாவண் முதலில் சாப்பிடு. இரண்டு பேரும் சேர்ந்து வைத்திய சாலைக்கு போவோம். ஒரு மனநிலை வைத்தியரிடம் கதைத் தால் உனக்கு கொஞ்சம்...

முடிக்கும் முன்பே...

அம்மா பேசாம போங்கோ... நான்

பைத்தியமல்ல...

“லாவண் உன்னை பார்க்க எனக்கு பயமாக இருக்கு

நண்பர் களோட கூட கதைக்கிறதில்லை... வா சண்முகம் சேரையாவது பார்த்திட்டு வருவம் பிரச்சினையைக் கதை...”

“ஒன்றும் தேவையில்லை. நீங்கள் உங்கட வேலையை மட்டும் பாருங்கோ”

கதை நீண்டு கொண்டோ போக எனது பொறுமையும் கோபமும் எல்லை மீறியது. நானும் கடந்த ஒரு வருமாக அவனில் ஏற்பட்ட இந்த கடும் மாற்றத்தை பொறுத்திருந்தேன். என்னுடைய பிள்ளையைப் பற்றி வெளியில் பேசும் அளவிறக்கு எந்தவொரு உறவினரும் எனக்கில்லை. தனித்து ஒரு தாயாக ஆண் பிள்ளையை வளாப்பதென்பது அவ்வளவு. எளிதல்ல. பொரு ளாதரத்தையும் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இருந்த இடத்திலிருந்து ஏவல் செய்ய எனக்கு பணமோ, சொத்தோ இல்லை. மாதந்த வருமானமே இன்னும் எம்மை வாழவைக் கிறது இதற்கு நடுவில் லாவண்யனை எப்படி கையாள்வது என் பது பெரும் குழப்பமாக இருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் அவன் உங்கட வேலையைப் பாருங்கள் என சொன்னதும்... என்னை அறியாமல்.

“அதுசரி. உனக்காக என்னுடைய வாழ்க்கையை தியாகம் செய்ததற்கு எனக்கு இது தேவைதான், இப்படியொரு பிள்ளை இருந்தாலென்ன? இல்லாவிட்டால் என்ன... என்று சொல்லி விட்டு வேலைக்குச் சென்று விட்டேன்.

வீடு திரும்பில போது தூக்க மருந்துகளை எடுத்து விட்டு குற்று யிராக இருந்த என் மகனைக் கண்டு என் உயிரே போய் - விட்டது. கத்திக்குழறி அயலவரின் உதவியுடன். வைத்திய சாலையில் அனுமதிக்தேன்.

நான்கு நாட்கள் கடந்தன. வைத்தியசாலையிலேயே நானும் காத்திருக்கிறேன். சத்திரசிகிச்சை அறையிலிருந்து சாதரண வாட்டிற்கு இன்றுதான் மாற்றினார்கள். இதுவரையில் அவனது தந்தையோ ஏனைய உறவுகளோ ஒரு தடவையேனும் எட்டிப் பார்க்கவில்லை. நானும் எதிர்பார்க்கவில்லை. இன்று வீட்டிற்கு செல்லலாமெ‌ன பொறுப்பான தாதி சொன்னதால் நானும் அதற் குரிய ஒழுங்குமுறைகளைச் செய்ய வீட்டிற்கு புறப்பட்டேன்.

நான்கு நாட்களுக்கு முன்னர் சமைத்த உணவு அப்படியே இருந்தது . போட்ட பொருட்கள் எல்லாம் அப்படியே இருந்தன. அனைத்தையும் துப்பரவு செய்து விட்டு, லாவணியனின் அறைக்குச்சென்றேன். அவனது அறையை ஒழுங்குபடுத் தினேன். ஒருவேளை நண்பர்கள் அவனை சுற்றி இருந்ததால் அவனது மனதிற்கு ஆறுதலாக இருக்குமென எண்ணி அவர்களை தெலைபேசியில் அழைத்து மாலை வீட்டிற்கு வருமாறு கூறினேன். ஒருவேளை சண்முகம் சாரும் இருந்தால் நன்றாக இருக்குமென மனதிற்குப்பட்டது. ஆனால் அவரது தொடர் பிலக்கம் லாவண்யனின் கையடக்கத் தொலைபேசியில் தான் இருக்குமென்பதால்தான் அதனை எடுத்து charge போட்டேன்.

மறுபடியும் வைத்தியசாலைக்கு செல்லவேண்டும் - அதற்குள் சண்முகம் Sirருக்கு அழைப்பெடுக்கலாம் என்னெண்ணி அவரது பெயரை தேடிய போது என் தலையே சுற்றியது. அவரிட மிருந்து லாவண்யனுக்கு குறுச்செய்திகளும் படங்களும் ஒரு ஆசிரியனிடமிருந்து மாணவனுக்கு அனுப்பக்கூடியவை அல்ல, அவ்வளவு மோசமாகவும் ஆபாசமாகவும் இருந்தன. இவை இன்று நேற்றல்ல. நீண்ட காலமாக அனுப்பப்பட்டிருக்கின்றன இப்போது எனக்கு எல்லாம் புரிந்தன. என் மகன் எவ்வளவு வேதனையை அனுபவித்துள்ளான் எனப்புரிந்தது. அவனது தந்தை அவனுடன் இருந்திருந்தால் அவரிடம் தன் பிரச்சி னையை எடுத்துரைத்திருப்பானோ என்னவோ.. அவரது இச் சைக்கு லாவண்யனைப் பலரையும் உட்படுத்தி இருப்பார் போலும் தாரை தாரையாக வடிந்த கண்ணீரைத்துடைத் துவிட்டு புறப்பட்டேன். வைத்தியசாலைக்குள் நுழைந்த போது லாவண்யன் கட்டிலில் உட்கார்ந்துருந்தான். அருகில் சென்று கதிரையில் அமர்ந்தேன் அவனுடன் என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? ஒன்றுமே புரியவில்லை அவனாகவே....

“அம்மா... என்னை மன்னித்து விடுங்கள்.

நான் உங்களைக் கஷ்டப்படுத்தி விட்டேன். நீங்கள் பட்ட வேத னையை இங்கிருந்த எல்லாரும் சொன்னார்கள்.... நான் உங் களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்...” சொல்ல முடியாமல் தடுமாறினான்.

”லாவண்... இனிமேல் நீ சண்முகம் Sir இடம் படிக்கத் தேவை யில்லை.... எல்லாவற்றையும் தூக்கிப் போடு... நான் எப் போதும் உனக்காக இருக்கிறேன்...” என்று சொல்லி அவனது கையடக்கத் தொலைபேசியை அவனிடம் நீட்டினேன்.

அம்மா என்று என்னைக் கட்டியணைத்தான்.

ஒரு தாயாக என் மகனின் இந்த நிலைக்கு ஏதேதோ காரண மிருக்குமென யோசித்த எனக்கு ஒரு பெண் பிள்ளைகளுக்கு நடக்கும் துஷ்பிரயோகம், ஆண் பிள்ளைகளுக்கும் நடக்கலா மென்பது ஏன் புரியவில்லை? என்னைப்போன்று இன்னும் எத்தனை பெற்றோர்?

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

ஆர்மேனிய இன அழிப்பை அங்கீகரித்த சர்வதேசம்: இருபதாம் நூற்றாண்டின் கோரப் படுகொலை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

11.05.2026

ஆர்மேனிய மக்கள் மீது நடந்தேறிய இனஅழிப்பின் நினைவு நிகழ்வுகள் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

ஆர்மேனிய இன அழிப்பு:

ஆர்மேனிய இன அழிப்புக்கும் ஈழத்தில் இறுதியாக நிகழ்த்தப் பட்ட முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இரண்டும் இன அடிப்படையிலான குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது தெட்டத் தெளிவாக தெரிகிறது.

ஆர்மேனிய இனஅழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று ஒட்டோமன் துருக்கியர்கள், ஆர்மேனிய மக்களை சுற்றி வளைத்துக் மேற்கொள்ளப்பட்ட படுகொலையோடு தொடங்கிய இனஅழிப்பு, ஒட்டு மொத்தமாக 15 இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

ஆர்மேனியாவிலும், ஈழத்தில் தமிழர் மீதான இனப்படுகொலைகள் திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட பின்னரும், இற்றை வரை துருக்கி இந்த கொடூர பாதக செயலுக்கு பொறுப்புக் கூற இல்லை. அத்துடன் அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பதே மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும்.

ஆர்மேனிய இனஅழிப்புக்கும் ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இந்த இரு நிகழ்வுகளிலும் இன அடிப்படையிலான எழுந்த குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

கூட்டுத் தண்டனை இனஅழிப்பு?

இக் கோரமிகு குற்றங்களை புரிந்தவர்கள், போரினால்தான் இக்கொலைகள் இடம்பெற்றன எனக் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள். அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இவை தவிர்க்க முடியாதவை எனக் கூறி நியாயப் படுத்தவும் முயல்கின்றார்கள்.

இரு தேசத்திளிலும் இனஅழிப்பானது கூட்டுத் தண்டனையாக பாரிய அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆர்மேனிய மக்களுக்கு துருக்கியர்களால் இழைக்கப்பட்டது இனஅழிப்பு என்பதை இன்று உலகில் 20 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆயினும் ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துரக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப் படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது.

அண்மைக் காலத்தில், இந்த இனப்படுகொலைகளை அங்கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக்டோபர் 2019 அன்று ஏற்றுக்கொண்டது.

துருக்கியின் பேரரசு தன் படைபலத்தால் ஆர்மேனிய மக்களைக் கொன்றது இனப்படுகொலையே என்று பல நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினாலும், துருக்கி அரசு ஆர்மேனிய இனப்படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளது.

ஆர்மேனியாவில் நிகழ்ந்தது இனப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளுமாறு துருக்கி நாட்டைக் கோரும் தீர்மானம் ஒன்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2009 போர் முடிவின் பின்னர் இலங்கையில் தமிழினத்தின் மீது நடபெற்றது இனஅழிப்பு அல்ல என்பதனை நிலைநாட்ட சில சர்வதேச சக்திகள் முனைந்து வருகின்றன. ஆயினும் உலகத் தமிழ் மக்கள் ஈழத்தில் நடந்தது இனஅழிப்பே என்பதில் உறுதியாக உள்ளனர். தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு உலக நாடுகள் செயலாற்ற வேண்டும்.

ஆர்மேனிய இனப்படுகொலை

துருக்கியின் பேரரசு தன் படை பலத்தால் ஆர்மேனிய மக்களை கொன்றது இனப்படுகொலையே என்று பல நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினாலும், துருக்கி அரசு ஆர்மேனிய இனப்–படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளது.

புலம்பெயர் ஆர்மேனிய மக்கள் சக்தி:

ஆர்மேனியாவிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் மக்களின் மன உறுதியினாலும் இடைவிடா முனைப்புக்களினாலும் இன்று அவர்களிடத்தில் பல நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், ஆலோசனைக் கூடங்கள், ஊடகங்கள் எனப பலவும் இயங்கி வருகின்றன.

கொடூரமான இனவழிப்பின் பின் ஆர்மேனிய மக்களை உலகெங்கும் புலம்பெயர வைத்தது. புலம்பெயர்ந்த ஆர்மேனிய மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பாகும். அவர்கள் தனித்து உணர்வுரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவில்லை.

சோவியத்தில் ஆர்மேனிய தேச உருவாக்கம் :

சோவியத் ஒன்றிய காலத்திலேயே ஆர்மேனிய தேச உருவாக்கத்தில் சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகாமைத்துவத்தோடு தமக்குரிய செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்தார்கள்.

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் ஆர்மேனியா தன் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அடைந்துள்ளது. ஆயினும் ஆர்மேனிய மக்கள் துருக்கியால் நிகழ்த்தப்பட்ட இக் கொடிய அநீதி இனி ஒரு போதும் நடைபெறாமல் தடுப்பதற்கும் வழி வகுத்து, தமது உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் கூறியது போல "ஒரு கொடுமையை மறைப்பது அல்லது மறுப்பது என்பது, காயம் ஒன்றிலிருந்து இரத்தம் ஓடுவதைத் தடுப்பதற்கு கட்டுப்போடாமல் இருப்பதை ஒத்தது" என்ற கூற்று ஆர்மேனிய மக்களுக்கும் ஈழத்தமிழர்க்கும் மிகவும் பொருத்தமாகும்.

இன்றைய உலகில் பல நாடுகள் ஆர்மேனிய இனஅழிப்பை அங்கீகரித்து உள்ளன. ஆயினும் சர்வதேசம் ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன் என்பது தமிழ் மக்களை மாற்றாந் தாய் மனப்பாங்குடன் புறக்கணிப்பது போல தென்படுகிறது.

நாடு கடந்த
தமிழீழ அரசாங்கம்
ஸ்காட்லாந்து
TRANSITIONAL GOVERNMENT OF TAMILEELAM
மே 18
நினைவுகள் அழியாது
நீதிக்கான குரலை எழுப்புவோம்!
தமிழீழ தேசிய துக்க நாள்
தமிழீழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற
கொடூர சம்பவங்களுக்கும், அந்த அநீதிகளுக்கு எதிராக
போராடி உயிர்நீத்த எம் மாவீரர்களையும், எம் தமிழ் மக்களையும்
நினைவுகூரும் முகமாக இந்த துயர நாளை நினைவூட்டும் வகையில்
அமைதி நடைப்பயணம் / அமைதிப் பேரணி
நடைபெறவுள்ளது.
இந்த துயர தினத்தை அனுசரிக்கும் முகமாக
நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்கள்
மற்றும் தமிழ் பற்றாளர்கள் கலந்து கொண்டு
நீதிக்கான குரலை எழுப்புவார்கள்.
FROM
GLASGOW GREEN PARK
Greendyke St,
Saltmarket,
Glasgow G1 5DB
TO
GLASGOW ROYAL
CONCERT HALL
2 Sauchiehall St,
Glasgow
G2 3NY
தேதி
மே 18
MONDAY
நேரம்
காலை 10:00
AM
MORE INFORMATION
07367127012
07852441878
நினைவுகள் அழியாது – நீதிக்கான பயணம் தொடர்கிறது!
நினைவுகள் அழியாது –
எம் மண்ணின் மக்கள்
எம் இதயங்களில் என்றும் வாழ்கிறார்கள்.

வணிக முகநூலில்
2026 இலவச
விளம்பர வாய்ப்பு!
உங்கள் வணிகத்தை இன்னும் பலரிடம்
கொண்டு செல்ல விரும்புகிறீர்களா?
இப்போதே உங்கள் விளம்பரத்தை இலவசமாக வணிகச்
சமூக வலைத்தளங்களில் பகிர உதவுகின்றோம்!
வணிகம் Vanikam
அதிகமான மக்களை எட்டுங்கள்...!
உங்கள் விற்பனையை உயர்த்துங்கள்
எளிதாகவும் – விரைவாகவும்
BUSINESS PAGE
இப்போதே
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்:
437-345-4203
குறிப்பு: விளம்பர வடிவமைப்பின்
அளவு: 4.4''x 7.2''
உங்கள் வணிக வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்பு
இதுவும் ஒன்று!!!

The Pen is mightier than the Sword

பேரிடர் காலத்தில் தமிழர்க்கு முள்ளியக்கால் கஞ்சி!
ஆர்மேனியருக்கு மதாக் – யூதர்களுக்கு மனா!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

11.05.2026

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுத்து இனப்படுகொலை செய்வது மாத்தரமின்றி - அந்த மக்களை பட்டினி போட்டு கொல்வதும் கொடுமையிலும் கொடுமையான இனப் படுகொலையகும்.



ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது.

இக்கோர இனப்படுகொலைகளை எதிர் கொண்ட மக்கள், எப்படி வாழ்வின் இறுதிக்கணங்களில் போராடியிருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. கட்டாய பட்டினியால் மக்கள் எவ்வாறு போர்க்கால உணவை பெற்றார்கள் என்பதை அலசும் சிறிய ஆவணம் இது.

ஆர்மேனிய இனப்படுகொலையும் மதாக் ஆயனயபா உணவும்

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது பெரும் இனப்படுகொலையாக துருக்கியில் ஒட்டோமான் ஆட்சியில் ஆர்மேனியர்கள் மீது படுகொலை செய்யப்பட்டமை தான் வரலாற்றில் பதியப்பட்ட கோர நிகழ்வாகும்.

இந்த கொடூர சம்பவத்தை உலகமே இனப்படுகொலை என்று கூறியபோது, துருக்கி அதனை கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆர்மேனிய இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப் பட்டுள்ளது.

20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய படுகொலையாகக் கருதப் படும் ஆர்மேனிய படுகொலையில் “மதாக்” (Madagh)என்ற ஒரு வகை உணவு தான் அவர்களை உயிரோட்டமாக வைத்திருந்தது. ஆர்மேனிய மக்கள் தங்களின் பண்பாட்டு உணவாகவும் இனப்படுகொலையின் அவலம் நிறைந்த உணவாகவும் “Madagh”யை தாங்கள் புலம்பெயர்ந்த பகுதிகளில் அதன் வலிகளை உணர்ந்து அடுத்தடுத்த தலைமுறையினருக்கு உணர்த்தி வருகின்றனர்.

ஆர்மேனிய இனஅழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915ஆம் ஆண்டில் மொத்தமாக 15 இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

தற்போது ஆர்மேனிய இனப்படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மேனியர்கள் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள். ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 இலட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மீனிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யூதப் படுகொலை – ஹாலோகோஸ்ட்

இரண்டாம் உலகப் போரில் 1941 இலிருந்து 1945 வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். நாஸி கட்சியின் உயர் தலைமையின் வழி காட்டல்கள் உடன், ஜேர்மனி அரசின் அதிகார மையத்தின் ஒவ்வொரு பகுதியும் ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா முழுவதும் பெரும் படுகொலைகளை நடத்துவதில் ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு வந்தது. இப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில், 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜெர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோகோஸ்ட் (Holocaust) என்று குறிப்பிடுவர்.

ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த, அடொல்ஃப் ஹிட்லரின் நாஸி இன அழிப்புக் கொள்கையின் படி பல அறிஞர்கள் பெருமளவில் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர். ஜேர்மன் அரசு இதனை ”யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு” என வர்ணித்தது. நாஸி ஜேர் மனியில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எல்லாப் பிரிவினரதும் மொத்தத் தொகை 9 தொடக்கம் 11 மில்லியன் வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

யூதர்களின் பட்டினி தீர்த்த ‘மனா’

வரலாற்று ரீதியாக இஸ்ரேலியர்களின் எகிப்திய அடக்குமுறையின் கசப்பைக் குறிக்கும் அடையாள உணவான “மனா” (Manna) எனும் உணவை நாஸி வதைமுகாம்களில் உண்டதாகவும் சான்றுகள் உள்ளன. மனா என்பது பைபிளின் படி, இஸ்ரேலிய யூதர்கள் நீண்ட இடப்பெயர்வில், பாலைவனத்தில் பயணம் செய்தபோது கடவுள் அவர்களுக்கு வழங்கிய ஒரு உண்ணக் கூடிய பொருள் என்றும் பொருள்படும்.

யூதர்களின் நீண்ட இடப்பெயர்வு (எக்ஸோடஸ்) வரலாற்று புத்தகத்தில், மனா தரையில் வீழ்ந்த உறைபனி போன்ற நல்ல, செதில் போன்ற பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் பனியுடன் வந்து சேருவதாகவும், இது சூரியனின் வெப்பத்தால் உருகுவதற்கு முன் சேகரிக்கப்பட வேண்டும் என்றும், ஒரு கொத்தமல்லி விதை போன்று, வெள்ளை நிறத்தில் இருந்தது என்றும் எக்ஸோடஸ் நூல் மேலும் கூறுகிறது.

முள்ளிவாய்க்காலும் இனவழிப்பும்

2009 மே இறுதிப் போரின், இறுதிநாட்களில் மக்களுக்கு உணவு, மருத்துவ தேவைகளை முற்றுமுதலாக தடுத்து நிறுத்தப்பட்டப் போது களமுனைப் போராளிகளுக்காக சேமித்து வைத்திருந்த அரிசிகளைக் கொண்டு பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தண்ணிரும் அரிசியும் கொண்ட கஞ்சியை சமைத்துக் கொடுக்கப்பட்டது.

நந்திக்கடலின் இருபுறமும் பெருந்திரளாக நோக்கிவந்த மக்களை கொத்துக்கொத்தாய் கொல்லப்பட்ட துயரம் ஒருபுறமும் மிச்சமிருக்கும் உயிரைக் காக்க மறுபுறமும் இடையில் பட்டினியால் தகித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தேவாமிர்தமாக இறுதிநாட்களில் இருந்தது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு தமிழர்களின் குறியீட்டு உணவு. அதன் அடையாள வழி, எங்கள் மீது நிகழ்ந்தப்பட்ட கொடூர இனவழிப்பு நிகழ்வை, இனிவரும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உணர்த்த வேண்டும்.

ஈழத்தில் “மே 18” என்கிற உணர்வு விசேட உணவாக இருக்க வேண்டும். ஆண்டுக்கொரு முறை செய்யப்படுகிற அருமருந்தாக அது இருத்தல் வேண்டும். எல்லோரும் கூடுகிற இடங்கள் என்றில்லாமல், எங்கும், எவரும், அந்நாளில் அதைச் செய்து உண்ண வேண்டும். அந்த நாளின் அடையாளமாக அது அன்றைய நாளின் வீட்டுணவாகவும் இருக்க வேண்டும்.

மே 18 – முள்ளிவாய்க்கால் கஞ்சி :

மிகக்குறைந்தளவிலான அரிசி, நெல், தண்ணீர் என்கிற இந்த மூன்று பொருட்களாலானதே முள்ளிவாய்க்கால் கஞ்சியாக போர்க்களத்தில் தயாரிக்கப்பட்டது. முக்கியமாக உப்பு, பால் என்பவை அறவே அற்றவையானதாகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி இருக்க வேண்டும். அப்படித் தான் அது அன்றைய நாளில் இருந்தது. சுவையற்ற நீருணவு அது. ஒரு லீற்றர் தண்ணீரில் அதிகமாக நூறு கிராம் அரிசியைக் கொண்டதாக அது இருந்திருக்கலாம். அப்படித் தான் அது தயாரிக்கப்பட்டது.

உணவு என்பதற்கு மேலாக, அந்த நாளின் பெறுமதியும், அதன் நோக்கமும் புரியும் வகையில் அதை நாம் தயாரித்துப் பரிமாற வேண்டும். இதன் மூலமே “முள்ளிவாய்க்கால் கஞ்சி” என்கிற வரலாற்று அடையாளத்தை நாம் பேணலாம்.

பல இலட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய வரலாறுகளும் உண்டு. இக் கஞ்சி உணவு அன்றைய நாட்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது. முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரை தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல் நாட்களில் கஞ்சி உணவை வழங்குவது வழமையாகும். மே 18 இன அழிப்பு நாளை நினைவு கூரும் போது முள்ளிவாய்க்கால் நிலத்தில் விடுதலைக்குப் போராடிய ஈழத்தமிழினம் பட்ட துன்பத்தையும் உலகத் தமிழினம் நினைவு கூருவது சாலத் தகுந்தது.

முள்ளிவாய்கால் கஞ்சியின் உணவு அடையாளம் என்பது, தாயக மண்ணின் வலிகளையும் வரலாறு சந்ததி மறவா சரித்திரமாக வேண்டும். இக்கஞ்சி உணவானது முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது எமது உறவுகள் உணவிற்காக பட்ட துன்பத்தை நாம் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியும், முழு உலகமும் அறிய வேண்டும்.

வடபகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தமிழரின் காணிகளில் விவசாயம் செய்யும் சிறீலங்கா இராணுவம்

07.05.2026

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வடக்கில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் இரத்து செய்யப்படாததால், அப்பிரதேசத்தின் பாரம்பரிய தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள கவலைக்கிடமான நிலைமையை வடக்கின் தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுமார் 6,000 ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி முன்னைய அரசாங்கம் ஒரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்த நிலையில் நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் சுமார் 3,000 ஏக்கர் காணிகளில் அதன் உரிமையாளர்கள் அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அந்த வர்த்தமானி இதுவரை இரத்து செய்யப்படாததால் காணிகளுக்கான சட்டபூர்வ உரிமையை உறுதிப்படுத்த முடியாமல் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

"2013ஆம் ஆண்டு சுமார் 6,000 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக சுவீகரிப்பதற்கு வர்த்தமானி மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர், 2015இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் காலத்தில், இந்த 6,000 ஏக்கர் வர்த்தமானி நடைமுறையில் இருக்கும் நிலையிலேயே சுமார் 3000 ஏக்கர் காணிகளில் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குச் சென்று அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு கட்டம் கட்டமாக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த மக்களின் காணிகளுக்கான சட்டபூர்வ உரிமையை உறுதிப்படுத்த இந்த வர்த்தமானி தடையாக உள்ளது.

எனவே, அந்த வர்த்தமானியை இரத்து செய்து, தமக்கு விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான சட்டபூர்வ உரிமையை வழங்குமாறு கோருவதுடன், எஞ்சியுள்ள 3000 ஏக்கர் காணிகளையும் விடுவிக்குமாறு அவர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்"

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தமிழ் மக்கள் சர்வதேச தொழிலாளர் தினத்தன்று வட மாகாண கட்டளைத் தளபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்னால் முன்னெடுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

"36 ஆண்டுகள் கடந்தும் விடுவிக்கப்படாத மயிலிட்டி மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான தார்மீகப் போராட்டம்" என சிங்கள மொழியிலும் எழுதப்பட்ட பதாதையை ஏந்தியவாறு, மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட காலம் இராணுவத்தினால் வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தேவாலயங்கள், பாடசாலைகள், கோவில்கள் உள்ளிட்ட தமது காணி-களை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு கோரி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்னும் இராணுவத்தின் கீழ் இருக்கும் இந்தக் காணிகள் எந்தவொரு இராணுவத் தேவைக்கும் பயன்படுத்தப்படுவதில்லை எனவும், இராணுவம் இவற்றை பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்துவதாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

"தற்போது இராணுவத்தின் வசமுள்ள இந்த 3,000 ஏக்கர் காணிகளைப் பார்த்தால், அவற்றில் 80% புதராக காணப்படுகின்றன. எந்தவொரு இராணுவத் தேவைக்கும் அந்தக் காணிகள் பயன்படுத்தப்படுவதில்லை. அவை விவசாயம் போன்ற வேறு விடயங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

எனவே இந்த மக்களின் கோரிக்கை நூற்றுக்கு நூறு வீதம் நியாயமானது. இலங்கை இராணுவம் இந்தக் காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்காமல் வைத்திருப்பது இராணுவ பலத்தைக் காட்டுவதற்காகவே தவிர, அங்கு உண்மையில் பாதுகாப்புத் தேவை எதுவும் இல்லை. இது அவர்களின் இனவாதக் கொள்கையை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகிறதே தவிர வேறொன்றுமில்லை."

'கமாண்டர் பங்களா' என அழைக்கப்படும் வட மாகாண இராணுவக் கட்டளைத் தளபதியின் உத்தியோகபூர்வ இல்லமானது,

சுமார் 200 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்தியே கட்டப்பட்டுள்ளதாக போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கத்தின் உறுப்பினர் தேவரட்ணம் அந்தனி சுபாஷ் அங்கு சுட்டிக்காட்டினார்.

"நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கிறார்கள். அதாவது J/246, J/248, J/251 மற்றும் J/255. இவை அனைத்தும் மயிலிட்டி மக்களின் - அதாவது பலாலி சந்திக்கும் மயிலிட்டி சந்திக்கும் இடையில் உள்ள மக்களின் காணிகள். இன்று நாம் கூடியிருக்கும் இந்த இடத்துக்கு முன்னால் இருப்பது 'கமாண்டர் பங்களா' என்று அழைக்கப்படும் இராணுவத் தளபதியின் மாளிகை. நீங்கள் பார்த்தால் தெரியும். அதில் எனது காணியுடன் சேர்த்து - அதாவது எனது தாய் தந்தையின் காணி உட்பட சுமார் 200 குடும்பங்களின் காணிகளைக் கைப்பற்றித்தான் இந்தக் கமாண்டர் பங்களா கட்டப்பட்டுள்ளது."

வடக்கின் கடுமையான யுத்த மோதல்கள் காரணமாக 1990 ஆம் ஆண்டு அப்பகுதியில் வாழ்ந்த பாரம்பரிய தமிழ் மக்கள் அந்த நிலத்திலிருந்து புலம்பெயர்ந்ததன் பின்னர், அரசாங்கம் அப்பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் அறிவித்தது. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் தனது பாரம்பரிய காணியை இழந்த விதம் குறித்து சுபாஷ் பின்வருமாறு விளக்கினார்:

"இன்று எங்களுக்கு என்று ஒரு கோயில் இல்லை. சேமக்காலை இல்லை. இதோ நாம் இருக்கும் இடத்துக்கு முன்னால் இந்த இடத்தில். இங்குதான் எமது காணியில்தான் காணிக்கை மாதா தேவாலயம் இருந்தது. இன்று அது முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டு, புதர் மண்டிக் காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டு இந்தப் பிரதேசம் முற்றாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த போது நாம் இராணுவ அனுமதியுடன் வந்து ஒரு பூசையை நடத்தினோம். அப்போது இந்தத் தேவாலயம் முழுமையான கட்டடமாக இருந்தது. ஆனால் 2013ஆம் ஆண்டுக்குப் பிறகு இது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தது என்றால் 2013ஆகும் போது தேவாலயம் இல்லை என்பதன் அர்த்தம் என்ன? நாம் 2010இல் இதைப் பார்த்தோம். இன்று தேவாலயம் இல்லை. எங்கள் வீடுகள் பல இங்கு இருந்தன… இன்று ஒன்றும் இல்லை…"

சர்வதேச தொழிலாளர் தினத்தன்று வட மாகாண இராணுவக் கட்டளைத் தளபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன் னால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட வயது முதிர்ந்த தாய் ஒருவர், தனது பாரம்பரிய காணியை உடனடியாக மீள வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

"எங்களுக்கு வீடுகள் வேண்டும். நாங்கள் இலங்கையின் அநாதைகள் அல்ல, நாங்கள் இலங்கைப் பிரஜைகள். இலங்கையில் பிறந்து மயிலிட்டியிலேயே வளர்ந்த மனிதர்கள். நாங்கள் இந்தியாவில் பிறக்கவில்லை, நாங்கள் இந்தியாவுக்கு அகதிகளாகத் தப்பிச் சென்றிருந்தோம், இப்போது மீண்டும் வந்துள்ளோம். எமது வீடுகள் எமக்கு வேண்டும், எமது காணிகளை எமக்குத் தாருங்கள்…"

தமது பாரம்பரிய காணியில் இருந்த சமய மற்றும் சமூக கலாசாரத்தை இராணுவம் முற்றாக அழித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய அந்தத் தாய், தமிழ் மக்களின் காணிகளை அனுபவித்து வரும் இராணுவம் தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பொருளாதாரத்தை தற்போது முற்றாகக் கைப்பற்றியுள்ளதாக அங்கு மேலும் வலியுறுத்தினார்.

"எங்கள் மரங்களில் உள்ள தேங்காய்களைப் பறித்து எங்களுக்கே விலை பேசுகிறீர்கள். எங்கள் வீடுகளில் தூங்கிக் கொண்டு பௌத்த விகாரைகளைக் கட்டியிருக்கிறார்கள். எங்கள் முருகன் கோவில், எங்கள் பிள்ளையார் கோவில், எங்கள் மாதா தேவாலயம் இவை இருந்த இடங்கள் எல்லாம் எமக்கு இல்லாமல் போய்விட்டன. அப்படியென்றால் நாம் எங்கே இருப்பது? எங்களுக்கு உள்ள வருமானம் என்ன? எங்கள் தோட்டங்களில் இருந்த தென்னை மரங்கள், மூலமே எங்களுக்கு வருமானம் கிடைத்தது. நீங்கள் ஒரு இராணுவப் படையாக வந்து எங்கள் காணிகளைப் பிடித்து, எங்களது காணிகளில் வலுக்கட்டாயமாகத் தங்கி மிகவும் பெருமையாக இருக்கிறீர்கள். நாங்கள் எங்கே போவது? நாங்கள் வேறு நாட்டுக்கா போவது? எங்கள் காணிகளை எங்களுக்குத் தாருங்கள். எங்களது பெற்றோர் எமக்கு உரிமையாக்கித் தந்த காணிகள் இவை. அவை இராணுவதததுக்குச் சொந்தமானவை அல்ல. இலங்கை இராணுவத்துக்குச் சொந்தமானவை அல்ல, அவை இலங்கை மக்களின் காணிகள், மக்களின் கோவில்கள்…"

வாழ்வின் இறுதிக் காலத்திலாவது சுதந்திரமாக மூச்சு விடுவதற்குத் தனது பாரம்பரிய காணிகளை விடுவிக்குமாறு அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

"முன்பு எங்கள் மாதாக் கோயிலின் மணியோசை பலாலியிலிருந்து கடற்கரை ஓரம் வரை கேட்கும். இன்று அந்த தேவாலயத்தை அடக்கி வைத்துள்ளீர்கள். எங்கள் பிள்ளையார் கோவிலில் சிலைக்கு முன் சிலைகளை அமைத்திருக்கிறார்கள். அனைத்தையும் பிடித்துக்கொண்டு நீங்கள் இராணுவ அடக்குமுறை மூலம் எங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அடக்கப்பட்டவர்களை அடக்கி முடித்தாயிற்று. இப்போது இந்த வய

தான காலத்திலும் எங்களை அடக்கப் பார்க்கிறீர்கள். எமக்கு இருக்க இடமில்லை, உட்கார ஒரு வீடு இல்லை. வீட்டு வாடகை பத்தாயிரம் இருபதாயிரம். அப்படி கொடுக்க எங்களுக்கு வசதியில்லை. எமது காணிகளை விடுவியுங்கள்."

யுத்த அழிவுகள் காரணமாக காணி உரிமையை உறுதிப்படுத்துவது கடினமாகியுள்ள வடக்கில் வாழும் மக்களின் வசமுள்ள கடலோர மாவட்டங்கள் நான்கினதும் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளைக் கைப்பற்றும் நோக்கில் தற்போதைய ஆட்சியாளர்களினால் 2025 மார்ச் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட 2430ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை, வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட காணி உரிமைச் செயற்பாட்டாளர்கள் எழுப்பிய எதிர்ப்பு மற்றும் குறித்த வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதை உயர்நீதிமன்றம் இடைநிறுத்தியமை ஆகிய காரணங்கள், இந்த அரசாங்கம் அதனை மீளப்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தோற்றமும், வளர்சியும்

தமிழீழப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வரலாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாறுதான். ஏனெனில் எமது விடுதலை இயக்கமே தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைத்து நீண்ட காலமாகத் தொடர்ச்சியான, நிலையான ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமானது பத்து ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. உருக்குப் போன்ற உறுதியுடனும், உன்னத தியாக உணர்வுடனும் வீர காவியங்கள் படைத்த வீர மறவர்களின் வரலாறு இது. புரட்சிகர வரலாற்றுச் சூழ்நிலையால் பிறப்பெடுத்த விடுதலைப் புலிகள் இயக்கம், தலைமறைவு கெரில்லா அணியாகத் தோன்றி இன்று பரந்துபட்ட மக்களின் அபிமானத்திற்கும், ஆதரவிற்குமுரிய தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணாமம் பெற்றிருக்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும்போது, தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றிய வரலாற்றுப் பின்னணியைக் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

அஹிம்சா ரீதியாக – சாத்வீக – சட்டரீதியான – மென்முறை வடிவில் மேற்கொள்ளப்படும் அரசியல் கிளர்ச்சிகள் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்படும் போது, சாத்வீக அஹிம்சைப் போராட்டங்களில் இழையோடுகிற ஆத்மீக உணர்வுகளை ஒடுக்குமுறையாளன் நிர்த்தாட்சண்யமாக அசட்டை செய்யும்போது, அரசியல் கிளர்ச்சியானது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வடிவத்திலேயே வெடித்துக் குமுறுகிறது. இதையே உலகின் ஒடுக்கப்பட்ட மக்களினது சுதந்திரப் போராட்ட வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய ஒரு வரலாற்று நியதியிலேயே தமிழ்த் தேசியச் சுதந்திரப் போராட்டமும் நெறிப்படுத்தப்பட்டு, வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

தமிழ் மக்கள் காலங்காலமாக அகிம்சை வழியிலேயே தங்களது அரசியற் போராட்டத்தினை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களது அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக, காந்திஜீயின் அகிம்சை வழிக் கோட்பாட்டினைப் பின்பற்றியே தமிழ் மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். கால் நூற்றாண்டு காலமாக ஒற்றை ஆட்சி அமைப்பிற்குள் சமஸ்டி உரிமை கோரியே தமிழ் மக்கள் போராடி வந்துள்ளனர். பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும், ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் தமிழ் மக்களின் நியாயமான – சட்டபூர்வமான – நாகரீகமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள ஆட்சியாளர்களால் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் உரிமைகளுக்கான போராட்டத்தினை மனிதாபிமான முறையில் தீர்த்து வைப்பதற்கு மாறாக, சிங்கள இனவாத அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுத் தமிழ் மக்களின் அஹிம்சா ரீதியிலான சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஈவிரக்கமின்றி நசுக்கியது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான ஒரு ஒடுக்குமுறையானது, தமிழினத்தின் சமூக அமைப்பின் அடித்தளத்தையே தாக்கியது.

தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் அலை அலையாகத் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் உயிருக்கும், உடமைக்கும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நாசகார இனப்படுகொலைத் திட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசே திட்டமிட்டு மேற்கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவில் ஆயுதப் படைகள் குவிக்கப்பட்டன. இறுதியாக, தமிழ்ப் பிரதேசம் பூரண இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு தமிழருக்கெதிரான ஒடுக்குமுறையும், தொடர்ச்சியான இராணுவப் பயங்கர வெறியாட்டமும், சிங்களத் தலைவர்கள் நிரந்தரமாக இழைத்து வந்த நம்பிக்கைத் துரோகங்களும், சமாதானமான முறையில் தங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் தமிழருக்கிருந்த சகல நம்பிக்கைகளையும் அழித்து விட்டன. அரசியல் அரங்கில் தமிழர்கள் நிராதரவாக்கப்பட்டார்கள்.

வரலாற்றின் இந்த நெருக்கடியான காலகட்டத்தில்தான் புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம் (Revolutionary Armed Resistance Movement) தோற்றம் கண்டது. அரசு கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித்தனமான, இன அழிவு தழுவிய ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறெந்த வழியும் இருக்கவில்லை. எனவே 1970களின் ஆரம்பத்தில் தமிழ் மண்ணில் தோற்றம் கண்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை வளர்ச்சியும், விரிவாக்கமும் அடைந்த தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாகவே நாம் கொள்ள வேண்டும். தாங்கொணா ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டிய இறுதிக் கட்டத்திற்குத் தள்ளப்படும் மக்கள், வன்முறைப் போராட்டத்தை வரித்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. எனவே இந்த வன்முறைப் போர் வடிவமானது எமது அரசியற் போராட்டத்தின் ஒரு புதுமுகத் தோற்றப்பாடன்றி வேறொன்றுமல்ல. இரு தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி, அப்பிரதான முரண்பாட்டின் வரலாற்றுக் குழந்தையாகவே ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது. இந்த முரண்பாடானது காலப்போக்கில் அடக்குமுறையையும், அதற்கு எதிரான ஆயுத எழுச்சியையும் படிப்படியாகக் கூர்மையடையச் செய்தது.

புரட்சிகரத் தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்தே ஆயுதப் புரட்சிகர இயக்கம் கருக்கொண்டது. தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட ஒடுக்குமுறை இனவாதக் கொள்கைகளால் தமிழினத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஏற்பட்ட பாரதூரமான பாதிப்புக்களே தமிழ் இளைஞர்களைப் புரட்சிகரப் போராட்டப் பாதையை முன்னெடுக்க நிர்ப்பந்தித்தன. படித்த தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்புக்கள் பூரணமாக நிராகரிக்கப்பட்ட போது, அவர்களுக்கு இருள்மயமான எதிர்காலம் மாத்திரமே மிஞ்சிக்கிடந்தது. சிங்கள அரசாங்கத்தின் பாரபட்சமான – தமிழர்களுக்கு எதிரான – 'தரப்படுத்தல்' கல்விக் கொள்கையும், 'சிங்களம் மட்டும்' என்ற மொழிக் கொள்கையும் தமிழ் மக்களின் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினையும், வேலை வாய்ப்பினையும் இல்லாமல் செய்துவிட்டது. மேலும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் நாளாந்தம் மோசமாகிக் கொண்டிருந்தது. பொலீசும், இராணுவமும் தமிழ் இளைஞர்களைக் காரணம் ஏதுமில்லாமலேயே கைது செய்தும், மோசமாகச் சித்திரவதை செய்தும், கொன்றும் அட்டூழியங்கள் இழைத்தன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தமிழ் இளைஞர்களே அரச பயங்கரவாதத்திற்கு நேரடியாக இலக்காகிக் கொடூரமான – மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை அனுபவித்தனர்.

தொழில் வாய்ப்புகளும், உயர் கல்வி வாய்ப்புகளும் மறுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும், தொடர்ச்சியான பொலிஸ், இராணுவ அட்டூழியங்களால் சினமும் கொண்ட தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள், தங்களின் இந்த மோசமான வாழ்நிலைமைகளைப் பூரணமாக மாற்றியமைக்கும் ஒரு புரட்சிகர சோசலிசப் போராட்டத்தின் மூலமே தங்களின் தலைவிதியை மாற்றியமைக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டனர். இளைய தலைமுறையினர் சரியாக உணர்ந்து கொண்டதைப் போல, மோசமாகிக் கொண்டிருந்த தேசிய ஒடுக்குமுறையின் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் மாத்திரமே ஒரேயொரு தீர்வாக எஞ்சி நின்றது. 1970களின் ஆரம்பத்தில் எதேச்சையாகக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவாகமெடுத்த தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் அரசியல் வன்முறை எழுச்சிகள், புரட்சிகர அமைப்பொன்றை நாடி நின்றன. இந்தப் பிரத்தியேகமான அரசியற் சூழ்நிலையில்தான், அதாவது 1972இல், விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. எமது இந்தப் புரட்சி இயக்கம் இன்றைய தலைவரும், இராணுவத் தளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டது.

இயக்கம் தொடங்கப்பட்ட அதன் ஆரம்ப காலத்தில் புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் அழைக்கப்பட்டு, பின் 1976 மே ஐந்தாம் தேதி தமிழீழ விடுதலைப் புலிகள் என்று இயக்கம் புதிய பெயரைச் சூட்டிக் கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே உறுதியும், அர்ப்பணிப்பும் பேரார்வமும் கொண்ட இளம் புரட்சிவாதிகளை அது பெருமளவில் ஈர்த்துக் கொண்டது. நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டு, தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்தில் தோய்ந்த விடுதலைப் புலிகள் இயக்கம், வெகு விரைவிலேயே தமிழ் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாகப் பரிணமித்தது. விஞ்ஞான சோசலிசக் கோட்பாட்டை வரித்துக் கொண்ட புரட்சிகர விடுதலை

இயக்கம் என்ற வகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தேசியப் போராட்டத்தின் முன்னணி ஆயுதப் படையாகத் தன்னை விரைவிலேயே ஸ்தாபித்துக் கொண்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றமானது, தமிழ்த் தேசியச் சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமானது, இதுகாலம் வரை நடைபெற்று வந்த தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தினைப் பரந்துபட்ட மக்களின் ஆயுதப் போராட்டம் என்ற எல்லைக்கு விஸ்தரித்தது. எமது யதார்த்த வரலாற்றுச் சூழ்நிலைகள் அனைத்தையும் பற்றிய நுணுக்கமான பரிசீலனையின் அடிப்படையிலேயே பரந்த வெகுசனப் போராட்டத்தின் வடிவமாக ஆயுதப் போராட்டத்தை நாம் வரித்துக் கொண்டோம். எங்களின் தேசியப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் புரட்சிகரமான எதிர்ப்பியக்கத்தைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் எதுவுமேயில்லை என்ற யதார்த்த நிலைமையை முழுமையாகக் கிரகித்த பின்னரே நாம் ஆயுதப் போர்முறையைத் தழுவிக் கொண்டோம். ஆயுதப் போராட்ட வடிவமாக நாம் வரித்துக் கொண்ட கெரில்லாப் போர் முறையானது, எமது தேசியப் போராட்டத்திற்கு மிகவும் பொருத்தமான போர் வடிவமாகும். நிராயுதபாணிகளான வலிமை குறைந்த தமிழ் மக்கள், சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்டகால கெரில்லா யுத்தப் பாதையே மிகவும் பொருத்தமானது என்பதால்தான் இப்போர் யுக்தியை நாம் கைக் கொண்டோம்.

அரச ஒடுக்குமுறையை எதிர்க்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகவே எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பத்தில் அமைந்தது. காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறைக்கு இலக்கான ஒரு சமூகம் என்ற வகையில், ஆயுதம் ஏந்தி எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை எமக்குண்டு. காலப்போக்கில் அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி வந்ததால், இந்த வெறியாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எமது போராட்ட நடவடிக்கைகள் புரட்சிகர எதிர்த் தாக்குதல்களாக அமைந்தன. எமது கெரில்லாப் போர் யுக்தியை வெறுமனவே 'தாக்கிவிட்டு ஓடி மறையும்' தந்திரோபாயம் என விமர்சிப்பவர்கள், கடந்த பத்தாண்டு காலமாக விட்டுக் கொடுக்காது, தொடர்ச்சியாக, தீர்க்கமாக நாம் நடத்திய கெரில்லாத் தாக்குதல்கள், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கணிசமான அளவு எமது போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறதென்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அரச ஆயுதப் படைகளைக் கிலிகொள்ளச் செய்து, அவர்களது மனோவுறுதியையும், கட்டுப்பாட்டையும் குலைத்துவிட்ட எமது கெரில்லாப் போர் முறையானது, சிறீலங்கா அரச அமைப்பையே ஆட்டம் காணச் செய்திருப்பதுடன், தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தவும் உதவியுள்ளது. கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் ஒரு உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ள வேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. இதனைப் புரிந்து கொள்ளாத சிலர், கெரில்லாப் போர் வேறு, மக்கள் போர் வேறு எனத் தவறாக விமர்சிக்கின்றனர். கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து, அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து, இப்போர் முறையைப் பரந்துபட்ட மக்கள் போராக விஸ்தரிப்பதே எமது நோக்கமாகும்.

ஒடுக்குமுறை மோசமாகிக் கொண்டு போகும்போது, எதிர்ப்பு முறையும் மேலும் உரங்கொண்டு தீவிரம் பெறுவது இயற்கை. சகல புரட்சிகரப் போராட்டங்களிலும் இதுவே சரித்திர நியதியாக இருந்து வந்திருக்கிறது. சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் கைவிட்டுத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாத – எப்போதோ வருமென்று கூறப்படுகிற எதிர்காலத்தில் – சிறந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஒடுக்குமுறைக்கு மாறாக எதிர்ப்புமுறைகளைத் துரிதப்படுத்துவதன் மூலமே இந்த முரண்பாட்டினைச் சரியாகக் கையாளுவது சாத்தியமாகும். இதுவே எமது திட்டவட்டமான அரசியல், இராணுவக் குறிக்கோளாகும்.

எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கின் பல்வேறு கட்டங்களையும் நுணுகி ஆராய்வதன் மூலமே அதன் அரசியல், இராணுவ முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ள முடியும். இவற்றைத் தனித்த நிகழ்ச்சிகளாக – 'தனிநபர் பயங்கரவாதம் என்று – முத்திரை குத்துவதை விடுத்து, இவற்றை அதன் வரலாற்றுப் பின்னணியிலேயே பரிசீலனை செய்ய வேண்டும்.

எமது இயக்கத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள், பொலிஸ் உளவுப்படையின் அமைப்பினைச் சிதைப்பதையே மையமாகக் கொண்டிருந்தன. தமிழ் மக்களின் கிளர்ச்சிகரமான எழுச்சிகளை நசுக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ் பொலீஸ் அதிகாரிகளை அழைத்து, வடக்கில் பொலீஸ் உளவுப்படையை சிறீலங்கா அரசு ஏற்படுத்தியிருந்தது. இந்தப் பொலீஸ் உளவுப்படையில் பொலீஸ் அதிகாரிகள் மட்டுமல்ல, எமது இயக்க நடவடிக்கைகளைப் பற்றித் தகவல்கள் வழங்குவோரும், துரோகிகளும் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் எமது இயக்க நடவடிக்கையைப் பற்றிக் கூறுகிற தகவல்களுக்கு அரசு பெருந்தொகைச் சன்மானங்களை இரகசியமாக வழங்குகிறது. இத்தகைய பொலீஸ் உளவு அமைப்பானது, விசேடமாக அப்போதுதான் அரும்பிக் கொண்டிருந்த விடுதலை இயக்கத்திற்கும், பொதுவாகத் தமிழர்களின் தேசியப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. ஆகவே எமது ஆரம்பகால கெரில்லாப் போராட்ட நடவடிக்கைகள், எமது தமிழீழ மண்ணில் நிலைகொள்ள முயன்ற பொலீஸ் உளவு அமைப்பைச் சிதைப்பதையே நோக்காகக் கொண்டிருந்தன. ஆகவே இந்தக் கட்டத்தில் ஒடுக்குமுறை அரசின் ஏஜண்டுகளாக எம்மக்கள் மத்தியிலேயே இருந்து கொண்டு இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் எமது இயக்கம் ஈடுபட்டது. காலகதியில் இத்தகைய பொலீஸ் உளவுப்படை அமைப்பைச் சிதைப்பதிலே நாங்கள் வெற்றி கண்டோம். இதனால் எமது இயக்க அங்கத்தவர்கள், மக்கள் மத்தியில் அரசியற் பணிகளில் ஈடுபடுவதும், கெரில்லாத் தளங்களை அமைப்பதும் இலகுவானதாக இருந்தது.

எமது ஆயுதப் போராட்டத்தின் இரண்டாவது நடவடிக்கை தமிழீழத்தின் பொலீஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்வதை மையமாகக் கொண்டிருந்தது. அரச பயங்கரவாதத்தின் கோட்டையாகத் தமிழீழ மண்ணில் செயற்பட்டுக் கொண்டிருந்த – தீவிர உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்த – பொலீஸ் நிலையங்கள் மீது கெரில்லாத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், எமது கெரில்லாப் போராளிகள் இராணுவப் படைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். ஆங்காங்கே இராணுவப் படையினர் மீது எமது கெரில்லாப் போராளிகள் மறைந்திருந்து தாக்கியும், நேர் நின்று போரிட்டும் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர். அந்தப் படையினர் மத்தியில் பீதியும், மரண பயமும், ஒழுங்கீனமும், கட்டுபாடின்மையும் உருவாகின் கூலிப் பட்டாளத்திற்கேயுரிய கோழைத்தனமும், தப்பி ஓடும் மனோபாவமும் வேரூன்றின் பலர் இராணுவச் சேவையை விட்டே விலகினர். வடக்கே சேவையில் ஈடுபடும் இராணுவப் படையினருக்குக் கூடிய சம்பளமும், மேலதிக ஊதியமும் அரசு வழங்கியது. அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் இயக்கத்தைக் கட்டி எழுப்பும் பணியும், மக்களை அரசியல்மயப்படுத்தும் பணியும் தீவிரமுற்றன. எமது அரசியல் அணியின் தொடர்ச்சியான, கடின உழைப்பால் தமிழீழமெங்கும் தலைமறைவுக் கெரில்லாத் தளங்களை அமைப்பது விரைவிலேயே சாத்தியமானது. மேலும் எமது இயக்கத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோர் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

மக்களுடன் வாழ்ந்து, நாளாந்தம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தாமும் முகம்கொடுத்து, அவர்களின் சுக, துக்கங்களில் பங்குகொண்டு, தேசியப் போராட்டத்தில் அவர்களுடன் சேர்ந்த உழைப்பதில் எமது இயக்க அணியினர் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம், சிங்களப் பேரினவாத அரசின் மீதும், இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. தமிழீழ மண்ணில் சிங்கள அரசின் சிவில் நிர்வாகம் பூரணமாக நிலைகுலைந்தது; அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தும் செயலிழந்தன் வங்கிகள் மூடப்பட்டன் பொலீஸ் நிலையங்கள் மூடப்பட்டன் அரச அமைப்பே முழுமையாகச் சீர்குலைந்தது. சிறீலங்கா மோசமான அரசியல், சமூக நெருக்கடியை எதிர்நோக்கியது. தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் சிறீலங்காவின் பொருளாதாரம் சீரழிந்தது. ஆக எமது விடுதலைப் போர் சிங்கள ஆளும் வர்க்கத்தையும், சர்வாதிகார அரசினையும் ஆட்டங்காணச் செய்தது. சிறீலங்கா அரசு உலகிற்கு 'பயங்கரவாதம்' என்று காட்ட முயன்ற போலி நாடகம் அரங்கேறவில்லை. எமது தொடர்ச்சியான ஆயுதப் போராட்டம், யதார்த்த நிலையை உலகிற்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது. எமது புரட்சிகர ஆயுதப் போராட்டமே, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்வைத்தது.

எமது கெரில்லா அணிகளை புரட்சிகர மக்கள் இராணுவமாக விஸ்தரித்து, ஆயுதப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் அடுத்த கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். பரந்துபட்ட பொதுமக்களும் இணைந்து பங்குகொள்ளும் வெகுஜனத் தேசிய விடுதலைப் போராட்டத்தை இனங்காட்டும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம் இது. எமது பொது எதிரியான சிங்களப் பேரினவாத அரசுக்கும், அதன் பயங்கரவாத அமைப்புக்கும் எதிராக எம்மோடு தோளோடு தோள் நின்று போராட மற்ற விடுதலை இயக்கங்களும் வந்திணையும் நாள் வெகுதூரத்தில் இல்லை. எமது புரட்சிகரப் போராட்டச் சூழ்நிலைகள் அத்தகைய ஒற்றுமையைச் சாத்தியமாக்கும் என்றே நாம் நம்புகிறோம்.

(பாலா அண்ணன் – விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு என்ற நூலிற்கு எழுதிய முன்னுரை – வெளியீடு: 1985)

தமிழீழ விடுதலைப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின்

தோற்றமும், வளர்ச்சியும் – சுருக்கம்

வரலாற்றுப் பின்னணி

- தமிழ் மக்களின் நியாயமான, சட்டபூர்வமான கோரிக்கைகள் சிங்கள அரசால் புறக்கணிக்கப்பட்டன.
- இனவாதக் கொள்கைகள், மொழி (சிங்களம் மட்டும்), கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் பாகுபாடு.
- பொலீஸ், இராணுவ அடக்குமுறை, கைது, சித்திரவதை, இனப்படுகொலைகள்.
- அரசியல் அரங்கில் தமிழர்கள் நிராதரவாக்கப்பட்டனர்.
- அஹிம்சை மற்றும் சட்டரீதியான போராட்டங்கள் அடக்கப்பட்டதால், தமிழர்களிடம் அயுதப் போராட்டம் தவிர வேறு வழியில்லை.

புரட்சிகர இயக்கத்தின் தோற்றம்

- 1970களில் விரக்தியடைந்த இளைஞர்கள் புரட்சிப் பாதையைத் தேர்ந்தனர்..
- 1972இல் வேலுப்பிள்ளை பிரபாகரனால் புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம் தொடங்கப்பட்டது.
- 1976 மே 5 – ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ (த.வி.பு.) என இயக்கம் பெயர்மாற்றம் செய்தது.
- நகர்ப்புற கெரில்லா அமைப்பாகத் தொடங்கி, தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமித்தது.

ஆயுதப் போராட்த்தின் வளர்ச்சி – கட்டங்களின் சுருக்கம்

1 ஆரம்ப கட்டம்

- பொலீஸ் உளவுப்படை, துரோகிகள், அரசின் ஏஜண்டுகளை ஒழித்தல்.

2 இரண்டாம் கட்டம்

- பொலீஸ் நிலையங்கள் மீது கெலில்லாத் தாக்குதல்கள்.

3 மூன்றாம் கட்டம்

- இராணுவத்தின் மீது தாக்குதல்கள், பெரும் சேதம் மற்றும், மனோவியல் அழுத்தம் ஏற்படுத்தல்.

மக்கள் ஆதரவும், அரசியல் வளர்ச்சியும்

- மக்களுடன வாழ்ந்து, அவர்களின் பிரச்சினைகளில் பங்குபெற்று அவர்களை அரசியல் மயப்படுத்தல்.
- தொழிலாயர்கள், விவசாயிகள், மாணவர்கள், புத்திஜீவிகள் இயக்கத்தில் சேர்ந்தனர்.
- தமிழீழ முழுவதும் கெரில்லாத் தளங்கள் அமைக்கப்பட்டது.

எதிரியின்மேல் ஏற்பட்ட தாக்கம்

- சிவில் நிர்வாகம் சீர்குலைந்தது; வங்கிகள், பொலீஸ் நிலையங்கள் முடப்பட்டன.
- அரசியல் ஸ்தாபனங்கள் செயலிழந்தன.
- பொருளாதாரம் சீரழிந்தது; அரசின் மனவுறுதி மற்றும் கட்டுப்பாடு குலைந்தது.
- தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டது.

எதிர்கால நோக்கம்

- கெரில்லா அணிகளை மக்கள் இராணுவமாக விரிவாக்குதல்.
- வெகுஜனத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தல்.
- பிற விடுதலை இயக்கங்களுடன் ஒற்றுமை ஏற்படுத்தல்.
- இறுதி இலக்கு – தமிழீழத்தின் முழுமையான தேசிய விடுதலை.



வலுவிழந்த மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு!
ஊடுருவும் உக்ரைனின் ட்ரோன் போரியல்

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

08.05.2026

இரண்டாம் உலகப் போரின் போது செய்யப்பட்ட பாரிய தியாகங்களைக் கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் மே 9ஆம் நாள் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் பீரங்கிகள் அணிவகுத்துச் செல்வதுடன், கிரெம்ளினுக்கு மேலே போர் விமானங்கள் கர்ஜித்து பறந்து செல்லும். மேலும் ரஷ்ய வீரர்கள் படை படையாக அணி வகுத்துச் செல்வர். பல தசாப்தங்களாக, இந்த அணிவகுப்பு சோவியத் இராணுவப் பெருமை, தேசியப் பெருமிதம் மற்றும் ஒரு முக்கிய உலக வல்லரசாக ரஷ்யாவின் அடையாளமாக விளங்கியது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த வெற்றி நாள் அணிவகுப்பு (Victory Day Parade) ரஷ்யாவின் தேசிய பெருமையின் அரசியல் மேடையாக மாறுகிறது. இரண்டாம் உலகப்போரில் நாசி ஜெர்மனியை தோற்கடித்த மகத்தான தேசப்பற்று போர் நினைவாக நடத்தப்படும் இந்த அணிவகுப்பு, சாதாரண இராணுவ நிகழ்ச்சி அல்ல; அது ரஷ்யாவின் உலக அரசியல் அறிவிப்பாகும்.

நாசி ஜெர்மனிக்கு எதிரான தனது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை, மாஸ்கோவில் நடைபெறும் வெற்றி நாள் அணிவகுப்பில் ரஷ்யா மாபெரும் கொண்டாட்டங்களுடன் நினைவுகூர்வது வழமையாகும். மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு, இருபதாம் நூற்றாண்டின் இராணுவ மரபுகளான பெரும் படைகள், கனரக கவச வாகனங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது. இதற்கு மாறாக, உக்ரைனின் ட்ரோன் போர், பரவலாக்கப்பட்ட தொழில் நுட்பம், டிஜிட்டல் நுண்ணறிவு மற்றும் விரைவான தகவமைப்பு ஆகிய இருபத்தியோராம் நூற்றாண்டைப் பிரதிபலிக்கிறது.

ஆயினும் சமீபத்திய ஆண்டுகளில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் காரணமாக மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு வியத்தகு முறையில் மாறியுள்ளது. உக்ரைனில் நடக்கும் போர், குறிப்பாக ட்ரோன் தாக்குதல் பரவலான பயன்பாட்டின் மூலம், நவீன போரையே மாற்றியமைத்துள்ளது. அணிவகுப்பின் போது ரஷ்யா தனது பாரம்பரிய இராணுவ பலத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினாலும், உக்ரைனில் உள்ள போர்க்களம் ஒரு வேறுபட்ட யதார்த்தத்தை வெளிப்படுத்து வருகிறது.

இந்த மாற்றம், போரின் எதிர்காலம் குறித்த முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. பீரங்கிகள் வழக்கொழிந்து வருகின்றனவா என்ற சந்தேகம் எழுகிறது. பெரிய இராணுவ சக்திகளால் இன்னும் சிறிய நாடுகளை மரபுசார் படைபலத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. உக்ரைன் போர், வெறும் அளவை விட தொழில்நுட்பத் திறமையே இப்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

போர்கள் இனி பீரங்கிகள், ஏவுகணைகள் மற்றும் பெரும் படைகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. ஆளில்லா விமானப் போர் நவீன மோதலின் ஒரு புதிய கட்டத்தில் உள்ளது. அத்துடன் மலிவான ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு ஆகியவை மோதல்களின் எதிர்காலத்தை அதிகளவில் வடிவமைத்து வருகின்றன. இதனாலேயே மாஸ்கோ அணிவகுப்பிற்கும் உக்ரைனின் ஆளில்லா விமானப் போருக்கும் இடையிலான வேறுபாடு, பழைய இராணுவச் சின்னங்களுக்கும் புதிய இராணுவத் தொழில் நுட்பத்திற்கும் இடையிலான மோதலைப் பிரதிபலிக்கிறது.

மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு அர்த்தம்:

விளாடிமிர் புட்டினின் கீழ், இந்த அணிவகுப்பு புவிசார் அரசியல் வலிமையின் வெளிப்பாடாகவும் மாறியுள்ளது. ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், கவச வாகனங்கள், மேம்பட்ட போர் விமானங்கள் மற்றும் உயரடுக்கு துருப்புக்களை இராணுவ மேலாதிக்கத்தின் பிம்பத்தை வெளிப்படுத்த காட்சிப்படுத்துகிறது. ரஷ்ய குடிமக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியை அனுப்பும் வகையில் இந்த அணிவகுப்பு கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ரஷ்யா ஒரு வலிமையான உலகளாவிய சக்தியாகத் தொடர்வதை உறுதி செய்யும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உக்ரைனில் நடக்கும் போர் இந்த நிலையை தற்போது சிக்கலாக்கியுள்ளது. மேற்கத்தியத் தடைகள், இராணுவ இழப்புகள் மற்றும் போர்க்களச் சிக்கல்கள் ரஷ்யாவின் வழக்கமான இராணுவ உத்தியில் உள்ள பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளன. சமீபத்திய சில அணிவகுப்புகளில் குறைவான பீரங்கிகளும் கவச வாகனங்களும் தோன்றியதால், ரஷ்யாவின் இராணுவ வளங்கள் உக்ரைனில் உள்ள போர்முனைகளுக்குத் திருப்பி விடப்படுகின்றனவா என்ற கேள்வி பார்வையாளர்களிடையே எழுந்தது.

உக்ரைன் ட்ரோன் போரியல்:

உக்ரைன் போரில் ஏற்பட்ட மிக முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்று ட்ரோன்களின் தீவிரமான பயன்பாடு ஆகும். உக்ரைன் ட்ரோன் தொழில் நுட்பத்தை ஒரு துணைக் கருவியிலிருந்து போரின் மைய ஆயுதமாக மாற்றியுள்ளது. பெரும்பாலும் இராணுவ நோக்கங்களுக்காக மாற்றியமைக்கப்பட்ட சிறிய வர்த்தக ட்ரோன்கள், விலை உயர்ந்த கவச வாகனங்கள் மற்றும் இராணுவ உள்கட்டமைப்புகளுக்கு எதிராக மிகவும் திறம்பட செயல்படுகின்றன.

உக்ரைனியப் படைகள் கண்காணிப்பு, பீரங்கி ஒருங்கிணைப்பு, உளவு மற்றும் நேரடித் தாக்குதல்களுக்கு ட்ரோன்களைப் பயன்படுத்துகின்றன. பல சமயங்களில், ஒப்பீட்டளவில் மலிவான ட்ரோன்கள் மில்லியன் கணக்கான டாலர் மதிப்புள்ள டாங்கிகளை அழித்துள்ளன என்றும் கூறப்படுகிறது. இதற்கு மேலாக ரஷ்யாவின் ட்ரோன் தொழில் நுட்பத்தில் அதிதீவிரமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தற்காலத்தில் நவீனப் போர்முறை வளர்ச்சி அடைந்தாலும், களமுனையில் சமச்சீரற்றதாக மாறிவருகிறது என்பதை இந்த உக்ரேனிய மோதல் நிரூபித்துள்ளது. தொழில்நுட்பப் புதுமைகளைக் கொண்ட ஒரு சிறிய படையால் ஒரு பெரிய இராணுவ சக்திக்கு சவால் விட முடியும். உக்ரைனின் விரைவாகத் தகவமைத்துக் கொள்ளும் திறன், உலகெங்கிலும் உள்ள இராணுவ வியூகவாதிகளின் உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. இதே போல் ஈரான் போரில் அமெரிக்க வியூகம் தோல்வியை சந்தித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சமீபத்திய ஆண்டுகளில், மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு வியத்தகு முறையில் மாறியுள்ளது. உக்ரைனில் நடக்கும் போர், குறிப்பாக ட்ரோன் தாக்குதல் பரவலான பயன்பாட்டின் மூலம், நவீன போரையே மாற்றியமைத்துள்ளது. அணிவகுப்பின் போது ரஷ்யா தனது பாரம்பரிய இராணுவ பலத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினாலும், உக்ரைனில் உள்ள போர்க்களம் ஒரு வேறுபட்ட யதார்த்தத்தை வெளிப்படுத்து வருகிறது.

உக்ரைனில் ட்ரோன் போர்முறை, இராணுவத் தொழில் நுட்பத்தின் நவீன மயமாக்கலையும் பிரதிபலிக்கிறது. போர் விமானங்கள் அல்லது ஏவுகணை அமைப்புகளைப் போலல்லாமல், ட்ரோன்களை மலிவாக உற்பத்தி செய்ய முடியும். தொலைவிலிருந்து இயக்க முடியும். மற்றும் விரைவாக மேம்படுத்த முடியும். பொறியாளர்கள் மற்றும் தனியார் தொழில் நுட்பக் குழுக்கள் என அனைவரும் உக்ரைனின் ட்ரோன் திறன்களுக்குப் பங்களித்துள்ளனர்.

அத்துடன் ட்ரோன்கள் போரின் உளவியல் தன்மையை மாற்றியுள்ளன. போர்க்களத்தில் உள்ள வீரர்கள் இப்போது தொடர்ச்சியான வான்வழி கண்காணிப்பை எதிர்கொள்கின்றனர். பெரும்பாலும் முன்னறிவிப்பின்றி, மேலிருந்து திடீரெனத் தாக்குதல்கள் நிகழலாம். இது தொடர்ச்சியான பதற்றத்தையும் அச்சத்தையும் உருவாக்கி, போர்ச் சூழல்களை அடிப்படையாக மாற்றியுள்ளது.

பாரம்பரியப் போரின் வீழ்ச்சி:

அமெரிக்கா, சீனா போன்ற பெரும் நாடுகள் கூட உக்ரைனிலிருந்து கிடைத்த பாடங்களை உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றன. உலகெங்கிலும் உள்ள இராணுவங்கள் ட்ரோன்கள், இணையப் போர், மின்னணுப் போர் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் பெருமளவில் முதலீடு செய்து வருகின்றன. எதிர்காலப் போர்கள், பாரம்பரிய போர்க்கள அமைப்புகளைக் குறைவாகவும், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் தகவல் ஆதிக்கத்தை அதிகமாகவும் சார்ந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

அதே நேரத்தில், ட்ரோன் போர்முறை புதிய நெறிமுறை சார்ந்த கவலைகளை அறிமுகப்படுத்துகிறது. பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் எளிதாக இலக்காகலாம், கண்காணிப்பு தொடர்ச்சியாகிறது, மேலும் ஆயுதங்கள் பொறுப்புக்கூறல் மற்றும் மனிதக் கட்டுப்பாடு குறித்த அச்சங்களை எழுப்புகின்றன.

மாஸ்கோ வெற்றி அணிவகுப்பும் உக்ரைனின் ட்ரோன் போர்முறையும் இராணுவ வரலாற்றின் இரண்டு வெவ்வேறு கால கட்டங்களைக் குறிக்கின்றன. இந்த அணிவகுப்பு சோவியத் வெற்றியின் மரபு, வழக்கமான இராணுவ வலிமை மற்றும் தேசியச் சின்னத்தைப் பிரதிபலிக்கிறது. உக்ரைனின் ட்ரோன் பயன்பாடு, நவீன மோதலின் மாறிவரும் யதார்த்தத்தைக் குறிக்கிறது; இதில் தொழில்நுட்பம், தகவமைப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவை பாரம்பரிய இராணுவ மேலாதிக்கத்திற்கு சவால் விடக்கூடும்.

உலகம் செஞ்சதுக்கக் கொண்டாட்டங்களையும், உக்ரைன் மீதான ட்ரோன்கள் நிறைந்த வானத்தையும் உற்று நோக்கும் போது, போர்முறை ஒரு வரலாற்று மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது என்பது மேலும் மேலும் தெளிவாகிறது. பீரங்கிகள் மற்றும் பிரம்மாண்டமான இராணுவ அணிவகுப்புகளின் காலம் முற்றிலுமாக மறைந்து விடவில்லை, ஆனால் அது இப்போது ட்ரோன்கள், நெறிமுறைகள் மற்றும் டிஜிட்டல் போர்முறை ஆகியவற்றுடன் களத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

இன்றைய சூழலில் “வானத்தை யார் கட்டுப்படுத்துகிறார்கள்?” என்பதற்குப் பதிலாக “குறைந்த செலவில் யார் அதிக குழப்பத்தை உருவாக்க முடிகிறது?” என்பதே முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது. ட்ரோன்கள் இந்த மாற்றத்தின் அடையாளமாக உள்ளன. இதனால் பாரம்பரிய இராணுவ அணி வகுப்புகள் கூட சில நேரங்களில் பழைய காலத்தின் சக்தி காட்சியாகத் தோன்றுகின்றன.

இதேவேளை ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல், இறுதியில் ஒரு புவிசார் அரசியல் போராட்டமாக மட்டுமல்லாமல், இருபத்தியோராம் நூற்றாண்டின் போர்க்களத்தின் எதிர்காலத்தை வெளிப்படுத்திய போராக மாறியுள்ளது.

தேசக்காற்று
இது தமிழீழ மக்களின் ஆவணக்காப்பகம்
பிரிகேடியர் தீபன்
களமுனைகளின் செருக்கள நாயகன்
பொத்தகம் இதனுடன் ஒலிப்பேழை
வெளியீட்டு விழா
காலம் : 30.05.2026 (சனிக்கிழமை) மாலை 16:00 மணிக்கு
இடம் : தமிழ் இசைக் கலாமன்றம் – ஒன்ராறியோ
(THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO)
1120. TAPSCOTT ROAD, UNIT 3, SCARBOROUGH, ONTARIO, M1X 1E8, CANADA.
வீரத்தளபதியின் நினைவுகளுடன் அனைவரையும்
உரிமை அன்புடன் அழைக்கின்றோம்.
... அழைத்து மகிழும் ...
"பிரிகேடியர் தீபன்" மலராக்க குழுமம்
தொடர்புகளுக்கு :
அன்பழகி +1 (437) 225-1286 • தீபன் +1 (416) 450-6167 • விஜிதரன் +1 (647) 783-3466
மின்னஞ்சல் முகவரி : info@thesakkatru.com

தேசக்காற்று

பிரிகேடியர் தீபன்

களமுனைகளின் செருக்கள நாயகன்

பொத்தகம் இதனுடன் ஒலிப்பேழை

வெளியீட்டு விழா

காலம் : 30.05.2026 (சனிக்கிழமை) மாலை 16:00 மணிக்கு

இடம் : தமிழ் இசைக் கலாமன்றம் – ஒன்ராறியோ
(THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO)
1120, TAPSCOTT ROAD, UNIT 3, SCARBOROUGH, ONTARIO, M1X 1E8, CANADA.

திருமதி.**லலிதாஞ்சனா கதிர்காமன்** (அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி)
திருமதி.**வனிதா குகேந்திரன்** (கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி)
திருமதி.**ஜீவிதா சிவதர்ஷன்** (நாட்டிய வித்தியா)
செல்வி.**அஸ்வினி சத்தியமூர்த்தி** (கலைக்கோவில் – ரோவில் வளாகம்)
செல்வி.**மேரியா நியூட்டன்** (கலைக்கோவில் – நியூகாஸ்சல் வளாகம்)
ஆகிய ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் எழுச்சி கலை நிகழ்வுகளும்.

*வீரத்தளபதியின் நினைவுகளுடன் அனைவரையும்
உரிமை அன்புடன் அழைக்கின்றோம்.*

... அழைத்து மகிழும் ...

“பிரிகேடியர் தீபன்” மலராக்க குழுமம்

தொடர்புகளுக்கு :
அன்பழகி +1 (437) 225-1286 • தீபன் +1 (416) 450-6167 • விஜிதரன் +1 (647) 783-3466
மின்னஞ்சல் முகவரி : info@thesakkatru.com

அகண்ட நேபாளக் கனவு:

புதிய பிரதமர் பாலேந்திர ஷாவின் நேபாளமே முதல் கொள்கை?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.05.2026

நேபாள அரசியலில் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த பாரம்பரியக் கட்சிகளைப் பின்னுக்குத் தள்ளி, பாலேந்திர ஷா - வின் தலைமையிலான தேசிய சுதந்திரக் கட்சி அபார வெற்றியை கடந்த மார்ச்சில் பெற்றுள்ளது. பொறியாளராகவும், ராப் பாடகராகவும் இருந்து அரசியல் தலைவராக மாறியுள்ள பாலேந்திர ஷா, நேபாள இளைஞர்களின் எழுச்சிக் குறியீடாகப் பார்க்கப் படுகிறார்.

ஆனாலும் பாலேந்திர ஷாவின் சில முந்தைய நடவடிக்கைகள் இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளில் விரிசலை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. இந்தியாவுடன் முக்கிய முரண்பாடாக 'அகண்ட நேபாளம்' விவகாரம் எழுந்துள்ளது.

அகண்ட நேபாள பின்னணி:

'அகண்ட நேபாளம்' (Greater Nepal) என்பது 1816-ஆம் ஆண்டு சுகௌலி ஒப்பந்தத்திற்கு முன் நேபாளத்தின் கட்டுப்பாட்டில் இருந்த, தற்போது இந்தியாவின் பகுதிகளாக உள்ள நிலப்பரப்புகளை உள்ளடக்கிய ஒரு பெரும் நேபாளத்தை உருவாக்கும் கோரிக்கையாகும். இது மேற்கே சட்லெஜ் நதி முதல் கிழக்கே தீஸ்தா நதி வரையிலும், தெற்கே வாரணாசி வரையிலும் நேபாளத்தின் எல்லையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது,



இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சில பகுதிகளை உள்ளடக்கிய 'அகண்ட நேபாளம்' [Greater Nepal] வரைபடத்தைத் தனது அலுவலகத்தில் பாலேந்திர ஷா வைத்திருந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரான போக்காகப் பார்க்கப்படுகிறது.

1814-1816 ஆங்கிலேய-நேபாளப் போரின் முடிவில், சுகௌலி ஒப்பந்தத்தின் கீழ் நேபாளம் தனது நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கை இழக்க நேரிட்டது. கிரேட்டர் நேபாள நேஷனலிஸ்ட் ஃபிரண்ட் (GNNF) போன்ற அமைப்புகள், இந்த ஒப்பந்தத்தை நிராகரித்து, இழந்த டார்ஜிலிங், குமாவோன், கர்வால் போன்ற பகுதிகளைத் திரும்பக் கோருகின்றன.

இது ஒரு தேசபக்தி அல்லது தேசியவாத இயக்கமாகப் பார்க்கப் பட்டாலும், இந்தியத் தரப்பில் இது சட்டவிரோதக் கோரிக்கையாகவே கருதப்படுகிறது. இது பெரும்பாலும் இந்தியா-நேபாள எல்லைப் பிரச்சினைகள் மற்றும் பழைய உடன்படிக்கைகளைச் சுற்றியே பேசப்படுகிறது.

அகண்ட நேபாள வரைபடம்:

இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சில பகுதிகளை உள்ளடக்கிய 'அகண்ட நேபாளம்' (Greater Nepal) வரைபடத்தைத் தனது அலுவலகத்தில் பாலேந்திர ஷா வைத்திருந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரான போக்காகப் பார்க்கப்படுகிறது. அதேவேளை பாலிவுட் படங்களுக்கும் தடை விதித்துள்ளார். 'ஆதிபுருஷ்' போன்ற பாலிவுட் படங்களில் நேபாளத்தின் கலாச்சாரம் தவறாகச் சித்தரிக்கப்பட்டதாகக் கூறி, காட்மாண்டுவில் இந்தியத் திரைப்படங்களுக்குத் தடை விதித்தவர் இவரே என்று கூறப்படுகிறது.

நேபாளத்தில் உள்ள சில அரசியல் தலைவர்கள், இந்தியாவின் பகுதிகளை உள்ளடக்கிய இந்த "அகண்ட நேபாள" வரைபடத்தைப் பயன்படுத்தி அரசியல் முக்கியத்துவம் பெற முயல்கின்றனர், இது இரு நாடுகளுக்கும் இடையே விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேபாளே முதல் கொள்கை:

நேபாளே முதல் (Nepal First) கொள்கையானது அமெரிக்காவின் 'America First' பாணியில், நேபாளத்தின் நலனே முக்கியம் (Nepal First) என்ற தீவிரத் தேசியவாதக் கொள்கையை இவர் முன்னெடுத்து வருகிறார்.

இந்தியாவுடன் கலாச்சார மற்றும் பொருளாதார ரீதியாக நேபாளம் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருந்தாலும், பாலேந்திர ஷா சீனாவுடன் நெருக்கமான உறவை வளர்க்க முயலலாம் என நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

எல்லைப் பிரச்சனை உள்ள கலாபானி மற்றும் லிம்பியாதுரா போன்ற விவகாரங்களை இவர் மீண்டும் தீவிரமாக எழுப்ப வாய்ப்புள்ளது. இந்தியாவின் எரிபொருள் மற்றும் போக்குவரத்துச் சார்ந்து இருக்கும் நேபாளத்தின் நிலையை மாற்றி, சீனாவுடனான போக்குவரத்துத் திட்டங்களை அவர் துரிதப்படுத்தலாம்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்த மாற்றத்தைக் கூர்ந்து கவனித்து வருகிறது. இளம் தலைவரான பிரதமர் பாலேந்திர ஷாவுடன் பேச்சுவார்த்தை மூலம் சுமுக உறவை ஏற்படுத்த இந்தியா முயலுகிறது. இருப்பினும், அவரது 'நேபாள் ஃபர்ஸ்ட்' கொள்கை இந்திய நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இராஜதந்திர நகர்வுகள் அமையும் என எதிர்

பார்க்கப்படுகிறது.

நேபாள பிரதமர் பாலேந்திர ஷா

நேபாள இளம் அரசியல்வாதியும் கட்டுமானப் பொறியாளரான முன்னாள் ராப் கலைஞரான பாலேந்திர ஷா 2022ஆம் ஆண்டு காத்மாண்டு மேயர் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய அளவில் பிரபலமானார். தற்போது நேபாளத்தில் பாலேந்திர ஷா பிரதமராக பதவியில் உள்ளார்.

அவரது துணிச்சலான பேச்சும், வலுவான சமூக ஊடக பிரச்சாரமும் அவரை நேபாளத்தின் முக்கிய இளம் அரசியல் தலைவர்களில் ஒருவராக்கியது. சுயேச்சை வேட்பாளராக வெற்றி பெற்ற அவர், தற்போது ராஷ்ட்ரிய ஸ்வதந்திர கட்சியில் இணைந்து நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

காத்மாண்டுவின் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்த பாலன் ஷா அங்கேயே வளர்ந்தார். அவரது தந்தை ராம் நாராயண் ஷா, அரசு ஆயுர்வேத மருத்துவர். சிறுவயதிலிருந்தே கவிதைகள் மற்றும் படைப்பு வெளிப்பாட்டில் ஆர்வம் காட்டிய அவர், அதுவே அவரது இசைப் பயணத்திற்கு அடிப்படையாக அமைந்தது. காத்மாண்டுவில் சிவில் இன்ஜினியரிங் படித்த பாலன் ஷா, பின்னர் இந்தியாவில் கட்டுமானப் பொறியியலில் முதுகலை பட்டம் பெற்றார்.

அரசியலுக்கு வருவதற்கு முன்பு, பாலன் ஷா நேபாள ஹிப்-ஹாப் உலகில் மிகவும் பிரபலமானவராக இருந்தார். அவர் “ரா பார்ஸ்” ராப் போர் மேடையில் பங்கேற்று மிகுந்த புகழ்பெற்றார். அவரது பாடல்களில் ஊழல், அரசியல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. இவை இளைஞர்களிடையே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் நேபாளியர்கள் மத்தியில் ஒரு பெரிய ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியது.

2022 காத்மாண்டு மேயர் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டது பாலன் ஷாவின் அரசியல் பயணத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பெரிய கட்சிகளின் வேட்பாளர்களைத் தோற்கடித்து, 61,767 வாக்குகளுடன் அவர் மேயரானார். சட்டவிரோதக் கட்டுமானங்களை அகற்றுவது, கழிவு மேலாண்மை, மற்றும் நகர்ப்புற நிர்வாகச் சிக்கல்களில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது போன்ற துணிச்சலான முடிவுகளால் அவர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

பாலன் ஷாவின் இந்த வளர்ச்சி, அரசியல் மாற்றத்தை விரும்பும் இளம் வாக்காளர்களின் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கிறது. சமூக ஊடகங்களில் பல மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ள அவர், தனது ஆதரவாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதுடன், பாரம்பரிய ஊடகங்களை புறந்தள்ளி தனது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். இது புதிய தலைமுறை அரசியலின் ஒரு முக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகிறது.

அவரது ஆதரவாளர்கள் அவரை புதிய தலைமுறை அரசியலின் சின்னமாகப் பார்க்கின்றனர். ஆனாலும், அவரது மோதல் போக்கையும், வழமைக்கு மாறான பிரச்சார முறைகளையும் விமர்சகர்கள் கேள்விக்கு உள்ளாக்குகின்றனர். ராப் கலைஞர், பொறியாளர், மேயர் என பாலன் ஷாவின் இந்த பயணம், நேபாள அரசியலில் தலைமைத்துவம் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பு குறித்த ஒரு புதிய விவாதத்தை ஏற்கனவே தொடங்கி வைத்துள்ளது.

அதேவேளை நேபாளத்தில் உள்ள சில அரசியல் தலைவர்கள், இந்தியாவின் பகுதிகளை உள்ளடக்கிய இந்த “அகண்ட நேபாள” வரைபடத்தைப் பயன்படுத்தி அரசியல் முக்கியத்துவம் பெற முயல்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. இது இரு நாடுகளுக்கும் இடையே பாரிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனிநாட்டுக் கோரிக்கை ஏன்?
தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணி

05.05.2026

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் 'தனிநாடு' அல்லது 'தமிழீழம்' என்ற கோரிக்கை என்பது திடீரெனத் தோன்றிய ஒன்றல்ல. இது தசாப்த காலங்களாகத் தமிழ் மக்கள் சந்தித்த திட்டமிட்ட ஒடுக்குமுறைகள், அரசியல் ஏமாற்றங்கள் மற்றும் வன்முறைகளின் விளைவாக உருவான ஒரு தற்காப்பு அரசியல் முடிவாகும். 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் உத்தியோகபூர்வமாக முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கையின் பின்னணியில் உள்ள நியாயமான காரணங்களை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்தபோது, நிர்வாக வசதிக்காக 1833இல் முழுத் தீவையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர். அதற்கு முன்னர், யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம் மற்றும் கோட்டை இராச்சியம் எனத் தனித்தனி இறையாண்மையுள்ள தேசங்களாகவே இலங்கை இருந்தது. 1948இல் பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறிய போது, சிறுபான்மைத் தமிழர்களின் பாதுகாப்பு குறித்த முறையான அரசியலமைப்பு உத்தரவாதங்கள் இன்றி, பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்தனர். இதுவே எதிர்காலப் பிளவுகளுக்கு வித்திட்டது.

சுதந்திரம் கிடைத்த உடனேயே, இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முதல் நடவடிக்கை '**இலங்கை குடியுரிமைச் சட்டம்**' ஆகம். இதன் மூலம் மலையகத் தமிழ் மக்களின் (இந்திய வம்சாவளித் தமிழர்கள்) குடியுரிமை பறிக்கப்பட்டது. ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் ஒரே இரவில் நாடற்றவர்களாக்கப்பட்டனர். இது தமிழர்களின் அரசியல் பலத்தை நாடாளுமன்றத்தில் குறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டது.

தமிழீழக் கோரிக்கையின் மிக முக்கியமான திருப்புமுனை 1956இல் நிறைவேற்றப்பட்ட '**சிங்களம் மட்டும்**' (Official Language Act) சட்டமாகும். அதுவரை ஆங்கிலம் மற்றும் சுதேச மொழிகள் சமமாக இருந்த நிலையில், சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக்கப்பட்டது. இதனால் தமிழ் பேசும் அரசு ஊழியர்கள் வேலை இழந்தனர் தமிழ் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் பறிக்கப்பட்டன. இது தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றிய ஒரு செயலாக அமைந்தது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாகக் கருதப்படுகின்றன. ஆனால், அரசாங்கம் 'கல் ஓயா' போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் தமிழ் நிலங்களில் சிங்கள மக்களைத் திட்டமிட்டு குடியேற்றியது. இது தமிழர்களின் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கும், தேர்தல்களில் தமிழ் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கும் எடுக்கப்பட்ட முயற்சியாகத் தமிழ் மக்களால் உணரப்பட்டது.

1970-களில் கொண்டுவரப்பட்ட '**கல்வித் தரப்படுத்தல்**' (Standardization Policy) தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தை நிலைகுலையச் செய்தது. பல்கலைக்கழகப் பிரவேசத்தில் சிங்கள மாணவர்களுக்குக் குறைவான புள்ளிகளும், தமிழ் மாணவர்களுக்கு அதிகமான புள்ளிகளும் தேவைப்பட்டன. இது திறமையான தமிழ் இளைஞர்களைத் தண்டிக்கும் செயலாக அமைந்தது. இந்த அநீதியே இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டிய மிக முக்கியமான காரணியாகும்.

– சு.லோஜிதன் –

தந்தை செல்வா என அழைக்கப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழர்கள் 1950 முதல் 1970 வரை அறப்போர் (சத்தியாக்கிரகம்) நடத்தினார்கள்.

- *பண்டாரநாயக்க - செல்வா ஒப்பந்தம் (1957)*
- *டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965)* ஆகியவை சிங்களத் தலைவர்களால் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறியப் பட்டன. அமைதியான முறையில் சமஷ்டி (கூட்டாட்சி) கேட்ட தமிழ் மக்கள் மீது அரச ஆதரவுடன் இனக்கல வரங்கள் (1956, 1958) ஏவிவிடப்பட்டன.

அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில், 1976 மே 14 அன்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி '**வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை**' நிறைவேற்றியது. "இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழீழ அரசை மீட்பதே" தமிழர்களின் ஒரே தீர்வு எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1977 பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் இந்தத் தீர்மானத்திற்குப் பெருவாரியாக வாக்களித்துத் தமது அங்கீகாரத்தை வழங்கினர்.

1981இல் ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது தமிழர்களின் கலாச்சார அடையாளத்தின் மீதான தாக்குதலாகும். 1983 ஜூலையில் நடந்த மிகக்கடுமையான இனக்கலவரம், ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்ததுடன், இலட்சக்கணக்கானோரை அகதிகளாகப் புலம்பெயரச் செய்தது. இதன் பின்னரே, தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இயக்கங்களின் ஆயுதப் போராட்டம் மக்கள் மயப்பட்டது.

முடிவுரை

தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கை என்பது வெறும் பிரிவினைவாதமல்ல; அது ஒரு தேசிய இனத்தின் இருப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த போராட்டமாகும். மொழி உரிமை, கல்வி உரிமை, நில உரிமை மற்றும் வாழ்வுரிமை என அனைத்தும் மறுக்கப்பட்ட ஒரு சூழலில், கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்குத் 'தன்னாட்சி' ஒன்றே தீர்வு என்ற முடிவுக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். 2009இல் போர் முடிவுக்கு வந்தாலும், அந்தக் கோரிக்கைக்கு அடிப்படையாக இருந்த காரணங்கள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படாமலேயே உள்ளன என்பது கசப்பான உண்மையாகும்.

காலம் கிழித்த கோடுகள் அல்ல இவை,
காயம் விதைத்த சரித்திரங்கள்!
எம் தேசத்தின் வரைபடம் – எங்கள்
உடலில் படிந்திருக்கும் தழும்புகள்.
முட்கம்பி வேலிகள் தைத்த தழும்புகள்,
மொழியைக் காக்க முளைத்த தழும்புகள்
பெயரிடப்படாத கல்லறைகளில்
துயில்கொள்ளும் வீரத்தின் சுவடுகள்.
பனை மரத்துச் சிராய்ப்புகளில்
இன்னமும் ஒட்டிக் கிடக்கிறது –
பயத்தில் உறைந்த ஒரு பிஞ்சுப் பாலகனின்
சிதறிய கதறல் சத்தம்!
வீடுகள் எரிந்து சாம்பலாகலாம்,
வீதிகள் சிதைந்து உருமாறலாம்!
ஆனால்...
ஈர மண்ணில் புதைந்த ரத்தமும்,
எங்கள் ஆன்மாவில் படிந்த வடுக்களும்
யுகங்கள் கடந்தும் உண்மையைச் சொல்லும்.
வலிகள் இங்கே வெறும் கண்ணீர் அல்ல,
அவை –
நாளை முளைக்கப் போகும்
விடுதலை விதைகளின் அழியாத தழும்புகள்.

– சு.லோஜிதன் –

அழியாத தழும்புகள்

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கான காரணங்கள் இன்றும் நிலைத்துள்ளன!

விசுவநாதன் ருத்ரகுமாரன், பிரதமர், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

13.05.2026

வட்டுக்கோட்டைத் தீர்மனத்தை அமுல்படுத்துவதற்கான முதல்படி தமிழ்த்தேசிய பேரவையை உருவாக்குதல்

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 14.05.2026 அன்று 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இதனையொட்டி, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எமது கருத்துகளைப் பகிரந்து கொள்கிறோம்.

1976 மே 14 அன்று, தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் (TULF) தலைமையில் ஈழத் தமிழ் மக்கள் வட்டுக்கோட்டையில் ஒன்று கூடி வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அறிவித்தனர்.

அதில், "இந்த நாட்டில் தமிழ்த் தேசத்தின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக, ஒவ்வொரு தேசத்திற்கும் இயற்கையாக உள்ளதான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திரமான, இறையாண்மையுடைய, மதச்சார்பற்ற, சமதர்ம தமிழீழ அரசை மீள நிறுவுவதும் மறுசீரமைப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது" என்று பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானம், தமிழ்த் தேசத்தின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் அடைவதற்கான செயற் திட்டத்தை தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி வகுக்க வேண்டும் என வலியுறுத்தியது. மேலும், தமிழீழத் தனிநாட்டை நிறுவும் போராட்டத்தில் தமிழ் மக்களும் குறிப்பாக இளைஞர்களும் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது.

தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவுக்கு, தமிழர் தேசத்தின் இறையாண்மையையும் விடுதலையையும் அடையும் போராட்டத்தை தாமதமின்றி முன்னெடுக்க செயல் திட்டம் வகுக்குமாறு மாநாடு பணித்தது.

வடுகோட்டைத் தீர்மானம் என்பது 1974இல் தொடங்கிய அரசியல் மாற்றப் பயணத்தின் தொடர்ச்சியான பரிணாமமாகும். 1974ஆம் ஆண்டு தந்தை செல்வா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து, 1972 அரசியலமைப்பை தமிழர்கள் ஏற்கிறார்களா என்பதை மக்கள் தீர்ப்பாக மாற்ற இடைத்தேர்தலை கோரினார். சிறீலங்கா அரசு தேர்தலை தாமதப்படுத்தி 1975இல் நடத்தியது. அந்தத் தேர்தலில் அவர் மிகப்பெரிய வெற்றி பெற்றார். வெற்றிக்குப் பின்னர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்.

"இந்தத் தேர்தல் தீர்ப்பை, தமிழீழ தேசம் தமக்குரிய இறையாண்மையை நடைமுறைப்படுத்தி சுதந்திரம் பெற வேண்டும் என்ற மக்களின் ஆணையாக நான் கருதுகிறேன். தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் சார்பில், இந்த ஆணையை நாங்கள் நிறைவேற்றுவோம் என உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்."

வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழீழ சுதந்திரப் போராட்டத்தின் அரசியல் தொடக்கமாக அமைந்தது. இந்தத் தீர்மானம் கூட்டாட்சிக் கோரிக்கையைத் தாண்டி, தனித்த தமிழீழத்தின் அவசியத்தை வலியுறுத்தியது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பின்னர், தனிநாடு தொடர்பான ஆவணங்களை வைத்திருப்பதும் பகிர்வதும் குற்றமாக்கப்படும் வகையில் அவசரச் சட்டங்களை சிறீலங்கா அரசு கொண்டு வந்தது.

தமிழ் தலைவர்கள் அந்தச் சட்டத்துக்கு எதிராக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பகிரங்கமாகப் பகிர்ந்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு 10 நாட்கள் தனிமைக் காவலில் வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் விசேடமாக அமைக்கப்பட்ட "Trial-at-Bar" எனும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். அந்த வழக்கில் 67 தமிழ் வழக்கறிஞர்கள் முன்னிலையாகினர். வழக்கறிஞர் திருச்செல்வம் வரலாற்றுச் சான்றுகளை முன்வைத்து, காலனித்துவ ஆட்சியாளர்கள் வெளியேறியபோது தமிழர்களின் இறையாண்மை மீண்டும் தமிழரிடமே திரும்பியது; மேலும் புதிய அரசியலமைப்பிற்கு தமிழர்கள் ஒப்புதல் அளிக்காததால், அந்த அரசியலமைப்பின் கீழ் இயங்கும் நீதிமன்றங்களுக்கு தமிழர்கள் மீது அதிகாரம் இல்லை என்று வாதிட்டார். நீதிமன்றம் இதை "அரசியல் கேள்வி" எனக் கூறி தீர்ப்பளிப்பதனைத் தவிர்த்தது.

வரலாற்றோட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக, அரசுக்காக அன்று ஆஜரான அன்றைய சட்டமா அதிபர் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியலமைப்பு விவகாரக் குழுவில் இணைந்து, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA) வடிவமைப்பில் பங்காற்றியமை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தனிநாட்டிற்கான மக்கள் ஆணையை நாடி 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. இத் தேர்தலில் தாங்கள் மக்கள் ஆணையை வென்றால் ஒரு அரசியல் நிர்ணயச் சபையை அமைப்போம் எனத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தனர்.

ஆனால், அனைவரும் அறிந்ததுபோல், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அரசியல் நிர்ணய சபையை அமைக்கவில்லை. தமிழ் மக்களை அவர்கள் வாக்குறுதியளித்த இலக்கிற்குக் அழைத்துக் கொண்டு செல்லவுமில்லை.

அந்த மக்கள் ஆணையை இளைஞர்கள் தங்களுடைய பொறுப்பாக ஏற்றுக்கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அந்த ஆணையை நடைமுறைப்படுத்தி, ஒரு நடைமுறை அரசைக் (de facto state) கட்டியெழுப்பினர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் இருந்த அடிப்படைச் சூழ்நிலைகள், தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கான காரணங்கள் இன்று வரை தொடர்கின்றன.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு சிறீலங்கா அரசு ஆற்றிய எதிர்வினையின் தன்மையும் இன்றளவும் மாறவில்லை. 2009ஆம் ஆண்டு, அந்த அரசியல் மற்றும் இராணுவ அடக்குமுறை முல்லிவாய்க்கால் இனவழிப்பின் உச்சத்தை எட்டியது.

இன்று தாயகச் சூழல் காரணமாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆதரவாக தாயக மக்கள் செயற்பட முடியாத நிலை உள்ளது. இதனால், அந்த வரலாற்றுப் பொறுப்பையும் மக்கள் ஆணையையும் தமிழ் புலம்பெயர் சமூகம் தன்னகத்தே தாங்கி நிற்கிறது. சர்வதேச நடைமுறைகள், சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைக் கோட்பாடுகளின் அடிப்படையில், அந்த மக்கள் ஆணையை ஜனநாயக ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கான உரிய கருவி மக்கள் வாக்கெடுப்பே (Referendum) என்று தமிழ் புலம்பெயர் சமூகம் நம்புகிறது.

அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட வரைவு தீர்மானங்கள், ஸ்கொட்லாந்து பாராளுமன்ற விவாதங்கள், தமிழ் நாடு சட்டமன்றத் தீர்மானம், வடமாகாண சபைத் தீர்மானம், மேலும் விஜய் மற்றும் சீமான் ஆகியோரின் தேர்தல் அறிக்கைகள் - இவை அனைத்தும் தமிழர்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு அதிகரித்து வரும் சர்வதேச அங்கீகாரத்தை வெளிப்படுத்துகின்றன.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நேரடியாக தமிழீழத்தை வலியுறுத்தியிருந்தாலும், இன்று பல்வேறு விருப்பங்களை உள்ளடக்கிய ஜனநாயக வாக்கெடுப்பு முறையின் மூலம் அந்த வரலாற்று ஆணையை முன்னெடுக்க வேண்டிய தேவையும் உருவாகியுள்ளது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அரசியல் இலக்கை அடைவதற்கான ஒரு தந்திரோபாய வழிமுறையாகவே நாம் மக்கள் வாக்கெடுப்பை முன்வைக்கிறோம். மக்கள் வாக்கெடுப்புக்காக நாம் முன்வைக்கும் திட்டத்தில் பன்மைத்துவம், இணைச்சேர்க்கை, ஜனநாயக உரிமைகள் போன்ற சுதந்திரவாதக் கொள்கைகள் இடம்பெற்றால், அது சர்வதேச சமூகத்தின் ஏற்புடைமையை அதிகரிக்கும். வாய்ப்பைக் கொண்டிருக்கும். மேலும், சுயநிர்ணய உரிமையின் உண்மையான அரத்தமும் பல்வேறுவகையான அரசியற்தெரிவுகளுக்குள் மக்கள் தங்கள் அரசியற்தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் ஒரு முடிவை எடுக்கும் உரிமையையே வலியுறுத்துகிறது. பல்வேறு தேர்வுகளை வழங்குவது, மாற்று அரசியல் தீர்வை விரும்புவோரையும் இந்த ஜனநாயக செயல்முறைக்குள் கொண்டு வந்து அதன் நம்பகத்தன்மையையும் சட்டபூர்வத்தன்மையையும் வலுப்படுத்தும்.

நாம் கவனத்தில். கொள்ள வேண்டிய முக்கியமான உண்மை என்னவெனில், சிங்கள அரசியல் மனோபாவத்தின் அடிப்படை இயல்பு இதுவரை மாற்றமடையவில்லை. சிறீலங்கா அரசு இறுக்கமான பௌத்த இனவாதக் கட்டமைப்பாக இறுகிப் போயுள்ளது. அமெரிக்க அரசியல் அறிஞர் டொனால்ட் ஹோரோவிட்ஸ் குறிப்பிட்டதுபோல், சிறீலங்காவின் ஆழமான இனவாத அரசியல் சூழல் உண்மையான அதிகாரப் பகிர்வை அனுமதிக்கப் போவதில்லை.

தற்போது தமிழ் அரசியல் வட்டாரங்களில் புதிய அரசியலமைப்பு முன்மொழிவுகளை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. அந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களை நாம் மதிக்கும் அதேவேளை வரலாறு தந்த பாடத்தின் அடிப்படையிலான எச்சரிக்கையையும் முன்வைக்க விரும்புகிறோம். இம் முயற்சிகள் பயனற்றவையாக அமையும் என்பது மட்டுமின்றி, ஈழத் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் இலக்கிற்கே பாதகமாக அமையக் கூடும் என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

2009க்கு முன்னர், "விடுதலைப் புலிகள் இருப்பதால் அரசியல் தீர்வு சாத்தியமில்லை" என்று சர்வதேச சமூகம் கூறியது. இன்று "தமிழர்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் அரசியல் தீர்வு சாத்தியமில்லை" என்று கூறப்படுகிறது; அல்லது கூறப்படக் கூடிய நிலைமைகள் உள்ளன.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை என்ன, அவர்களது விருப்பு என்ன என்று யாரேனும் கேட்பின், தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக் காலத்தில் முன்வைத்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பு (ISGA) முன்மொழிவை தாயக அரசியற் கட்சிகள் எடுத்துக்காட்டாகக் காட்டலாம். இம் முன்மொழிவு குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு கூறியது போல், "இம் முன்மொழிவை அப்படியே ஏற்கவோ இல்லையெனில் நிராகரிக்கவோ தேவையில்லை. இதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முடியும்." என்பது இப்போதும் காலப்பொருத்தம் உடையது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 50 வருடங்கள் நிறைவடையும் இவ்வேளையில் இலங்கைத் தீவில் தமிழ், சிங்கள தேசங்களின் அரசியல் உருவாக்கமும் மேலும் வலுப்பெற்றுள்ளது. அதேசமயம் சிங்கள அரச ஒடுக்குமுறையும் இராணுவ அடக்குமுறையும் இக் காலகட்டத்தில் பெரிதும் தீவிரமடைந்திருந்தது. வட்டுக்கோட்டைத் தீர்மான காலத்தில் சிறீலங்கா ஆயுதப்படைகளின் எண்ணிக்கை 10,000க்கும் குறைவாக இருந்தது. இன்று அது பல இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

1977 ஆண்டின் மக்கள் ஆணையை முன்னெடுத்து செல்ல வேண்டுமெனில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடி, ஒரு தமிழ் தேசிய பேரவையை (Tamil National Assembly) உருவாக்குவது பொருத்தமான அடுத்த கட்ட நடவடிக்கையாகும். இதனை எவ்வாறு செய்வது என்பது திட்டமிடப்பட வேண்டும்.

6வது திருத்தச் சட்டமும் தாயகத்தில் நிலவும் இராணுவ அடக்குமுறையையும் கருத்தில் கொண்டால், ஆரம்ப கட்டத்தில் அந்த அமைப்பை தமிழ் புலம்பெயர் சமூகமே உருவாக்க முடியும்.

பின்னர், சர்வதேச ஆதரவுடன் தாயகத் தமிழர்களும் அதில் இணைந்து பங்கேற்கக்கூடிய சூழல் உருவாக்கப்படலாம்.

வட்டுக்காட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடையும் இக் காலப்பகுதியில் ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினையும், இறைமையையும் வென்றெடுப்பது குறித்து அர்த்தபூர்வமான உரையாடலில் ஈடுபட ஈழத் தாயகம், தமிழர் புலம் பெயர் நாடுகள், தமிழ்நாடு, உலகெங்கும் தபிழ் மக்கள் வாழும் நானுகளில் உள்ள அரசியல் அமைப்புகள், சமூக இயக்கங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

நன்றி.

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஜேர்மனியிலிருந்து அமெரிக்கப் படை விலகல்: நேட்டோ முறுகலின் உச்சக்கட்டம்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

04.05.2026

ஜேர்மனியிலிருந்து ஐந்து ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்களை விலத்திக் கொள்வதாக பென்டகன் அதிகாரப்பூர்வ மாக அறிவித்துள்ளது. இந்த விலகல் அறிவிப்பு நேட்டோ (NATO) முக்கிய உறுப்பினரான ஜேர்மனிக்கு அதிபர் டிரம்பின் நேரடிப் பதிலடியாக அமைந்துள்ளது.

நேட்டோ அதிர்ச்சி:

இந்த திடீர் முடிவு ஐரோப்பிய நேட்டோ கூட்டமைப்பு நாடுக ளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பதற்ற நிலையை ஏற்படுத்தியதுடன், அமெரிக்கா மற்றும் பிற நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு இடையிலான நீண்டகாலக் கூட்டணி உறவில் விரிசலை ஏற்படுத்துவதாக சர்வதேச அரசியல் விமர் சகர்கள் கருதுகின்றனர்.

இந்தப் படை விலகல் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த நேட்டோ அமைப்பு திட்டமிட்டுள்ளது. மேலும் ஈரான் போர் விவகாரத்தில், நேட்டோ நாடுகள் அமெரிக்காவின் நட வடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு தராததுதான் இந்த முடிவுக்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

அத்துடன் டிரம்ப் நிர்வாகம், நேட்டோ நாடுகள் தங்களின் தற் காப்புச் செலவுகளை அதிகரிக்க வேண்டும் என்றும், அமெரிக் காவின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறிப்

பிடத்தக்கது

அமெரிக்க வீரர்கள் வாபஸ்:

ஈரான் போர் விவகாரத்தில் நேட்டோ அமைப்புடன் வெடித்த சர்ச் சைக்குரிய கருத்து மோதலால் படைகளைத் திரும்பப் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளது என்றும் சில தகவல்கள் தெரி விக்கின்றன. ஈரான் போர் விவகாரத்தில் அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே விரிசல் அதிகரித்து வரு கிறது. இந்த நிலையில் ஜேர்மனியிலிருந்து 5,000 அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்செத் உத்தரவிட்டுள்ளார்.

வளைகுடாவில் கடந்த இரண்டு மாதங்களாக நீடிக்கும் ஈரான் போரை முடிவுக்குக் கொண்டுவரும் அமைதிப் பேச்சுவார்த் தைகளில், அமெரிக்காவை ஈரான் அரசாங்கம் அவமானப் படுத்துவதாக ஜேர்மனி அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ் (Friedrich Merz) விமர்சித்திருந்தார். இந்த வார்த்தைப் போருக்குப் பிறகே அதிபர் டிரம்ப் ஜேர்மனிக்கான படைகளைக் குறைக்கும் அச் சுறுத்தலை விடுத்து உள்ளார்.

அதேவேளை அமெரிக்கா படைகளை ஜேர்மனியிலிருந்து வெளியேற்றி ஈரான் நோக்கி நகர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆனாலும் இந்த விவ காரத்தில் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகிறது.

ஈரான் போர் தொடர்பாக அதிபர் டொனல்ட் டிரம்புக்கும் ஜேர்மனிய அதிபர் பிரைட்ரிக் மெர்ஸுக்கும் இடையே கடும் கருத்து வேறுபாடு நீடிக்கிறது. பாகிஸ்தானில் அமைதிப் பேச்சில் கலந்துகொண்ட ஈரானியப் பிரதிநிதிகளால் அமெரிக்கா அவ மானப்படுத்தப்பட்டது என்று திரு மெர்ஸ் கூறியிருந்தார். அதற் காக அவரைத் திரு. டிரம்ப் கடுமையாக விமர்சித்து இருந்தார்.

இதனை தொடர்ந்து ஜேர்மனிய அரசும், அதிபர் மெர்ஸ் மோச மாகப் பணியாற்றுகிறார் என்று திரு டிரம்ப் சமூக ஊடகங்களில் குறிப்பிட்டு இருந்தார். ஜேர்மன் நாட்டில் குடியேறிகள் விவ காரம், எரிசக்தி உட்பட அவருக்குப் பல பிரச்சினைகள் உள்ளன என்றும் டிரம்ப் கூறியிருந்தார்.

ஜேர்மனியில் அமெரிக்கத் துருப்பு

கடந்த ஆண்டு டிசம்பர் நிலவரப்படி ஜேர்மனியின் பல்வேறு தளங்களில் அமெரிக்கத் துருப்பினர் 36,000க்கும் அதிக மானோர் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற் போதைய சூழலில் அடுத்த ஆறு மாதம் அல்லது ஓராண்டில் துருப்பினரை மீட்டுக்கொள்ளும் நடவடிக்கை நிறைவடைய லாம் என்று அமெரிக்கத் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜேர்மனியிலிருந்து மட்டுமல்ல இத்தாலி மற்றும் ஸ்பெயினி லிருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறப் போவதாகவும் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஐரோப்பாவில் உள்ள இராணுவ நிலையைப் பற்றி ஆழமான மறு ஆய்விற்குப் பிறகு அங்குள்ள சூழ்நிலைகள் மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று பென்டகன் செய்தி தொடர்பாளர் சான் பார்னெல் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் அமெரிக்கா படை குறைப்பு:

ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா படைகளை குறைக்கிறது என்பது நீண்ட கால விவாத்திற்கு உரியது. இதற்கு பல காரணங்களை அமெரிக்க அரசு முன்வைக்கிறது. குறிப்பாக நேட்டே உறுப்பினர் நாடுகளின் பாதுகாப்புச் செலவினம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் ஜேர்மன் நாட்டின் நேட்டோ இலக்கான 2% (GDP) பாதுகாப்பு செலவை நீண்டகாலமாக எட்டவில்லை என்ற குற்றச் சாட்டை அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து தெரிவித்து வரு கிறார்.

அதேவேளை அமெரிக்க படைகள் வாபஸ் பெறுவது தந்திர நட வடிக்கை மாற்றம் என்றும் கூறப்படுகிறது. அமெரிக்கா தற்போது சீனா மற்றும் இந்தோ-பசிபிக் பகுதிக்கு கூடிய கவனம் செலுத் துகிறது என்ற கருத்தும் உள்ளது. எனினும் நேட்டோவில் உச் சக் கட்ட முறுகல் நிலை உள்ளது என்பதை டிரம்பின் தற் போதைய நடவடிக்கை காட்டுகிறது.

நேட்டோ முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் கூட்டணியாகும். ஆனால் தற்போதைய உலக சூழலில் கருத்து வேறுபாடுகள் இயல்பாக இருந்து வருகின்றன. உக்ரைன் போரின் பிறகு,

நேட்டோ அமெரிக்க கருத்து வேறுபாடு அதிகரித்துள்ளது. டிரம்ப் புட்டின் உறவு தொடர்பாக நேட்டோ அமைப்பில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன.

அமெரிக்க படைகள் விலகினால் நேட்டோவுக்காக ஜேர்மனி பாதுகாப்புச் செலவினத்தை அதிகரிக்க நேரிடும். இது முழு மையான மாறும் தந்திர செயலாகும் என்று அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார். தொடரும் படை விலகலால் ஜேர்மனிக்கு தாக்கம் ஏற்படலாம். அமெரிக்க படைகள் குறைந்தால், ஐரோப்பா தனது பாதுகாப்பை தானே மேம்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் (European Union) பாதுகாப்பு ஒருங்கிணைப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

அத்தகைய சூழ்நிலையில் ஜேர்மனி தனது இராணுவத்தை (Bundeswehr) மேம்படுத்த முதலீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஆனாலும் அமெரிக்க படைகள் முழுமையாக நேட்டோ அமைப்பில் இருந்து விலகாது. ஜெர்மனியை தொடர்ந்தும் முக் கிய தளமாக பயன்படுத்தும். எதிர்காலத்தில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது.

அமெரிக்க அரசின் துணையின்றி சொந்தக் காலில், சொந்த பாதுகாப்பில் தங்கியிருக்க நிலை ஏற்படும்.

நேட்டோ ஒரு காகிதப் புலி:

அதேவேளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப், நேட்டோ அமைப்பை ஒரு “காகிதப் புலி” (Paper Tiger) என விமர்சித்துள்ளதுடன், ஈரானுக்கு எதிரான “ஆபரேஷன் எபிக் பியூரி” போரில் ஐரொப் பிய நாடுகள் தங்களுக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க வில்லை என்பதே ட்ரம்பின் முக்கிய ஆதங்கமாக இருக்கிறது.

நாங்கள் உதவி கேட்டபோது அவர்கள் நண்பர்களாக நடந்து கொள்ளவில்லை. எனவே நேட்டோவில் நீடிப்பது குறித்து நாங்கள் எடுக்கும் முடிவு வெறும் பரிசீலனை மட்டுமல்ல, அதற்கும் மேலானது என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பாவிற்கு ஒரு ஆபத்து என்றால் நாங்கள் ஓடிச் சென்று பாதுகாக்கிறோம். ஆனால் எங்களுக்கு ஒரு தேவை வரும் போது தங்களின் இராணுவத் தளங்களைப் பயன்படுத்த அவர்கள் “இல்லை” என்று சொல்கிறார்கள். இது ஒரு ஒரு தலைப்பட்சமான உறவு என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரூபியோ சாடியுள்ளார். அந்த அமைப்பில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் மார்கோ ரூபியோவும் ட்ரம்பின் கருத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஈரான் மீதான போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள நிலையில், தமக்கு உதவாத நேட்டோ (NATO) கூட்டமைப்பு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையான அதிருப்தியை வெளியிட்டார்.

தற்போது அமெரிக்கவிற்கு உதவாத நேட்டோவிற்கு இருண்ட எதிர்காலம் எனவும் அவர் கூறியுள்ளார். பிரித்தானியா மற்றும் ஐரோப்பாவைக் கடுமையாகச் சாடிய டிரம்ப் இந்த இராஜதந்திர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போரில் எவ்வித கட்டாயமுமின்றி நாம் அவர்களுக்கு உதவினோம். ஆனால், தற்போது ஹார்முஸ் நீரிணை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவர்கள் உதவாவிட்டால், நேட்டோ பாரியதொரு இருண்ட எதிர்காலத்தைச் சந்திக்க நேரிடும். நான் நீண்டகாலமாகக் கூறிவருவதைப் போல நேட்டோ என்பது ஒரு வழிப்பாதையில் மட்டுமே பயணிக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. இவ்வாறு டிரம்ப் நேட்டோ மீதான கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

ஸ்பெயின் மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் ஈரானுக்கு எதிரான தாக்குதலுக்குத் தங்கள் வான்பரப்பைப் பயன்படுத்த அனுமதி மறுத்ததே இந்த விரிசலுக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் இந்தத் திடீர் பின்வாங்கல் அறிவிப்பு ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்துள்ளது.

நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

ஆறாத வடுவும் அழியாத நினைவுகளும்

சு.லோஜிதன்

முன்னுரை

ஈழத்தமிழர் வரலாற்றில் மே 18 என்பது வெறும் காலண்டர் தேதியல்ல; அது ஒரு இனத்தின் ஆன்மாவில் விழுந்த ஆறாத வடு. 2009ஆம் ஆண்டு மே மாதம், இலங்கைத் தீவின் முள்ளிவாய்க்கால் என்ற ஒரு சிறிய கடற்கரை கிராமத்தில் அரங்கேறியது நவீன வரலாற்றின் மிகக் கொடூரமான இனப்படுகொலைகளில் ஒன்று. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், சித்திரவகதக்கு உள்ளாக்கப்பட்டும் ஒரு இனமே சிதைக்கப்பட்ட அந்த நாளைத்தான் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் “முள்ளிவாய்க்கால் நினைவு நாள்” அல்லது “தமிழர் இனப்படுகொலை நிகனவு நாள்” என்று கடைபிடிக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் ஒடுக் குமுறைகள் சுதந்திரத்திற்குப் பின் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன. இதன் வளைவாக உருவான ஆயுதப் போராட்டம், சுமார் மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்தது. 2008ஆம் ஆண்டின் இறுதியில் போர் அதன் உச்சக்கட்டத்தை எட்டியது. இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை நோக்கி முன்னேறியபோது, மக்கள் பாதுகாப்புத் தேடி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர வேண்டியிருந்தது.

இறுதியாக, வன்னிப் பெருநிலப்பரப்பின் ஒரு சிறிய நிலப்பரப்பான முள்ளிவாய்க்காலுக்குள் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முடக்கப்பட்டனர். அது ஒரு “பாதுகாப்பு வலயம்” (No Fire Zone) என இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த அறிவிப்பு ஒரு பொறி என்பது பின்னர் உலகிற்குத் தெரியவந்தது.

2009ஆம் ஆண்டின் தொடக்க மாதங்கள் மரணத்தின் நிழலில் கழிந்தன. “பாதுகாப்பு வலயம்” என்று நம்பி மக்கள் தஞ்சம் புகுந்த இடங்களின் மீது கனரக ஆயுதங்கள் மற்றும் வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இலங்கை அரசாங்கம் போர் நடக்கும் பகுதிக்குள் செல்லும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியது. மக்கள் கஞ்சிக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. பல நேரங்களில் கஞ்சி ஊற்றப்படும் வரிசையின் மீதே குண்டுகள் விழுந்து, கஞ்சிப் பானைகள் இரத்தத்தால் சிவந்தன. பட்டினியாலும், முறையான மருத்துவச் சிகிச்சை இல்லாமலும் நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர்.

சர்வதேச விதிகளுக்கு மாறாக, காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளித்த தற்காலிக மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மயக்க மருந்து இன்றி அறுவை சிகிச்சைகள் செய்யும் நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்பட்டனர்.

போரின் இறுதி நாட்களில், சர்வதேச சமூகத்தின் உத்தரவாதத்தை நம்பி வெள்களக் கொடியுடன் சரணடைய வந்த அரசியல் தலைவர்களும், போராளிகளும், பொதுமக்களும் ஈவுக்கருணையின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். இது “வெள்ளைக்கொடிப் படுகொலைகள்” என்று உலக வரலாற்றில் கரும்புள்ளியாகப் பதிவானது.

முள்ளிவாய்க்கால் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்துப் பல்வேறு தரவுகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையின்படி, போரின் இறுதி நாட்களில் மட்டும் சுமார் 40,000 முதல் 70,000 பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்த் தரப்பு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் தரவுகளின்படி இந்த எண்ணிக்கக ஒரு இலட்சத்தைத் தாண்டும் என அஞ்சப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர், அங்கவீனர்களாயினர். பல்லாயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இன்றுவரை ஆயிரக்கணக்கானோர் எங்கு இருக்கிறார்கள் என்றே தெரியாமல் “காணாமல் ஆக்கப்பட்டோர்” பட்டியலில் உள்ளனர். அவர்ககளத் தேடி அவர்களது உறவினர்கள் இன்றும் வீதிகளில் போராடி வருகின்றனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சி” வழங்குவது ஒரு முக்கிய நிகழ்வாக மாறியுள்ளது. போரின் இறுதி நாட்களில், உணவின்றித் தவித்த மக்களுக்குக் கிடைத்த ஒரே ஆகாரம் அரிசியும் தண்ணீரும் கலந்த உப்பில்லாத கஞ்சி தான். அந்தத் துயரத்தையும், மக்கள் அனுபவித்த பசியையும் நினைவுபடுத்தும் விதமாக, இன்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இந்த கஞ்சியை ஒரு குறியீடாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இது ஒரு உணவு மட்டுமல்ல; இது ஒரு இனத்தின் வலியின் அடையாளம்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடக்கும்போது, உலகம் மௌனம் சாதித்தது பெரும் விமர்சனத்திற்கு உள்ளானது. “பாதுகாப்பு வலயம்” தாக்குதலுக்கு உள்ளானபோது சர்வதேச அமைப்புகள் தலையிடத் தவறின. போருக்குப் பிந்தைய காலத்திலும், இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க்குற்ற விசாரணைகள் முறையாக நடத்தப்படவில்லை என்பது பாதிக்கப்பட்ட மக்களின் பெரும் ஆதங்கமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் இன்னமும் முழுகயையாகச் செயல்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான “நீதி” என்பது வெறும் காகிதங்களில் மட்டுமே இருந்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது வெறும் அழுகைக்கான நாள் அல்ல; அது பின்வரும் காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது:

- **வரலாற்றைப் பதிவு செய்தல்**: அழிந்து போய்க்வகாண்டிருக்கும் ஒரு இனத்தின் உண்மையான வரலாற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்துதல்.
- **நீதி கோருதல்:** நடந்த கொடுமைகளுக்குச் சர்வதேச ரீதியில் நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்துதல்.
- **தமிழர் ஒற்றுமை:** புவிசார் அரசியலுக்கு அப்பாற்பட்டு, உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்களை ஒரே உணர்வில் பிணைக்கும் ஒரு புள்ளியாக இந்நாள் அமைகிறது.
- **மீண்டெழுதல்:** இவ்வளவு பெரிய பேரழிவிற்குப் பிறகும், தமிழ் இனம் மீண்டும் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் உயர்ந்து நிற்கிறது என்பதைக் காட்டும் ஒரு தன்னம்பிக்கை நாள்.

முடிவுரை

முள்ளிவாய்க்கால் என்பது வெறும் மண் அல்ல; அது ஒரு வரலாற்றுப் பாடம். “மறப்போம் மன்னிப்போம்” என்பது தனமனித உறவுகளுக்குப் பொருந்தலாம், ஆனால் ஒரு இனப்படுகொலைக்கு அது பொருந்தாது. ஏனெனில், மறதி என்பது மீண்டும் ஒரு அநீதி இழைக்கப்படுவதற்கான வழியைத் திறந்துவிடும்.

ஒவ்வொரு ஆண்டும் மே 18 அன்று தமிழர்கள் ஏற்றும் மெழுகுவர்த்தி வெளிச்சம், உயிரிழந்தவர்களின் ஆன்மாக்களை அமைதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், நீதிக்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான உறுதியையும் நமக்கு வழங்குகிறது. முள்ளிவாய்க்கால் நினைவு என்பது ஒரு இனத்தின் அழிவின் சாட்சியம் மட்டுமல்ல, அது அந்த இனத்தின் மீண்டெழுதலுக்கான விதையுமாகும்.

“உயிர்களை இழந்திருக்கலாம், ஆனால் எமது உரிமைகளுக்கான கனவுகளை ஒருபோதும் இழக்க மாட்டோம்.”

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

அமெரிக்க காங்கிரசில் பெரும் விவாதம்:
ஈரான் போரில் அமெரிக்க வியூகம் தோல்வி!

- ஐங்கரன விக்கினேஸ்வரா -

06.05.2026

ஈரான் மீதான போர் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் இராணுவ நடவடிக்கைகள் குழுவில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. ஈரான் நம்மை முடக்கியுள்ளனர், பதிலுக்கு நாம் அவர்களின் முற்றுகையை முடக்கியுள்ளோம். இதுதான் வெற்றியா எனக் கிண்டலாக எதிர்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளால் எழுந்த சர்ச்சை, பெரும் விவாதமாக மாறியது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆயுத சேவைக் குழு (House Armed Services Committee) விசாரணையின் போது, அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் (Pete Hegseth) மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் செத் மௌல்டன் (Seth Moulton) இடையே நடைபெற்ற காரசாரமான விவாதம் சர்வதேச அளவில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.

கடந்த மாதம் ஏப்ரல் 29, 2026 அன்று நடைபெற்ற இந்த விசாரணையில், ஈரான் உடனான போரின் தற்போதைய நிலை மற்றும் அதன் பொருளாதாரத் தாக்கங்கள் குறித்து தீவிர விவாதம் நடைபெற்றது.

ஈரான் உடனான மோதலை ஒரு “அசாதாரண இராணுவ வெற்றி” (Astounding military success) என்று பீட் ஹெக்செத் (Pete Hegseth) வர்ணித்தார். ஈரான் ஹார்முஸ் நீரிணையை (Strait of Hormuz) மூடியதற்குப் பதிலடியாக, அமெரிக்கப் படைகள் ஈரானின் துறைமுகங்கள் மீது கடுமையான கடல்சார் முற்றுகையைச் செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனாலும் ஹெக்செத்தின் வாதத்தை எதிர்த்த பிரதிநிதி செத் மௌல்டன், ஈரான் ஹார்முஸ் நீரிணை மூடியுள்ளதை நீங்கள் வெற்றியாகக் கருதுகிறீர்களா எனக் கேள்வி எழுப்பினார். மேலும், அவர்கள் நம்மை முடக்கியுள்ளனர், பதிலுக்கு நாம் அவர்களின் முற்றுகையை முடக்கியுள்ளோம். இதுதான் வெற்றியா எனக் கிண்டலாக அவர் சாடினார்.

25 பில்லியன் டாலர் செலவு:

பென்டகன் அறிக்கையின்படி, இந்த ஈரான் போர் அமெரிக்காவிற்கு இதுவரை 25 பில்லியன் டாலர் செலவை ஏற்படுத்தியுள்ளது. ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டதன் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு, எரிபொருள் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

ஆனாலும் டிரம்ப் நிர்வாகம் ஈரானின் அணுசக்தித் திட்டத்தை முற்றிலுமாக ஒழிக்கும் வரை இந்த முற்றுகை தொடரும் என ஹெக்செத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

அதேவேளை ஈரான் ஹார்முஸ் நீரிணையை மூடியதால் ஏற்பட்ட பொருளாதார இழப்பீட்டினை, அமெரிக்காவின் துறைமுக முற்றுகை ஈடு செய்யுமா என்பது கேள்விக்குறியே. ஹெக்செத் இதனை ஒரு இராணுவ வெற்றியாகக் காட்டினாலும், சர்வதேச வர்த்தகத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி அமெரிக்காவிற்குள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகப் பெரும் எதிர்ப்புகளைச் சந்தித்து வருகிறது.

இராணுவ நடவடிக்கை குழு:

பென்டகன் அறிக்கையின்படி, ஈரான் போர் அமெரிக்காவிற்கு இதுவரை 25 பில்லியன் டாலர் செலவை ஏற்படுத்தியுள்ளது. ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டதன் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு, எரிபொருள் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் House Armed Services Committee (HASC), இராணுவ நடவடிக்கைகள் குழு போர்க் காலத்தில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. ஒவ்வொரு முறையும் போர்க்காலத்தில் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க இந்த ஆணையம் பரிந்துரை செய்கிறது.

தற்போதய சூழ்நிலையில் ஈரான் மீதான போர் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் குழுவில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. இதன் போது பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டம், ஆயுத அமைப்புகள் மற்றும் தேசிய பாதுகாப்பு உத்திகள் குறித்து விசாரணைகள் மற்றும் கண்காணிப்பு குறித்தும் ஆலொசிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழு, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சவால்கள், சைபர் பாதுகாப்பு, கப்பல் கட்டுதல் மற்றும் அணுசக்தி நவீனமயமாக்கல் போன்ற தலைப்புகளில் முக்கிய விசாரணைகளை மேற்கொள்கிறது. முக்கிய அம்சங்களாக இராணுவத் துறைக்கான நிதியுதவி, கொள்கை வகுத்தல் மற்றும் மேற்பார்வையையும் செய்கிறது.

அதேவேளை மத்திய கிழக்கில் பயங்கரவாத எதிர்ப்பு, சீனா மற்றும் வட கொரியாவின் அச்சுறுத்தல்கள், மற்றும் உக்ரைன் போரில் அமெரிக்க தலையீடு பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கை குழவில் துணைக் குழுக்களும் அடங்கும். உளவுத்துறை, தயார்நிலை (Readiness), மற்றும் உத்திசார் படைகள் (Strategic Forces) உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் உள்ளன. அத்துடன் விசாரணைகள் மற்றும் கூட்டங்கள் House Armed Services Committee Youtube சேனலில் நேரலையாக உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் காணலாம்.

முறுகலில் அமெரிக்க காங்கிரஸ்:

அதேவேளை அமெரிக்க காங்கிரஸில் பாரிய தர்க்கம் ஏற்பட்டது. எங்கள் மாபெரும் எதிரியே நீங்கள்தான், என சொந்த நாட்டு எம்.பி.க்களையே விளாசித் தள்ளினார் அமெரிக்க அமைச்சர் பீட் ஹெக்செத். ஒருபுறம் ஈரானியப் பள்ளிக்கூடம் மீது குண்டு வீசி 170 உயிர்களைப் பலிகொண்ட கொடூரம், மறுபுறம் அமெரிக்க வீரர்களின் மரணம் மற்றும் எகிறும் விலைவாசி என எதிர்க்கட்சிகளின் சரமாரிக் கேள்விகளால் நாடாளுமன்றத்தில் மாபெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தினர். அதற்கு பதிலடியாக பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்செத் எங்கள் மாபெரும் எதிரியே நீங்கள்தான் என சொந்த நாட்டு எம்.பி.க்களையே கடுமையாக விமர்சித்தார்.

ஈரான் போர் தொடங்கிய பிறகு முதல்முறையாக “ஹவுஸ் ஆயுதப் படைகள் குழுவின்” விசாரணையில் ஆஜரான அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்செத், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாபெரும் நேரடி மோதலில் ஈடுபட்டு உலக அரங்கில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளார்.

வளைகுடா போரின் தொடக்கத்தில் ஈரானியப் பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றின் மீது அமெரிக்கா நடத்திய கொடூரத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட சுமார் 170 பேர் கொல்லப்பட்டது குறித்து கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டன. பழைய உளவுத் தகவல்களால் நடந்த தவறு எனத் தகவல்கள் வெளியாகும் நிலையில், இந்த மாபெரும் சோகம் குறித்து இன்னும் விசாரணை நடைபெற்று வருவதாக ஹெக்செத் மழுப்பலாகப் பதிலளித்தார்.

ஈரானில் அமெரிக்க தோல்வி

இந்தத் தாக்குதலுக்கு எவ்வளவு செலவானது என்ற கேள்விக்கு, இதற்கு நான் விலையை நிர்ணயிக்க மாட்டேன் என அவர் அப்பட்டமாக மறுத்துவிட்டார். அதேவேளை ஈரான் போரில் அமெரிக்காவின் வியூகம் தோல்வியடைந்துள்ளதாக விமர்சித்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி, இந்த நேரத்தில் நாம் எதிர்கொள்ளும் மாபெரும் எதிரியே காங்கிரஸ் ஜனநாயகக் கட்சியினர் மற்றும் சில குடியரசுக் கட்சியினரின் பொறுப்பற்ற வார்த்தைகள்தான் என ஹெக்செத் கடுமையாகச் சாடினார். மேலும், போரை விமர்சித்த எம்.பி.க்களைப் பார்த்து நீங்கள் யாருக்கு ஆதரவாகச் சத்தம் போடுகிறீர்கள் என பெரும் கொந்தளிப்பை வெளிப்படுத்தினார்.

மேலும் குவைத்தின் ஷுய்பா துறைமுகத்தில் ஈரானிய ட்ரோன் தாக்குதலில் 6 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்ட விவகாரத்தில், அங்கு போதிய வான்பாதுகாப்பு இல்லை எனத் தப்பிய வீரர்கள் கூறியதை எதிர்கட்சி எம்.பி. பேட்ரிக் ரையான் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த ஹெக்செத், நாங்கள் வீரர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றினோம், அதிகபட்சப் பாதுகாப்பையும் வழங்கினோம். ஆனால் ஏதோ ஒன்று ஊடுருவி விட்டது. இது போரின் மாபெரும் விளைவு எனத் தனது தரப்பை நியாயப்படுத்தினார்.

அத்துடன் ஈரானின் ஹார்முஸ் நீரிணை முற்றுகையால் பெட்ரோல் மற்றும் உணவுப் பொருட்களின் விலை மாபெரும் உச்சத்தைத் தொட்டுள்ளது குறித்து எம்.பி. ரோ கன்னா சரமாரியாகக் கேள்வி எழுப்பினார். டிரம்பிற்கு வாக்களித்த மக்களுக்கு இது “மாபெரும் துரோகம்” என அவர் குற்றஞ்சாட்டினார். அதற்கு நேரடியாகப் பதிலளிக்காத ஹெக்செத், ஈரானிய அணுவாயுதத்தின் விலை என்னவென்று சொல்லுங்கள் என எதிர் கேள்வியைக் கேட்டுத் திசைதிருப்பினார். மேலும், இந்தப் போரில் அமெரிக்கா முற்றிலும் வெற்றி பெறுகிறது எனவும் அவர் கடுந் தொனியில் கூறினார்.

தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' உண்போம்!

நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு இலட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை "முள்ளிவாய்க்கால் கஞ்சி" என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

பல்கேரிய புதிய ஆட்சி மாற்றம்: மாஸ்கோ நோக்கி நகர்கிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.05.2026

ஐரோப்பாவின் தென்கிழக்கு எல்லையில் இருக்கும் பல்கேரியாவில் சென்ற வாரம் தேர்தல் முடிந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அண்மையில் நடந்து முடிந்த ஹங்கேரியின் தேர்தல் போல் பரப்பரப்பான ஒன்றாக இல்லாவிடினும், ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம், கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கேரியா எதிர்கொண்ட எட்டாவது

நாடாளுமன்றத் தேர்தல் இது.

பல்கேரியாவில் (Bulgaria) நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, ருமென் ராதேவ் (Rumen Radev) தலைமையிலான முற்போக்கு பல்கேரியா (Progressive Bulgaria) கட்சி பெரும் வெற்றி பெற்று, புதிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தலுக்கு முன்னதாக கருத்துக் கணிப்பாளர்கள் ராதேவின் வெற்றியை கணித்திருந்தாலும், அது இவ்வளவு பெரிய வெற்றியாக இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. 98.3 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி ரதேவின் கட்சி 44.7 சதவீத வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தக் கைப்பற்றியது.

பல ஆண்டுகளாக நீடித்த நிலையற்ற கூட்டணிகள் மற்றும் தொடர் தேர்தல்களுக்குப் பிறகு, இந்த மிதவாத-இடதுசாரிக் கட்சி தனது போட்டியாளர்களை விட வெகுதூரம் முன்னிலை பெற்றுள்ளது. இது ஒரு நிலையான அரசாங்கம் அமையும் என்ற நம்பிக்கையை வாக்காளர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனாலும் ரதேவின் வெளியுறவுக் கொள்கை என்னவாக இருக்கும் என்பது குறித்தும், அவரது தேர்தல் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவில் பல்கேரியாவின் நிலைப்பாட்டிற்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்தும் கேள்விகள் எழுந்துள்ளன.

பல்கேரியா ஆட்சி மாற்றம்:

240 இடங்களைக் கொண்ட பல்கேரிய நாடாளுமன்றத்தில், ருமென் ராதேவ் கட்சி 135 இடங்களைக் கைப்பற்றி, 1997-க்குப் பிறகு முதல் முறையாகத் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களால், முந்தைய ஜெலயாஸ்கோவ் (Zhelyazkov) தலைமையிலான அரசாங்கம் பதவி விலகியதைத் தொடர்ந்து இந்த விரைவுத் தேர்தல் (Snap Election) நடத்தப்பட்டது.

தற்போது வெற்றி பெற்ற ராதேவ் தனது கட்சியைத் தொடங்கி நான்கு மாதங்களிலேயே ஆட்சியைக் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அங்கே முக்கிய அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கேரியாவில் நடைபெறும் எட்டாவது நாடாளுமன்றத் தேர்தல் இதுவாகும். இது நீண்ட அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக இந்த மாற்றத்தின் மூலம் பல்கேரியா, ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகவும் ஊழல் நிறைந்த நாடாகக் கருதப்பட்ட நிலையில், புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முற்போக்கு பல்கேரியா கட்சி, 240 இடங்களைக் கொண்டுள்ள நாடாளுமன்றத்தில் 135 இடங்களில் வென்றதன் காரணமாக ருமென் ராதெவ் (Rumen Radev) பல்கேரிய மக்கள் தங்களது பிரதமராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பல்கேரிய தேர்தலில் ருமென் ராதெவ் பெற்றுள்ள இமாலய வெற்றி, தற்போது ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் ஒரு உண்மையான சீர்திருத்தவாதியா அல்லது பழைய அமைப்பின் மற்றொரு முகமா என்பதை எதிர்வரும் காலங்களில் காணலாம். பல்கேரிய நாட்டின் உண்மையான மாற்றமா அல்லது வெறும் பிம்பமா என்பதை அவரின் ஆரம்பகால ஆட்சியில் இருந்து தெரிந்து கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

உக்ரைனுக்கு இராணுவ ஆதரவு வழங்குவதையும் ருமென் ராதேவ் எதிர்த்துள்ளார். அதற்குப் பதிலாக, பரஸ்பர மரியாதை மற்றும் சமமான அனுகுமுறையின் அடிப்படையில் ரஷ்யாவுடன் புதுப்பிக்கப்பட்ட, நடைமுறை உறவுகளை அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் பல்கேரியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் கையெழுத்தான பத்து ஆண்டு கால பாதுகாப்பு ஒப்பந்தத்தை ருமென் ராதேவ் எதிர்த்தார். ஐரொப்பாவிற்கான ரஷ்ய இறக்குமதிகளை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மீண்டும் ருமென் ராதெவ்:

62 வயதான ருமென் பல்கேரியாவின் ஜனாதிபதியாக கிட்டத்தட்ட ஒரு தசாப்தம் பணியாற்றிய பிறகு, இந்த ஆண்டு ஜனவரியில் பிரதமராகும் தனது முயற்சியைத் தொடங்குவதற்காகப் பதவி விலகினார். 66 இலட்சம் மக்கள் வசிக்கும் நாட்டைப் பீடித்துள்ள ஊழல் மற்றும் அரசியல் குழப்பங்கள் மீதான பரவலான அதிருப்திக்கு மத்தியில், முன்னாள் விமானப்படைத் தளபதி தன்னை ஒரு வெளியாளராக நிலைநிறுத்திக் கொண்டு, நாட்டை அதன் குழு ஆட்சி முறையிலிருந்து விடுவிக்க விரும்புவதாகக் கூறியுள்ளார்.

2025இல் முன்னாள் பிரதமர் ரோசன் ஜெல்யாஸ்கோவின் பழமைவாத ஆதரவு பெற்ற அரசாங்கத்தைக் கவிழ்த்த ஊழலுக்கு எதிரான போராட்டங்களை ருமென் ராதேவ் ஆதரித்தார். வாக்குகள் விலைக்கு வாங்கப்படுவதைத் தடுக்க, வாக்காளர்கள் பெருமளவில் திரண்டு வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வந்தார்.

மேற்கத்திய நாடுகளின் தாக்கம்:

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவில் இணைந்த பிறகு, பல்கேரியாவின் பொருளாதாரம் மற்றும் இறையாண்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ருமென் ராதேவ் தனது மேடைகளில் ரஷ்ய ஆதரவு சின்னங்களைப் பயன்படுத்தினாலும், நடைமுறையில் நேட்டோ (NATO) படைகள் இன்னும் பல்கேரிய மண்ணிலேயே பாரியளவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் அங்கே அமெரிக்காவின் பிடி தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. வர்ணா மற்றும் சோஃபியா விமான நிலையங்கள் இப்போதும் அமெரிக்க இராணுவப் பயன்பாட்டிலேயே உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. ஆனாலும் புதிய பல்கேரிய தலைவர் ருமென் ஹங்கேரியின் முன்னாள் அதிபர் விக்டர் ஓர்பன் போல துணிச்சலான முடிவுகளை எடுப்பாரா அல்லது மேற்கத்திய நாடுகள் ஆட்டும் தாளத்திற்கு ஆடும் அடுத்த பொம்மையாக இருப்பாரா என்பது தெரியவில்லை.

ஆனாலும் பல்கேரியா இன்று ஒரு முக்கியமான அரசியல் மாற்றத்தின் முனையில் நிற்கிறது. உலக நாடுகள் இந்த நகர்வை உற்று கவனித்து வருகின்றன. குறிப்பாக இந்த தேர்தல் முடிவுகள் குறித்து பிரிக்ஸ் (BRICS) நாடுகளின் தலைவர்கள் பல்கேரியாவை தங்கள் பக்கம் இழுக்க முயற்சி செய்து வருகின்றனர்.

உக்ரைனுக்கு ஆதரவு இல்லை:

2022இல் உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய படையெடுப்பை அவர் பகிரங்கமாகக் கண்டித்த போதிலும், உக்ரைனுக்கு இராணுவ ஆதரவு வழங்குவதையும் அவர் எதிர்த்துள்ளார். அதற்குப் பதிலாக, பரஸ்பர மரியாதை மற்றும் சமமான அணுகுமுறையின் அடிப்படையில் ரஷ்யாவுடன் புதுப்பிக்கப்பட்ட, நடைமுறை உறவுகளை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மார்ச் மாதம் பல்கேரியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் கையெழுத்தான பத்து ஆண்டு கால பாதுகாப்பு ஒப்பந்தத்தை ருமென் ராதேவ் எதிர்த்தார். ரஷ்ய எண்ணெய் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் மற்றும் 2027-க்குள் ரஷ்யாவிலிருந்து அனைத்து எரிசக்தி இறக்குமதிகளையும் நிறுத்துவதற்கான கடந்த ஆண்டு இறுதி முடிவு இருந்த போதிலும், ஐரோப்பாவிற்கான ரஷ்ய இறக்குமதிகளை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இவை அனைத்தும் ஐரோப்பிய அரங்கில் அரசியல் விமர்சகர்கள் அவரை ரஷ்ய ஆதரவாளர் என்று முத்திரை குத்துவதற்கு வழிவகுத்தன. இருப்பினும், ருமென் ராதேவ் தான் ஒரு நடைமுறை அணுகுமுறையை மட்டுமே மேற்கொள்வதாகக் கூறியுள்ளார்.

ரஷ்யாக்கு ஆதரவான நிலைப்பாடு:

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளில், ஸ்லாவிக் மற்றும் கிழக்கு ஆர்த்தடாக்ஸ் (Slavic and East Orthodox) ஆகிய இரண்டையும் கொண்ட ஒரே நாடு நாங்கள் தான் பல்கேரியா. தற்போது ரஷ்யாவுடனான உறவுகளை மீட்டெடுப்பதற்கான இந்த முழு செயல்முறையிலும் நாங்கள் ஒரு மிக முக்கியமான இணைப்பாக இருக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை, சிலர் ருமென் ராதேவை ஒரு யூரோ சந்தேகவாதி என்று முத்திரை குத்துகின்றனர். ஏனெனில் அவர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைச் சார்ந்திருப்பது மற்றும் பல்கேரியா யூரோவை ஏற்றுக்கொண்டது உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியக் கொள்கையின் சில அம்சங்களை விமர்சித்துள்ளார்.

அதேவேளை தேர்தலைத் தொடர்ந்து, ரஷ்யா ருமென் ராதே-வ்க்கு வாழ்த்து தெரிவித்து, அவரது வெற்றியை வரவேற்றது. தேர்தலில் வெற்றி பெற்ற திரு. ருமென் ராதேவ் மற்றும் சில ஐரோப்பியத் தலைவர்கள் நடைமுறை உரையாடல் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராக இருப்பதாகக் கூறிய அறிக்கைகளால் நாங்கள் ஈர்க்கப்பட்டோம், என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் 50

சிங்களத்தின் இனவழிப்புக்கெதிரான தமிழர் தேசத்தின் எதிர்ப்புக்குரலே விடுதலைப் புலிகள் இயக்கம்!

05.05.2026

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டு 05.05.2026 அன்று 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதற்கு முன்னர் 1972 இலிருந்து தமிழ்ப் புதிய புலிகள் என்ற பெயரில் இயங்கிய இயக்கத்துக்கு 05.05.1976 அன்று தலைவர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற புதிய பெயரைச் சூட்டினார்.

அன்றிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களினதும் உலகப் பரப்பினதும் வரலாற்றின் ஓரங்கமாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 50 வயது நிறைவையொட்டி இவ் ஊடக அறிக்கையை வெளியிடுகிறோம்.

தமிழீழ மக்களின் அமைதி வழிப் போராட்டங்கள் தோல்வியடைந்தமையாலும் , பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து தொடங்கி எந்த உடன்படிக்கையையும் சிறிலங்கா அரசு மதிக்காமையினாலும், தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான உள்ளூர்ப் பொறிமுறையோ, சர்வதேசப் பொறிமுறையோ இல்லாத காரணத்தினாலும் சிறீலங்கா அரசின் திட்டமிடப்பட்ட இன வழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட வேண்டிய தேவை காரணமாகவும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதவைப் புலிகள் தலைமையிலான ஆயுதப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் சுயநிர்ணய உரிமை (Self-determination), தற்காப்பு (Self-defence), மற்றும் தன்னுதவி (Self-help) போன்ற சர்வதேச சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தது.

மேற்கு சஹாரா வழக்கில், சர்வதேச நீதிமன்றம் தியாகமும் துணிச்சலும் கொண்ட ஆயுதப் போராட்டம் உன்னத தன்மையை உடையது எனக் கூறியிருந்தமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் மிகவும் பொருந்தக் கூடியது.

1970களில் இருந்த அரசியல் வெற்றிடத்தின் மத்தியில், தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கம் ஒரு அரசியல் சக்தியாக உருவெடுத்தது. தமிழ் இளைஞர்களின் புரட்சிகர உணர்வின் அமைப்புசார் வெளிப்பாடாக LTTE உருவானது.

இராணுவத் திட்டம், தந்திரம் மற்றும் அவற்றை நிறைவேற்றும் திறமையில் அசாதாரண திறனை வெளிப்படுத்திய தலைவர் அவர்கள் சிறீலங்காவின் தமிழர் எதிர்ப்பின் சின்னமாக உயர்ந்தார்.

புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை மூலோபாயமாகவும், கெரில்லா போர்முறையை தந்திரோபாயமாகவும் கொண்டு அதனது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பின்னர், கடற்படை (Sea Tigers) மற்றும் வான்படை (Air Tigers) உட்பட மரபுசார் போர் முறைகளிலும் ஈடுபட்டது. இயக்கத்தின் மகளிர் படையணிகளும் பல சாதனைகள் புரித்து அனைத்துலகின் கவனத்தை ஈர்த்தன.

“Island” இதழில் ஒரு சிங்கள கட்டுரையாளர் ஒரு தடவை பெண் புலிகள் தொடர்பாக இவ்வாறு எழுதியிருந்தார். “போர்க்களத்தில், குறிப்பாக பெண் போராளிகள், மிகுந்த தீவிரத்தையும் ஊக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்கள்; அவர்கள் எதிரிகளிடமிருந்தும் மரியாதையைப் பெற்றுள்ளனர்.”

பின்னர், புலிகள் இயக்கம் ஒரு நடைமுறை (de facto) அரசை அமைத்தது. சுவிஸ் கூட்டாட்சி நீதிமன்றம் விடுதலைப் புலிகள் இயக்கம் சிறீலங்காவின் ஒரு பகுதியில் ஆள்புல நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டில், அரச கட்டுமானங்களுடன் கொண்டிருந்ததாக குறிப்பிட்டது. மேலும் விடுதலைப் புலிகள் நீதித்துறையையும், நிதித்துறையையும் கொண்டிருந்ததாகவும், தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்தியசாலைகள், பாடசாலைகள் அமைத்ததாகவும், புலத்தில் வாழும் தமிழ் மக்களிடையே தமிழ் கலை, கலாச்சாரத்தையும் பேணியதாகவும் குறிப்பிட்டது. வங்கிகள் மற்றும் நீதித்துறை அமைப்புகளை நிறுவுவதன் மூலம், தமிழர்களின் பொருளாதார இறைமையையும், நீதித்துறை இறைமையையும் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியது.

இராஜராஜ சோழன் காலத்திற்குப் பிறகு, கடல் ஆதிக்கம் (கடல் ஆளுமை) பெற்ற தமிழர் அமைப்பு விடுதலைப் புலிகளே என்பதே வரலாறு ஆகும். சர்வதேச உறவுகளில் கடலின் முக்கியத்துவத்தை கருத்தில் கொள்ளும்போது இது கவனத்துக்குரியது. போரின் வளர்ச்சிப் போக்கில் அனைத்து சர்வதேச சக்திகளும் சிறீலங்காவிற்கு உதவியமைக்கு முக்கிய காரணம், இந்து சமுத்திரப் பகுதியில் விடுதலைப் புலிகள் என்னும் புதிய சக்தி மையம் உருவாக வேண்டாமென்பதே ஆகும். பல நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை தொடர்வதற்கான காரணமும் இதுவே ஆகம்.

ஆனால், 8 கோடி மக்களைக் கொண்ட பொருளாதார வலிமை மிக்க தமிழ்நாடு, கல்வியறிவு மற்றும் வளமிக்க ஈழத் தமிழர் டயாஸ்பரா, மற்றும் ஈழ தேசத்தின் புவியியல் அமைப்பு ஆகியவை துணை கொண்டு தமிழ் மக்கள் இந்து சமுத்திரத்தில் ஒரு சக்தி மையமாக உருவெடுப்பார்கள். வரலாற்றின் சக்கரங்களை எவராலும் நிறுத்த முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 50 வயது நிறைவையொட்டி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு மாநாட்டை நடத்துவதற்கு எண்ணியுள்ளது. இம் மாநாட்டின் பின்வரும் கருப்பொருட்களில் கட்டுரைகள் எதிர்பார்க்கப் படுகின்றன .

விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாத அமைப்பாக வரலாற்றில் நிலை நிறுத்த முயலும் முயற்சிகளுக்கு பதில் தரும் வரலாற்றுப் பதிவாகவும் இக் கட்டுரைகள் அமையும். தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மாநாட்டில் இடம் பெறும். இம் மாநாட்டுக்கான கட்டுரைகள் தொடர்பான அதன் அழைப்பு விரைவில் மாநாட்டுக் குழுவால் வெளியிடப்படும்.

கட்டுரைகளுக்கான கருப்பொருட்கள்:

1- தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாகியமைக்கான வரலாற்றுக் காரணங்களும் இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கும்.

2- தமிழீழ விடுதலைப் புலிகளும் தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாடும்.

3- தேசிய விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள்.

4- சமூக விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள்.

5- நிகழ்வுபூர்வமான அரசாகவும் (de facto state) சூழல் பாதுகாப்புப் போராளிகளாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள்.

6- ஈழத் தமிழ் மக்களின் தரை, கடல், வான்வழி இறைமையும் தமிழீழ விடுதலைப் புலிகளும்.

7- தமிழீழ விடுதலைப் புலிகளின் இராஜதந்திரம்.

8- பிராந்திய அரசியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்கம்.

9- ஈழத் தாயகத்தில், புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில், தமிழ்நாட்டின் அரசியலில் தொடரும் விடுதலைப் புலிகளின் தாக்கம்.

10- தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவாரத்தை முயற்சிகளும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரையும்.

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில் .

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

நன்றி,
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

ஈராக்கில் நிலைபெறுமா புதிய ஆட்சி: மீண்டும் அமெரிக்கப் பொம்மை அரசு?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.05.2026

வளைகுடாவில் ஈரானும், ஈராக்கும் ஒரு காலத்தில் மோதிக் கொண்டாலும் அமெரிக்காவிற்கு எப்போதுமே சிம்ம சொப்பனமாக இருந்த நாடுகளாகும். தற்போது ஈரான் மீதான போர் மூலம் ஆட்சி மாற்றத்தினை உருவாக்க முயற்சி செய்கிறது. ஆனாலும் ஈராக்கில் சதாம் வீழ்ச்சியின் பின்னர் அமெரிக்க பொம்மை அரசுகளே ஆட்சியில் இருந்தனர். ஆனால் தற்போது புதிய ஈராக் அரசு அதே நிலைப்பாட்டை தொடருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஈரான் மீதான போர் மூலம் ஆட்சி மாற்றத்தினை உருவாக்க அமெரிக்க முயற்சி செய்கிறது. அதேபோல் புதிய ஈராக் அரசு பொம்மை அரசாக தொடருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். வளைகுடாவில் ஈரானும் ஈராக்கும் ஒரு காலத்தில் மோதிக் கொண்டாலும் அமெரிக்காவிற்கு எப்போதுமே சிம்ம சொப்பனமாக இருந்த நாடுகளாக இருந்தன.

ஈராக்கில் ஜனநாயகம் என்பது சிக்கலானதும், இன்னும் முழுமையாக நிலை நிறுத்தப்படாத ஒரு அரசியல் சிக்கலாகும். 2003 இல் ஈராக் போரில் சதாம் ஹுசேன் ஆட்சி அகற்றப்பட்டது. அதன் பின் அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள், ஈராக்கில் மேற்குலக சார்பு ஜனநாயக போர்வை கொண்ட அரசை அமைக்க முயன்றன. இன்னமும் முயற்சிக்கின்றன.

தற்போது ஈராக் அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் ஒரு பாராளுமன்ற ஜனநாயக குடியரசு மூலம் ஆட்சி அதிகாரத்தை கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. மக்கள் தேர்தல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, நாட்டின் பிரதமர் ஆட்சி தலைவராக இருப்பார். அதேவேளை ஜனாதிபதி ஒரு முறையான பதவியாக இருக்கிறார்.

ஆயினும் சவால்கள் நிறைந்த ஈராக் நாட்டு அரசியல் பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. மத மற்றும் இன பிரிவினைகள் குறிப்பாக சியா, சுனி, குர்து இடையே இன்னும் தொடர்ந்து வருகிறது. மேலும் ஊழல், அரசியல் குழப்பம், வெளிநாட்டு தலையீடு, பாதுகாப்பு பிரச்சினைகள் ISIS போன்ற குழுக்களால் தீவிரவாதம் தொடர்ந்த நிலையில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலும் ஈராக்கில் சில மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. பல பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. மேலும் ஈராக்கிய மக்கள் போராட்டங்கள் மூலம் அரசியல் மாற்றங்களை கேட்கிறார்கள். தற்போதைய சர்வதேச அரசியல் சூழலில் ஈராக்கில் ஜனநாயகம் என்பது இன்னமும் நடைமுறையில் இல்லை என்று கூறலாம். ஆனால் அது இன்னும் நிலைத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை அடைய கடுமையாக போராடுகிறது.

ஈராக் நாடாளுமன்ற அரசியல்:

2003இன் பின்னர் ஈராக் நாட்டில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல்கள், நாட்டின் அரசியல் அமைப்பில் மிக முக்கியமான நிகழ்வாகும். ஈராக் நாடாளுமன்றம் என அழைக்கப்படுகிறது. இதில் பொதுவாக 329 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த நாடாளுமன்றத்திற்கு மக்கள் நேரடியாக வாக்களித்து உறுப்பினர்களைத் தேர்வு செய்கிறார்கள். தேர்தல் முறையாக சம அளவிலான பிரதிநிதித்துவம் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நாடாளுமன்றத்திற்கு நேரடியாக இன-சமய பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர். ஷியா கட்சிகள் 197 இடங்களுக்கும், சுனி கட்சிகள் 67 இடங்களுக்கும், குர்திஷ் கட்சிகள் 56 இடங்களுக்கும், சிறுபான்மையின துருக்மென், கிறிஸ்தவர்கள், யெசிடிகள் 9 இடங்களுக்கும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

2025 நாடாளுமன்ற தேர்தல்

ஈராக்கில் கடந்த ஆண்டு நவம்பர் 11, 2025 அன்று நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இது 2003 சதாம் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு நடைபெற்ற ஆறாவது நாடாளுமன்றத் தேர்தலாகும். இந்த தேர்தல் முடிவுகள் சிதறிய நாடாளுமன்றத்தை உருவாக்க வெளிப்படுத்தியது. இறுதியாக தேர்தல் முடிவுகள் ஈராக்கின் இன-சமயக் கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் சிதறிய நாடாளுமன்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 329 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்களிக்க 2.8-3 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றனர். இந்த தேர்தலில் பிரதமர் முகம்மட் அல் சுடானி தலைமையிலான கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றி முன்னிலையில் இருந்தது.

ஆனால் எந்தக் கட்சியும் முழு பெரும்பான்மை பெறவில்லை. அதனால் கூட்டணி அரசாங்கம் அமைப்பது அவசியமானது. சுமார் 56% வாக்காளர் பங்கேற்பு பதிவானது சில பகுதிகளில் அரசியல் விரக்தி காரணமாக பங்கேற்பு குறைவாக இருந்தது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும் முக்தாடா அல் சடார் தலைமையிலான அமைப்பு தேர்தலை புறக்கணித்தது. ஷியா, சுனி, குர்து அரசியல் குழக்களுக்கிடையே மிகவும் கடுமையான போட்டி தொடர்ந்தது. அத்துடன் ஈரான் மற்றும் அமெரிக்க நாடுகளின் அரசியல் தாக்கம் முக்கியமாக இருந்தது.

தேர்தலுக்குப் பிந்தைய நிலையாக, புதிய அரசு அமைக்க நீண்ட காலம் எடுத்தது. 2025 நவம்பர் தேர்தல் ஈராகின் அரசியல் அமைப்பில் முக்கியமான மாற்றங்களை கொண்டு வந்தாலும், தெளிவான பெரும்பான்மை இல்லாததால் அரசியல் பேச்சு வார்த்தைகள் நீண்ட காலம் நீடித்தன. பக்தாத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின்படி, வாக்காளர் பங்களிப்பு 56 சதவீதமாக இருந்தது. இது பிராந்திய மற்றும் மத ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டுகிறது. முன்னர் பிரதமராக இருந்த அல்-சுதானி மீண்டும் போட்டியிட்டது ஈராக் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கருதப்பட்டது.

ஈராக்கில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு, புதிய அதிபர் தேர்வாகியுள்ளார். குர்திஸ்தானின் தேசபக்தி ஒன்றிய கட்சியின் நிசார் அமிடி, வெளியுறவு அமைச்சர் புவாட் ஹுசைன் உள்ளிட்டோர் போட்டியிட்டனர். முதல் சுற்றில் நிசார் அமிடி 208 வாக்குகளுடன் முன்னிலை பெற்றார். இரண்டாம் சுற்றிலும் அமிடி 227 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இதனை அடுத்து 15 நாட்களுக்குள் புதிய அதிபர் அமிடி புதிய பிரதமரை தேர்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

குர்திஸ்தான் மக்களை பிரதிநிதுத்துவம் செய்யும் தேசபக்தி ஒன்றியக் கட்சியின் நிசார் அமிடி புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்தத் தேர்தல், ஈராக் தனது அரசியல் ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்பதைச் சோதிக்கும் ஒரு முக்கியமான கட்டமாகப் பார்க்கப்படுகிறது

ஈராக்கில் ஜனநாயக அரசியல்?

2003இல் சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு அமெரிக்க தலைமையில் ஈராக்கில் மேற்குலக சார்பு ஆட்சி முலாம் பூசப்பட்ட ஜனநாயக அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் தேர்தல் முறைமை உருவாக்கம் செய்யப்பட்டது. பல கட்சி தேர்தல்கள் நடைபெறுகின்றன. மக்கள் தொடர்ந்து வாக்களிக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் அமைதி மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக பல ஆண்டுகளாக உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. 2000களில் இருந்து பல ஆண்டுகள் வன்முறை, குறிப்பாக ISIS எழுச்சி காரணமாக ஈராக் நாட்டை பாதித்தது.

இனச் சமுதாய பிரிவுகளான சுனி ஷியா பிரிவுகள் அரசியலை ஆழமாக பாதிக்கின்றன. ஊழல் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளன. அத்துடன் வெளிநாட்டு செல்வாக்கு தொடர்கிறது. அமெரிக்கா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் அரசியல் தாக்கம் இன்னும் அதிகமாக இருக்கிறது. இதனால் தற்போது ஈராக்கில் ஜனநாயகம் முழுமையான வெற்றி என்றோ முழுமையான தோல்வி என்றோ சொல்ல முடியாது.

இது இன்னும் உருவாகிக் கொண்டிருக்கும், பல தடைகள் நிறைந்த அரசியல் முயற்சியாகும்.

சதாம் ஹுசேன் ஆட்சிக்காலத்தில் 1969 முதல் 2003 வரை ஈராக் பொருளாதாரம் மிகுந்த மாற்றங்களையும் அதே நேரத்தில் வளர்ச்சியையும் சந்தித்தது. இது இரண்டு முக்கிய கால கட்டங்களாகப் பார்க்கப்படுகிறது. ஆரம்ப வளர்ச்சி காலம் மற்றும் பின்னர் தடைகள் - போர் காரணமான வீழ்ச்சி காலம். ஆரம்ப காலமாக 1970களின் இறுதி - 1980களின் தொடக்கம் வரை சதாம் அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றிய பிறகு, எண்ணெய் வருமானம் அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரம் விரைவாக வளர்ந்தமை அறிந்ததே.

ஈராக் புதிய பிரதமர் தேர்வு

தற்போது ஈராக் நாட்டின் ஜனாதிபதி நிசார் அமிடி நாட்டின் புதிய பிரதமராக 40 வயதான அலி அல்-சைதி என்பவரை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அவர் 30 நாட்களுக்குள் புதிய அரசை அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவரை ஆதரித்த ஈராக் பாராளுமன்றத்தில் அதிக இடங்கள் கட்சிகளின் கூட்டணிக்கு சுமார் 130 முதல் 140 இடங்கள் உள்ளன.

நாற்பது வயதான அலி அல்-சைதி, தொழிலதிபர் மற்றும் இஸ்லாமிய வங்கியின் தலைவர் ஆவார். முன்பு எந்த அரசியல் பதவியிலும் இருந்ததில்லை. சட்டம் மற்றும் நிதித்துறையில் படித்தவர்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட நூரி அல் மாலிக் மற்றும் தற்போதைய பிரதமர் அல் சுடானி போட்டியிலிருந்து விலகியதால், சமரச வேட்பாளராக அவர் தேர்வு செய்யப்பட்டார்.

ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதலால் ஏற்பட்ட பிராந்திய பதற்றம் அதிகரித்த நிலையில் தற்போது இவர் பதவி ஏற்றுள்ளார். அதேவேளை ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டும் என்ற அமெரிக்க அழுத்தம் அதிகரித்து வருகிறது. அத்துடன் எண்ணெய் வருவாயை அதிகம் சார்ந்துள்ள ஈராக் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவது ஆகியவை அவருக்கு முன் இருக்கும் முக்கிய சவால்கள் ஆகும்.

வீரவணக்கம்

எமக்கு ஒரு நாடு வேண்டும் எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே, மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அழகான அந்தப் பனை மரம்

03.05.2026

எனது நண்பர் ஒருவர் சொன்னார், தேனிசை செல்லப்பாவை ஓர் ஈழத் தமிழர் என்று தான் தன்னுடைய தகப்பனார் நம்பினார் என்று. அந்தளவுக்கு செல்லப்பாவின் குரல் ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமானது.

பாக்கு நீரிணையால் பிரிக்கப்படும் இரண்டு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையே கலைத்துறைப் பிணைப்பு என்று பார்த்தால், சாஸ்த்திரிய சங்கீதமும் பெருமளவுக்குப் பொதுவானது. ஜனரஞ்சக இசையும் பெருமளவுக்குப் பொதுவானது. இதில் ஈழத் தமிழர்களின் ஜனரஞ்சக இசை தனக்கென்று ஒரு தனித்துவமான தடத்தை துலக்கமாக உருவாக்கத் தொடங்கியது, ஈழத்து மெல்லிசைப் பாடல்களில்தான் என்று மெல்லிசைப் பாடகரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் சண்முகலிங்கனும், சேர்.பொன்.இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி றொபேர்ட்டும் கூறுகிறார்கள். “ஈழத்து மெல்லிசைப் பாரம்பரியம் ஓர் இயக்கமாக வளரவேண்டும் என்று நான் கனவு கண்டேன். ஆனால் பின்னாளில் இயக்க மெல்லிசைப் பாடல்களே கிடைத்தன..” என்று பேராசிரியர் சண்முகலிங்கன் கூறுகிறார்.

“இலங்கைக்கான இசை மரபினை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை பாடகரும் மருத்துவப் பேராசிரியருமான எஸ்.கே.மகேஸ்வரன் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் முன் வைத்ததாக” சண்முகலிங்கன் கூறுகிறார். “1970களில் ஈழத்துக்கான தனித்துவ ஆக்க இசையாக மெல்லிசையை உருவாக்கும் முயற்சியானது, ஆக்க இசைக் கலைஞரான எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்களின் நாட்டார் பாடல் நவீனப்படுத்துதலுடனேயே தொடங்குவது இங்கு கவனத்திற்குரியது. இந்த தேடலில் காவலூர் ராஜதுரை, எம்.கே.றொக்சாமி போன்றோர் பராவுடன் இணைந்திருந்தனர்” என்று சண்முகலிங்கன் கூறுகிறார்.

மெல்லிசைப் பரப்பில் ஈழத் தமிழர்களுக்கு என்று தனித்துவமான ஒரு தடத்தைக் கட்டியெழுப்ப முற்பட்டவர்களில் கண்ணன் மாஸ்டர் முக்கியமானவர். அதே கண்ணன் மாஸ்டர்தான் பின்னர் போர்க்காலப் பாடல்களில் ஈழத் தமிழர்களுக்கேயான ஒரு தனித்துவமான தடத்தைச் சிருஷ்டித்தவர்களில் முதன்மையானவர் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆயுதப் போராட்டதுக்கு முந்திய மிதவாத அரசியலில், இந்திய சினிமாப் பாடல்களே தேர்தல் மேடைகளில் அதிகம் ஒலித்தன. ஆனால் ஆயுதப் போராட்டம் தனக்கென்று ஒரு தனித்துவம் மிக்க இசைத் தடத்தை உருவாக்க விளைந்தது. அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தமிழுக்கு புதிய போர்க்களச் சொற்களை - போர்த் தமிழை - அறிமுகப்படுத்தியது. நவீன தமிழில் கிடைத்த புதிய போர் அனுபவங்கள் இலக்கியமாகின; நாடகமாயின; ஓவியமாகின; இசைப் பாடல்களாயின. அவை மண் மணத்தோடு தனித்துவமான ஒரு புதிய கலை இலக்கியத் தடத்தை உருவாக்கின.

ஈழப் போரோடு எழுச்சிபெற்ற இசைப் பாரம்பரியத்தில் முதலில் கேட்ட குரல்களில் ஒன்று தேனிசை செல்லப்பாவுடையது. செல்லப்பாவின் பாடல்கள் ஒருபுறம் ஈழத் தமிழர்களுக்கேயான தனித்துவமான போர்ப் பாடல் என்ற வகைக்குள் அடங்கும். அதேசமயம் அதுவும் ஈழ - தமிழக இசைப் பிணைப்பின் ஒரு பகுதிதான். இது செல்லப்பாவில் தொடங்கி தமிழகத்தின் வேறு சில பிரபலமான பாடகர்கள், இசைக் கலைஞர்கள், இசைத் தொழில் நுட்பவியலாளர்கள் போன்றோரின் பங்களிப்பு வரை வருகிறது.

ஈழத் தமிழர்களின் போர்க் காலப் பாடல்கள் தமிழகத்தை எந்த அளவுக்கு சென்றடைந்தன? பரவலாகின? இந்தக் கேள்வி உண்டு. இப்பொழுது ஈழத் தமிழ் வீடுகளில் அதிகமாகப் பார்க்கப்படும் தொலைக்காட்சி தொடர் நிகழ்ச்சிகளில் ஒன்று “சரிகமப”. அது தமிழக சினிமாத் தொழில் துறையின் நீட்சி. அங்கே ஈழத் தமிழர்களின் கண்ணீரும் காயங்களும் சந்தைப் படுத்தப்படுகின்றன என்ற விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் அது ஈழத்தமிழ் இசை ஆளுமைகளை பெருந் தமிழ்ப் பரப்பை நோக்கி விரிக்கின்றது. அது மிக அவசியம். பெருந்தமிழ்ப் பரப்பை நோக்கி ஈழத்தமிழ் கதைகளைக் கொண்டு போக வேண்டும் “டூரிஸ்ட் ஃபேமிலி”, “நீளிரா” ஆகிய படங்களைப்போல.

இவ்வாறு சரிகமப மேடையில் சில ஆண்டுகளுக்கு முன் ஈழத்து இசையமைப்பாளர் கண்ணனின் பேத்தி பாடினார். அவர் மேலெழுந்த காலகட்டத்தில் ஒரு நிகழ்ச்சியில் அவருடைய பெற்றோரை மேடைக்கு அழைத்தார்கள். அங்கே கண்ணனின் மகள் சொன்னார், என்னுடைய அப்பா ஈழத்தில் ஒரு “லெஜண்ட்” என்று. உண்மை. ஈழப் போர்க் காலப் பாடல்களைப் பொறுத்தவரை கண்ணன் மாஸ்டர் ஒரு லெஜன்ட் தான். ஆனாலும் சரிகமப மேடையில் இருந்த நடுவர்களில் எத்தனை பேருக்கு அவரைத் தெரிந்திருந்தது ?

ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் எந்தளவுக்கு தமிழகத்தின் வெகு சனப் பரப்பைச் சென்றடைந்திருந்தன? தமிழகத்தின் சினிமா இசைப் பிரம்மாண்டத்தின் முன் ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் ஜனவசியம் குறைந்தவையா?

ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவை பரவலாகக் கொண்டாடப்பட்டன. தாயகத்தை விட்டுப்பிரிந்த ஏக்கத்தோடு தவித்த முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகளின் திரும்பக் கிடைக்காத இறந்த காலம் ஒன்றின் மங்காத நினைவுகளை போர்ப் பாடல்கள் இரைமீட்டன. இதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் செல்லப்பாவைக் கொண்டாடினார்கள்; போஷித்தார்கள் .

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய சுந்தரராமசாமி புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில்தான் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களைக் கேட்டிருக்கிறார். அந்தப் பாடல்களை அவர் பாராட்டி எழுதியிருக்கிறார்.“காற்றில் கலந்த பேரோசை” என்ற அவருடைய கட்டுரைகளின் தொகுப்பில் இந்த விடயம் உண்டு.

இலங்கையில் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களில் பலவற்றுக்குச் சட்டரீதியான தடை உண்டு. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அந்தப் பாடல்கள் பரவலாகக் கேட்கப்படுகின்றன் இசைக்கப்படுகின்றன. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் நீண்ட பெருஞ் சாலைகளில், நீண்ட தூரப் பயணங்களில் அந்தப் பாடல்கள் ஒலிப்பதுண்டு. 2009 க்குப் பின் சீமானின் “நாம் தமிழர் கட்சி”யும் தமிழகத்தில் அந்தப் பாடல்களைக் கொண்டு செல்கிறது. அண்மை ஆண்டுகளில் தாயகத்திலும் இசை மேடைகளில் சில பாடல்களைக் கேட்க முடிகிறது.

ஈழத்துப் போர்க் காலப் பாடல்களின் முன்னோடிகளில் ஒருவராக செல்லப்பா காணப்படுகிறார். அவர் பெருமளவுக்கு மாற்று நீரோட்ட இசைப் பாரம்பரியத்துக்கு ஊடாக வந்தவர். சி.பா. ஆதித்தனாருடன் இணைத்து தமிழின உரிமைப் பாடல்களைப் பாடியவர். லாப நோக்கமுடைய வெகுசன சினிமா இசைப் பாரம்பரியத்திலிருந்து வந்தவரல்ல. அதனால்தான் அவர் ஈழப் போருக்கு நெருக்கமாக வந்தார். ஈழப் போராட்டம் பாடல்களைத் தயாரிக்கத் தொடங்கியபோது அதன் முதற் குரல்களில் ஒருவராக செல்லப்பாவும் இணைந்தார்.

ஈழத்துப் போர்க்கால பாடல்களில் காசி-செல்லப்பா இசைச் சோடி தனித்துவமானது; முக்கியமானது. காசியானந்தனின் பாடல் வரிகளை செல்லப்பாவின் இசையும் குரலும் சேர்ந்து தூக்கின. பின்னர் புதுவை-கண்ணன் என்று மற்றொரு இசைச் சோடி தோன்றியது. ஈழத்துப் போர்க் காலப் பாடல்கள் ஒரு கட்டத்தில் செல்லப்பாவைக் கடந்து புதிய இசையமைப்பாளர்களையும் புதிய பாடகர்களையும் உற்பத்தி செய்தன. ஆனால் நெருக்கடியான ஒரு தொடக்க காலகட்டத்தில் கேட்ட குரல் என்ற காரணத்தால் செல்லப்பாவின் குரல் ஈழத்தமிழர்களின் நினைவுகளுக்கு அன்னியோன்யமாகி விட்டது.

வணிக நோக்கிலான சோடினைகள் இல்லாத, கிராமத்து எளிமையும் அப்பாவித்தனமும் தொன்மையும் கலந்த அடர்த்தியான குரல். சிக்கலான இசைக்கருவிகளை பயன்படுத்தாமல் மிகக் குறைந்த இசைக்கருவிகளோடு உருவாக்கப்பட்ட எளிமையான பாடல்கள் .இவைதான் செல்லப்பா.

செல்லப்பா நவீன காலத்தில் ஈழ-தமிழக பிணைப்பில் ஒரு தனி அத்தியாயம். போர்க்காலத்தின் நினைவுகளோடு பிரிக்கப்பட வியலாதபடி பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு தமிழகக் குரல் அது.

நன்றி: நிலாந்தன்

சிட்னித் தமிழர் சமூகத்தின் குரல்: அவுஸ்திரேலியத் தமிழ் ஊடகப் பரப்பில் ATBC தமிழ் வானொலியின் சேவை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

11.05.2026

கடந்த 24 ஆண்டுகளாக அவுஸ்திரேலியத் தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் (ATBC) தமிழ் வானொலி சிட்னியில் வாழும் தமிழர் சமூகத்தின் குரலாகத் திகழும் முக்கியமான ஊடகங்களில் ஒன்றாகும். புலம்பெயர் தமிழர்களின் மொழி, கலாசாரம், சமூக ஒற்றுமை மற்றும் தகவல் பரிமாற்றத் தேவைகளை பூர்த்தி செய்வதில் இந்த வானொலி குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது. குறிப்பாக புதிய தலைமுறைக்கு தமிழ்மொழி மற்றும் தமிழர் அடையாளத்தை அறிமுகப்படுத்தும் பணியிலும், சமூக சேவையை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகளிலும் ATBC தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியத் தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன வானொலியானது அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரே ஒரு இருபத்திநான்கு மணிநேர இலாப நோக்கற்ற சமூகவானொலியாகும். அவுஸ்திரேலியாவின் இரு முக்கிய நகரங்களான சிட்னி, மெல்போர்ன் ஆகிய நகரங்களில் இருந்து ஒலிபரப்புக்கள் நடத்தப்படுகின்றன. அத்துடன் ATBCயின் தயாரிப்பு, வழங்கல் மற்றும் செயல்பாடுகளில் 80க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர்.

அவுஸ்திரேலியத் தமிழ் சமூகத்தின் குரலாக, உலகளாவிய ரீதியில் பரந்து ஒலிக்கும் ATBC வானலி கடந்த 24 வருடங்களாக இயங்கி வருகின்றது. நம்பகமான தகவல்களை தமிழில் வழங்குவதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. அத்துடன் உலகத் தமிழர்களை இணைக்கும் பாலமாக ATBC உள்ளது. குறிப்பாக குடியேற்ற வாழ்க்கையில் மொழித் தடைகளை எதிர்கொள்ளும் முதியோர் மற்றும் புதிய குடியேற்றக் குடும்பங்களுக்கு ATBC ஒரு தகவல் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

அவுஸ்திரேலியத் தமிழ் வானொலிகளும் ஊடகச் சேவையும்

சிட்னியில் 2002 மே மாதம் 15ம் நாள் தொடங்கிய சமூக வானொலி இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் சேவை யாற்றி வருகின்றது. அவுஸ்திரேலியாவில் நீண்டகாலமாக வாழும் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியோடு, தமிழ் ஊடகங்களும் வலுவான சமூகத் தளமாக உருவெடுத்துள்ளன. குறிப்பாக தமிழ் வானொலிகள், இணைய ஊடகங்கள், சமூக ஊடக தளங்கள் மற்றும் தொலைக்காட்சி சேவைகள், வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் மொழி, கலாசாரம், அரசியல் விழிப்புணர்வு மற்றும் சமூக உறவுகளை பாதுகாக்கும் முக்கிய கருவிகளாக அமைந்துள்ளன.

இலங்கை உள்நாட்டு போருக்குப் பின்னரும், ஈழத் தமிழர்களின் குடியேற்ற வளர்ச்சியுடனும், அவுஸ்திரேலியாவில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. இதன் விளைவாக, தமிழ் மொழியில் தகவல் பரிமாற்றம் செய்யும் ஊடகங்களின் தேவை அதிகரித்தது. இந்தத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல தமிழ் வானொலிகளும் ஊடக நிறுவனங்களும் தோன்றின.

தமிழ் வானொலிகள், அவுஸ்திரேலிய தமிழர்களின் அன்றாட வாழ்வில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. செய்திகள், அரசியல் விவாதங்கள், இலக்கிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், மத உரைகள், இளைஞர் நிகழ்ச்சிகள் போன்றவை மக்களை ஒன்றிணைக்கும் பணியைச் செய்கின்றன. குறிப்பாக வார இறுதி நிகழ்ச்சிகள், தமிழ் குடும்பங்களின் கலாசார இணைப்பை வலுப்படுத்துகின்றன. புதிய குடியேற்றவாசிகளுக்கு சட்டம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குடியுரிமை தொடர்பான தகவல்களையும் இவ்வானொலிகள் வழங்குகின்றன.

சிட்னி தமிழர் சமூகத்தில் தகவல் பரிமாற்றம், கலாசார நிகழ்வுகள், கல்வி விழிப்புணர்வு, குடியேற்ற ஆலோசனைகள், இளைஞர் திறன் மேம்பாடு, பெண்கள் பங்குபற்றல் போன்ற பல துறைகளில் ATBC தமிழ் வானொலி சமூகப் பாலமாக செயல்படுகிறது. பண்டிகைகள், நினைவேந்தல்கள், இலக்கிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமூக உரையாடல்களை ஒலிபரப்புவதன் மூலம் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை இணைக்கும் பணியையும் அது மேற்கொள்கிறது.

மேலும், அவசரநிலைகள் அல்லது சமூக சவால்கள் உருவாகும் காலங்களில், நம்பகமான தகவல்களை தமிழில் வழங்குவதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. குறிப்பாக குடியேற்ற வாழ்க்கையில் மொழித் தடைகளை எதிர்கொள்ளும் முதியோர் மற்றும் புதிய குடியேற்றக் குடும்பங்களுக்கு ATBC ஒரு தகவல் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் செயல்படும் சில தமிழ் ஊடகங்கள், தமிழர்களின் அரசியல் மற்றும் மனித உரிமை விவகாரங்களையும் தொடர்ந்து எடுத்துரைக்கின்றன. ஈழத் தமிழர் பிரச்சினை, அகதி உரிமைகள், இனஅடக்குமுறைகள் போன்ற விடயங்கள் பல ஊடகங்களில் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் தமிழ் ஊடகங்கள் வெறும் பொழுதுபோக்கு கருவிகளாக அல்லாமல், சமூக நீதிக்கான குரல்களாகவும் மாறியுள்ளன.

இணைய தொழில்நுட்ப வளர்ச்சி

இணைய தொழில்நுட்ப வளர்ச்சி தமிழ் ஊடக சேவைகளுக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. முன்பு FM அல்லது AM அலைவரிசைகளில் மட்டுமே கேட்ட வானொலிகள், இப்போது இணைய நேரலை, YouTube, Facebook, Podcast போன்ற தளங்களின் மூலம் உலகம் முழுவதும் சென்றடைகின்றன. இதனால் அவுஸ்திரேலியத் தமிழ் ஊடகங்கள், உலகத் தமிழர்களுடனும் உறவை உருவாக்கியுள்ளன.

புதுயுகத்தில் இளைஞர் தலைமுறையினரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியை முழுமையாகப் பேசாத இரண்டாம் தலைமுறை தமிழர்களுக்காக இருமொழி நிகழ்ச்சிகள், சமூக விவாதங்கள், தொழில்நுட்ப நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன. இது தமிழ் அடையாளத்தைப் பாதுகாக்கும் ஒரு புதிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், தமிழ் ஊடகங்கள் பல சவால்களையும் எதிர்கொள்கின்றன. நிதி பற்றாக்குறை, விளம்பர வருமானக் குறைவு, தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் இளைஞர்களின் ஊடகப் பழக்க மாற்றங்கள் போன்றவை அவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றன. இருப்பினும் சமூக ஆதரவு மற்றும் தன்னார்வப் பணியாளர்களின் பங்களிப்பால் இவ்வூடகங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

சமூக அரசியல் விழிப்புணர்வு

எவ்வாறான நெருக்கடிகள் இருப்புனும் அவுஸ்திரேலியத் தமிழ் வானொலிகளும் ஊடக சேவைகளும் வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் மொழி, கலாசாரம், சமூக ஒற்றுமை மற்றும் அரசியல் விழிப்புணர்வை பாதுகாக்கும் முக்கிய தளங்களாக உள்ளன. அவை தமிழர் அடையாளத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பாலமாகவும் செயல்படுகின்றன. எதிர்காலத்தில் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து, இவ்வூடகங்கள் இன்னும் வலுவான உலகத் தமிழ் தகவல் வலையமைப்பாக வளரக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது.

சிட்னியில் ATBC இன் ஊடக சேவை என்பது வெறும் செய்தி பரிமாற்றம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் நினைவகம், உணர்வு, அடையாளம் மற்றும் கலாசாரப் பாதுகாப்பின் அடித்தளமாகவும் உள்ளது. இவ்வகையில் ATBC தமிழ் வானொலி போன்ற ஊடகங்கள் புலம்பெயர் தமிழர் வாழ்க்கையில் முக்கியமான சமூக நிறுவனங்களாக உருவெடுத்துள்ளன. இன்றைய டிஜிட்டல் யுகத்தில் சமூக ஊடகங்கள், இணைய வானொலி மற்றும் நேரலை நிகழ்ச்சிகள் வழியாக இளைஞர்களையும் உலகத் தமிழர்களையும் இணைக்கும் திறனும் ATBCக்கு உள்ளது. இதனால் சிட்னி தமிழர் சமூகத்தின் குரல் உலகளாவிய பரப்பில் ஒலிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள்
பெயர் சூட்டப்பட்ட நாள்
05.05.1976
தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of
TAMIL EELAM
50
05.05.1976 - 05.05.2026